அகிலன்

சு. வேங்கடராமன்



இந்திய
இலக்கியச்
சிற்பிகள்

அகிலன்

உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில் பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்தரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச்சிற்பம் கி.பி. இரண்டம் நூற்றாண்டு.
பட உதவி : நேஷனல் மியூசியம், புது தில்லி)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

அகிலன்

சு.வேங்கடராமன்

சாகித்திய அக்காதெமி

Akilon - Monograph in Tamil by S.Venkataraman,
Sahitya Akademi, New Delhi, 2000, Rs.25.

முதல் வெளியீடு 2000
ISBN 81-260-0830-X

சாகித்திய அக்காதெமி

தலைமை அலுவலகம் :
ரவீந்திர பவன், 35, பெரோஸ்ஷா சாலை,
புது தில்லி 110 001.

விற்பனை

'ஸ்வாதி' மந்திர் சாலை, புது தில்லி 110 001.

மத்தியக் கல்லூரி வளாகம், பல்கலைக்கழக நூலகக் கட்டிடம்,
டாக்டர் அம்பேத்கார் வீதி, பெங்களூர் 560 001.

'குணா பில்டிங்' 304-305, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை 600 018.

ஜீவன் தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட்ஹார்பர் சாலை, கல்கத்தா 700 053.

172, மும்பய் மராத்தி கிரந்த சங்கிரகாலய சாலை,
தாதர், மும்பய் 400 014.

விலை : ரூ.25

Laser Typeset : **Muraa International, Chennai - 80.**
Printed at : Nagarjun Printers, Chennai - 21.

பொருளடக்கம்

முன்னுரை

புதுதில்லியிலுள்ள சாகித்திய அக்காதெமி நிறுவனம் பணித்தபடி, இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் எழுதப்பட்டுள்ள இந்தநூல், அகிலனின் படைப்புப் பணிகளையும் அவருடைய வாழ்க்கை வரலாற்றையும் எடுத்துக்கூறுகிறது. அவரை அறிந்துகொள்ளவும் அவருடைய படைப்புக்களைச் சுவைத்துப் படிக்கவும் தூண்டுகோலாக அமையுமாறு இந்த நூல் எழுதப்பட்டுள்ளது. சிறுகதை, நாவல், நாடகம், சிறுவர் இலக்கியம், மொழிபெயர்ப்பு, கட்டுரை, பயண இலக்கியம், திறனாய்வு, தன்முன்னேற்றச் சிந்தனை நூல் என்று பல்வேறு துறைகளில் அகிலன் நூல்களைப் படைத்துள்ளார்.

அத்தகைய பன்முகவீச்சுடைய படைப்பாளரின் பணிகளை முழுமையாக அனைத்து நிலைகளிலும் இந்த நூலில் மதிப்பிட்டுவிட முடியாது. இளம்வயதில், பள்ளிப்பருவ நாட்களில் இந்திய விடுதலைப்போராட்ட நிகழ்ச்சிகளில் ஈடுபட்டவர் அவர். காந்திய நெறியில் ஆழ்ந்த பிடிப்பும் ஈடுபாடும் கொண்டவர் அவர். காந்தியக் கொள்கைகளைத் தம் படைப்புகளில் வலியுறுத்திய அகிலன், போலியான காந்தியவாதிகளை விமர்சனம் செய்து நாவல், சிறுகதைகளைப் படைத்தார். மனிதகுலமேன்மை, சமூகமாற்றம், பெண் விடுதலை ஆகியவற்றைத் தம் படைப்புக்களில் வலியுறுத்தி எழுதினார். நாடும், மனித சமூகமும் இப்போதுள்ளதை விடவும் இன்னும் மேன்மைநிலை அடையவேண்டும் என்பதை அடிப்படைச் செய்தியாகத் தம் படைப்புக்களில் அவர் வெளியிட்டார். தன் வாழ்க்கை வரலாற்று நாவல் (autobiographical novel) ('பாவை விளக்கு'), தன்னுடைய வாழ்க்கை அனுபவங்கள் எவ்வாறு தம் படைப்புக்களில் வெளிப்பட்டன என்பதை விளக்கும் கட்டுரை நூல் ('எழுத்தும் வாழ்க்கையும்'); தன்முன்னேற்றச் சிந்தனை நூல் ('வெற்றியின் ரகசியங்கள்,'), அரசியல் விமர்சன நாவல் ('எங்கே போகிறோம்') ஆகிய புதிய சோதனை முயற்சிகளைத் தமிழ்ப் படைப்புலகில் அவர் முதன்முதலாக மேற்கொண்டார். புனைகதைகளை மிகுந்த சமுதாய உணர்வுடனும் கலைத்தன்மையுடனும் படைத்த அகிலனை இந்திய இலக்கியச்

சிற்பிகள் வரிசையில் ஒருவராக அறிமுகப்படுத்தும் முறையில் இந்த நூல் எழுதப்பட்டுள்ளது.

தீமையை எதிர்த்துப் போராடவேண்டும் என்பதை மையச் செய்தியாக அகிலன் படைப்புக்களில் காணலாம். மனிதகுல முன்னேற்றம், சமூகமாற்றம் என்பவை அவருடைய படைப்புக் களில் அடிநாதமாக ஒலிக்கின்றன. அத்தகைய அடிப்படைச் சிந்தனைகளை உடைய அகிலனை அவருடைய படைப்புக்கள் வழியாகத் தேசிய அளவில், பிற இந்திய மொழி இலக்கிய ஆர்வலர்களும் பொதுமக்களும் புரிந்து கொள்ளும் வண்ணம் அறிமுக நிலையில் இச்சிறுநூலை எழுதும் வாய்ப்பை நல்கிய சாகித்திய அக்காதெமி நிறுவனத்தாருக்கு என் மனமார்ந்த நன்றி.

இந்த நூலை எழுதும் வாய்ப்பை நான் பெறுவதற்கு முதன்மைக் காரணமாயிருந்த சகோதரர் **திரு. அகிலன் கண்ணன்** (சென்னை) அவர்களுக்கு என் மனப்பூர்வமான நன்றி என்றும் உரியது. அகிலன் படைப்புக்களில் எனக்கு ஈடுபாடு ஏற்படுவதற்கு என் மாணவப்பருவ நாட்களில் காரணமாக இருந்தவரும் என் வளர்ச்சியில் ஆழ்ந்த ஈடுபாடு உடையவருமான சகோதரர் **திரு.வெ.ப. சண்முகசுந்தரம்** அவர்களுக்கு என் மனப்பூர்வமான நன்றி.

மதுரை.
28.06.1998 **க. வேங்கடராமன்**

இயல் – 1

1. வாழ்க்கைச் சித்திரம்

முன்னுரை: *தமிழ் மொழியிலும் பிற இந்தியமொழிகளைப் போலவே, ஐரோப்பியரின் வரவால் ஏற்பட்ட சமூக, பண்பாட்டு மாற்றத்தின் காரணமாக உரைநடையில், நாவல், சிறுகதை ஆகிய புனைகதை வடிவங்கள் புதிய இலக்கிய வகைகளாக உருவாகின. மாயூரம் வேதநாயகம்பிள்ளை எழுதிய 'பிரதாப முதலியார் சரித்திரம்' நாவல் 1879 இல் வெளியானது. இதுதான் தமிழின் முதல் நாவல். தமிழின் சிறுகதை வரலாறு மகாகவி பாரதியாரிடமிருந்து தொடங்குகிறது. 1905 ஆம் ஆண்டு 'சக்ரவர்த்தினி' இதழில் அவர் எழுதிய 'துளசிபாயி சரித்திரம்' சிறுகதையும் பின்னர் அவர் எழுதிய 'ஆறில் ஒரு பங்கு' சிறுகதையும் தமிழின் முதல் சிறுகதை என்னும் மதிப்பைப் பெறுகின்றன. இவர்களின் முன்முயற்சிகளைத் தொடர்ந்து நாவல், சிறுகதை இலக்கிய வகைகள் பல்கின. தமிழ்ப்புனைகதை மரபில், உள்ளடக்கத்திற்கு முதன்மை தந்து, பொதுமக்கள் குரலாகப் படைப்பு அமையவேண்டும் என்ற ஒரு செல்நெறி உருவானது. பாரதியார், வ. ரா., அ. மாதவையா, கல்கி போன்றோர் இந்த நெறியினர். இவர்கள் நாவல், சிறுகதை எதுவாயினும் சமூகஉணர்வுடன் எழுதி, மனிதனையும் சமூகவாழ்வையும் மேம்படுத்துவதாக எழுத்து அமைய வேண்டும் என்னும் கலைக்கொள்கையுடன் எழுதினர். படைப்பிலக்கியத்தின் உள்ளடக்கமே முதன்மையானது; வெளிப்பட, வெடிப்புறப் பேசினாலும் பரவாயில்லை, புனைகதை இலக்கியம், வடிவச்செம்மை, செய்நேர்த்தி என்ற பெயரில், சமூக உணர்வின்றி, நடப்பியல் நெறியை மறந்துவிடக் கூடாது என்றனர். கலை அழகிற்காக உண்மையைப் புறக்கணிக்கவோ பலி கொடுக்கவோ கூடாது என்றனர். இவர்களின் இக்கலைக்கொள்கையின் விளைவாகத் தமிழ்ப் புனைகதைகள் காந்தியம், மார்க்சியம், பெரியாரியம், பெண்ணியம், தலித்தியம் என்று அரசியல்-சமூக இயக்கக்கொள்கைகளுடன் வெளிப்பட்டன. கதைகளின்*

உள்ளடக்கத்தில், இக்கொள்கைகள் முதன்மைப்படுத்தப் பட்டன.

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் இருந்தே காந்தியம் காலத்தால் முற்பட்ட, கொள்கையாகப் புனை கதைகளில் இடம் பெறலானது. கல்கியின் புனைகதைகளில் காந்தியம் மிகுதியும் பாடுபொருளானது. கல்கி காலத்திலே தம் எழுத்துப் பணியைத் தொடங்கிய அகிலன், இந்த மரபில் உள்ளடக்கத்திற்கு முதன்மை தந்து எழுதியவர். விடுதலைப் போராட்டகாலச்சூழலில், எழுதத் தொடங்கிய அகிலன், தம்முடைய இளம்பருவத்திலே நேரடியாக விடுதலைப் போராட்ட நிகழ்வுகள் பலவற்றைக் கண்டவர்; தாமே சில நிகழ்ச்சிகளில் பங்கு பெற்றவர். எனவே, அக்காலச் சூழல், காந்தியக் கொள்கைகளில் ஈடுபாட்டை அவருள் இளமை முதலே வளர்த்தது. காந்தியக் கலைக் கொள்கையான, 'ஆன்மாவின் வெளிப்பாடுதான் கலை. சத்தியத்தில் அழகைத்தேடிப் பார்' என்பதை ('எங்கே போகிறோம்?' நாவல், ப. 6, 7) அகிலன் தம் புனைகதைகளில் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்துகிறார். 'எளிய நடையில், சமுதாய நலனைக் காக்கும் வகையில் பொது மக்களுக்குப் பயன்தருவதாக அமையவேண்டும்' என்று காந்திய அழகியலை விளக்கும் முறையிலே அகிலன் தம் படைப்புக்களைத் தந்துள்ளார்.

மகாகவி பாரதியாரிடமிருந்தும் திரு.வி.க. விடமிருந்தும் இளமையிலே தாம் தாக்கம் பெற்றதாக அகிலன் கூறுகிறார். இத்தாக்கமும் அவருடைய புனைகதைப் படைப்பாக்க நெறியில் குறிப்பிடத்தக்கது. அகிலன் என்னும் புனைபெயரில் புனைகதை, கட்டுரைகள், நாடகம், சிறுவர் இலக்கியம், மொழிபெயர்ப்பு என்னும் பல்வேறு வகைகளில் அவர் எழுதினார். அவருடைய இயற்பெயர் பி.வி. அகிலாண்டம். அகிலன் என்பது எழுத்திற்காக அவர் வைத்துக்கொண்ட புனைபெயர். பி.வி. அகிலாண்டம் 1922ஆம் ஆண்டில், ஜூன் மாதம் 27ஆம் நாள், புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள பெருங்களூர் என்னும் கிராமத்தில் பிறந்தார். தஞ்சாவூர் - புதுக்கோட்டை நெடுஞ்சாலையில், புதுக்கோட்டையிலிருந்து 11 மைல் தொலைவில், பெருங்களூர் உள்ளது. அவருடைய பெற்றோர் ம. வைத்தியலிங்கம் பிள்ளை - அமிர்தம்மாள். அகிலனின் தந்தையார் அன்றைய புதுக்கோட்டை சமஸ்தானத்தில் காட்டிலாகா, வரிவசூல் துறை, கலால் துறை

ஆகியவைகளில் கிராம அதிகாரியாகப் பணிபுரிந்தார். ஆகவே புதுக்கோட்டை மன்னரிடமும் வெள்ளைக்கார அரசிடமும் மிகுந்த நன்றி பாராட்டி வந்தார், தந்தையார். பெருங்களூர் கிராமத்தில் இருந்த சிவன்கோயிலுக்குப் பரம்பரை பரம்பரையாக அவர்கள் குடும்பம் கணக்குப்பிள்ளை அலுவல் பார்த்து வந்தது. ஆகவே, ஊரில் மதிப்பும் மரியாதையும் மிக்க குடும்பமாக அவர்கள் குடும்பம் இருந்தது. புதுக்கோட்டை சமஸ்தானம், அங்கு ஆளும் வெள்ளையர் அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டு இருந்தது. அதனால், ஆங்கிலேயரை எதிர்க்கும் நாட்டுவிடுதலைப் போராட்ட எழுச்சி அங்கு காணப் படவில்லை.

அகிலனின் பள்ளிப்பருவ நாட்களில் பாரதி பாடல்களைப் பாடுவதற்குக்கூட அப்பகுதியில் தடையிருந்தது. இதற்கு நேர்மாறான சூழல், அகிலனின் தாய் ஊரான கரூரில் காணப்பட்டது. கட்டபொம்மன் தெருக்கூத்து, தேச உணர்வைத் தூண்டும் நாடகங்கள் என்பனவற்றுடன், தேசிய விடுதலைப் போராட்ட நிகழ்ச்சிகளும் நாள்தோறும் ஈரோடு, திருப்பூர், கரூர் போன்ற நகரங்களில் நடைபெற்றன. கே.பி. சுந்தராம்பாளின் தேசியப்பாடல்கள் நாள்தோறும் ஒலித்த சூழலில் அகிலன் வளர்ந்தார். அவருடைய தாய்மாமன் உள்ளிட்ட நெருங்கிய உறவினர்கள், விடுதலைப்போராட்டச் செயல்பாடுகளில் பங்கேற்றுக் காவலர்களின் துன்புறுத்தலுக்கு ஆளானார்கள். இந்தப்பின்னணியில், இளமை முதலே, விடுதலைப்போராட்ட உணர்வும், வெள்ளையர்களுக்கு அடிபணிந்து வாழும் சூழலும் கொண்ட இரண்டு ஊர்களில் மாறிமாறி அவருடைய குழந்தைப் பருவம் வளர்ந்தது.

அகிலனின் தந்தையார், நன்கு செல்வாக்குடன் பணிபுரிந்து வந்தார். அகிலனது இளமை வாழ்க்கை சில காலம் வரை நன்கு செல்வச் செழிப்பில் சென்றது. அகிலனுடன் உடன் பிறந்தவர் ஒரு தங்கை. குடும்பச் செல்வச்சூழல் காரணமாக, அகிலனை முதன்முதலாகப் பள்ளிக்கு அனுப்பும் செயல், திருவிழா போலக் கொண்டாடப்பட்டது. தம்முடைய மகனை இலண்டனுக்கு அனுப்பி ஐ.சி.எஸ்.படிக்க வைக்கவேண்டு மென்று தந்தை கனவு கண்டார். தந்தையின் இந்தக்கனவு 'பெண்' நாவலில் வெளிப்படுவதைக் காணலாம். சிறிது காலத்தில் குடும்பத்தில் வறுமை சூழ்ந்தது. அவருடைய வேலையில் வந்த வருவாய், கிராம வாழ்க்கையில் காணப்பட்ட

உறவுகளுக்கு இடையிலான புகைச்சல் போன்றவை காரண மாக, வேலையை இழக்கவும் வீட்டில் வறுமை ஏற்படவும் காரணமாயின. 'தம்முடைய பத்து வயதுக்குள்ளாகவே வறுமையின் கொடிய கரங்கள் தந்த கடுமையான துயரங்களைத் தாம் அனுபவித்ததாக' அகிலன் கூறுகிறார். அன்னையின் ஊரான கரூர் சென்று, அங்கு அன்னையின் உடல் உழைப்பால் கிடைத்த வருவாயின் மூலம் குடும்பம் நடந்தது.

கல்வி: தொடக்கத்தில் சில காலம் பெருங்களூரிலும், பின்னர் கரூரிலும், பின்னர் புதுக்கோட்டை மன்னர் பள்ளியிலும் அகிலன் கல்வி கற்றார். பள்ளியிறுதித் தேர்வு வரை கற்றுத் தேர்ச்சி பெற்றார். குடும்பச்சூழல் காரணமாகவும், விடுதலை இயக்க நாட்டம் காரணமாகவும், பள்ளியிறுதிப் படிப்புடன் கல்வியை அவர் முடித்துக்கொண்டார். அக்காலத்தில் பள்ளிகளில் ஆங்கிலவழிக் கல்வியே இருந்தது. இரண்டாவது மொழிப் பாடமாக தமிழ் இருந்தது. சார்லஸ் டிக்கன்ஸ், வாஷிங்க்டன் இர்வின், டி.எச். லாரன்ஸ், ஆலிவர் கோல்ட்ஸ்மித், வோர்ட்ஸ்வொர்த் போன்ற சமகால எழுத்தாளர்களின் படைப்புக்களை ஆங்கில வகுப்பில் கற்றார். ஆனால் அதே நேரத்தில் தமிழ்ப்பாடங்களில், சமகால இலக்கியத்திற்கு நிறைய வாய்ப்புக்கள் கொடுக்கப்படவில்லை. மேல் வகுப்பு வந்தபோதுதான் உரைநடையில் திரு.வி.க. வின் எழுத்துக்களில் சில பாடமாக இருந்தன. 'உயிர்த்துடிப்பும், உணர்ச்சியும், சிந்தனைத் தெளிவும்' திரு.வி.க.வின் எழுத்துக் களில் காணப்பட்டன. “திரு.வி.க. தம் எழுத்தால் என்னைச் சிந்திக்கத் தூண்டினார்; என்னை உணர்ச்சிவயப்படச் செய்தார். என் கற்பனையைத் தூண்டிவிட்டார்” என்று அகிலன் கூறுவது இதனைப் புலப்படுத்தும். ('எழுத்தும் வாழ்க்கையும்' ப.51) அந்தக் காலத்தில், புதுக்கோட்டை சமஸ்தானப் பகுதியில் பாரதியார் பாடல்களுக்குத் தடை இருந்தது. அன்றைய புதுக்கோட்டை மன்னர் வெள்ளைக்கார அரசுக்கு விசுவாசமாக இருந்ததால், விடுதலைப் போராட்டக் கவிதை உள்ளே நுழைவதற்குத் தடை இருந்தது. இந்தச் சூழலில் பள்ளி விடுதிக்கு வந்த நண்பரொருவர், அகிலனிடம் பாரதியார் கவிதைகளைக் கொடுத்தார். பாரதியின் கவிதை அன்று முதல் அவருள் தாக்கத்தை ஏற்படுத்தியது. தம் இளமைப் பருவத்தில் தனக்குப் புதுப்பார்வை அளித்தவர்களாகத் திரு.வி.க., பாரதி

ஆகிய இருவரையும் அகிலன் குறிப்பிடுகிறார். "என் காலத்து வாழ்க்கையை என் காலத்துக்கு ஏற்ற மொழியில் எவ்வளவு அற்புதமாகச் சித்திரிக்கிறார்கள் இந்த வித்தகர்கள்!" என்று அகிலன் தம்முடைய பள்ளிப்பருவ நாட்களில் தமக்கு ஏற்பட்ட அனுபவத்தைக் கூறுகிறார். ('எழுத்தும் வாழ்க்கையும்' ப. 74) எழுத்தில் உணர்ச்சி வேகம், கற்பனை, கருத்தில் தெளிவு, சமகால வாழ்க்கையை வெளிப்படுத்த ஏற்ற முறையில் மொழியை ஆளும் திறன் ஆகிய அனைத்தையும் பாரதி, திரு.வி.க. ஆகிய இருவரிடமிருந்து தாம் கற்றதாக அகிலன் இதில் கூறுகிறார். அகிலனின் படைப்புக்களில் இந்தத் தாக்கம் முழுமையாகக் காணப்படுகிறது. அத்துடன் 'நம்முடைய கல்வி முறையில், சமகால வாழ்க்கையை நாமறிந்த சமகால மொழியில் உயிர்த்துடிப்புடன் எடுத்துக்கூறும் படைப் பிலக்கியங்கள் கற்றுக் கொடுக்கப்படவேண்டும்' என்னும் கருத்தை அகிலன் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். இதற்கு, அவருடைய இளமைப்பருவப் பள்ளிக்கூடக் கல்வி அனுபவம் காரணமாக அமைந்தது. அறுபதுகளின் இறுதியிலிருந்து தமிழ்க் கல்வி முறையில் இந்த மாற்றம் மிக வேகமாக ஏற்பட்டது.

விடுதலைப்போராட்ட ஈடுபாடு: பள்ளிச் சிறுவனாக இருந்த காலத்திலே, தம்முடைய தாயின் ஊரான கரூரிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் நடைபெற்ற விடுதலைப் போராட்ட நிகழ்ச்சிகளை அவர் கண்டு வந்தார். அவருடைய உறவினர் சிலர், தம் வீடுகளில் தேசியக் கொடியை ஏற்றி, அதனால் காவலர்களின் அடக்குமுறைகளுக்கு ஆளானதை நேரில் பார்த்தார். காவலர்கள், அடித்துத் துன்புறுத்தி, ஊர்திகளில் ஏற்றிச்சென்று, நெடுந்தொலைவுக்கப்பால் இறக்கிவிட்டுச் சென்று விடுவர். விடுதலைப்போரில் ஈடுபட்ட தேசியவாதிகளை இவ்வாறு தண்டிக்கும் முறையை 'மங்கிய நிலவு' ('இன்ப நினைவு' எனும் பெயரில் பின்னர் வெளிவந்த நாவல்) என்னும் தனது முதல் நாவலில் (1944) இராமநாதன் என்னும் விடுதலைப் போராட்ட வீரனான கதைத் தலைவன் படைப்பில் காட்டுகிறார்.

கரூருக்கு அருகில் திருஆநிலையூர் என்னும் சிற்றூரில் கள்ளுக்கடை மறியலில், இளமைப்பருவத்தில் அகிலன் நேரடியாக ஈடுபட்டார். புதுக்கோட்டையில் பள்ளி விடுதியில் இருந்தபோது 'சக்தி வாலிபர் கழகம்' என்னும் அமைப்பை

உருவாக்கிச் சில நண்பர்களுடன் சேர்ந்து தடையை மீறி மேடைகளில் பாரதியார் பாடல்களைப் பாடினார். 1941-இல் புதுக்கோட்டை சமஸ்தானத்தில், திவான் முன்னிலையில் மேடையில் பாரதி பாடல்களைப் பாடியதும், பள்ளி மாணவர்களுடன் நகரில் ஊர்வலம் சென்றதும் சின்னஞ்சிறு நிகழ்வுகள்தான். ஆனாலும் தேசிய உணர்ச்சியே எழமுடியாதவாறு, பாரதி பாடல்களைத் தடை செய்திருந்த சமஸ்தானத்தில் அதைப் பாடவும், விடுதலைப் போருக்கு ஆதரவாக முழக்கமிடவும், ஊர்வலம் செல்லவும் இளைஞர்கள் துணிந்தது சாதனைதான். பள்ளிச் சிறுவனாக இருந்தபோது 1934-இல் காந்தியடிகள், கரூருக்கு வந்தபோது, அவரைப் பார்த்ததையும், உணர்ச்சிமிக்க அவரது உரையைக் கேட்டதையும் பிற்காலத்தில் அகிலன் நினைவு கூர்ந்து எழுதினார். பள்ளிக்கூட நாட்களில் விடுதலைப்போராட்டம், பாரதியார் பாடல்கள், காந்தியின் தரிசனம் என்பன அவருள் ஆழமாகப் பதிந்தன.இந்தப் பாதிப்புதான், தேசியம், காந்தியம், வறுமையை எதிர்த்துக் குரல் எழுப்புவது, சமூகவிடுதலை, பெண் விடுதலை என்னும் பல்வேறு கருத்தாக்கங்களை அகிலனிடம் ஏற்படுத்தியது. தம்முடைய சொந்த வாழ்க்கை அனுபவங்களும், புறஉலகச் சூழலும் ஒன்றிணைந்து அவருள் எழுதவேண்டும் என்ற கனலைத் தூண்டின.

எழுத்து வாழ்க்கை: 1938ஆம் ஆண்டில், பள்ளியில் பத்தாவது வகுப்பு படிக்கும்போது, பள்ளிக்கூட காலாண்டு மலரில் அகிலனுடைய முதல் சிறுகதை வெளிவந்தது. 'அவன் ஏழை' என்ற பெயரில் சிறுகதை ஒன்றை எழுதி, அம்மலரில் வெளியிடுவதற்காகத் தம்முடைய ஆசிரியரிடம் கொடுத்தார். பள்ளித் தமிழாசிரியர், 'சொந்தமாக அந்தச் சிறுவனால் அதை எழுதியிருக்க முடியாது' என்று முதலில் கூறினாலும், கதை நன்கு அமைந்துள்ளதாக அதைப் பாராட்டியுள்ளார். ஆனால், கதையின் தலைப்பை மட்டும் 'மிடியால் மடிதல்' (மிடி-வறுமை; வறுமையால் இறத்தல் என்று பொருள்) என்று மாற்றி, அந்த மலரில் வெளியிட்டார். ஏழைச் சிறுவன் ஒருவன், தீபாவளி சமயத்தில் தன்னுடைய மூத்த சகோதரியிடமிருந்து, தனக்குப் புத்தாடை வரும் என்று எதிர்பார்த்துள்ளான். நேர்மாறாக, சகோதரி இறந்த செய்தி வர, உலகில் தனக்குப் பற்றுக்கோடாக இருந்த ஒருத்தியும் மறைந்து விட்டாள் என்ற துயரில், சிறுவன் பள்ளியின் அருகிலிருந்த ஏரியில் விழுந்து

இறக்கிறான். இதுதான் அந்தக் கதை. கதை மிகவும் சாதாரணமானதுதான். சின்னஞ்சிறிய மாணவனின் பார்வையிலிருந்து உணர்ச்சிகரமாகச் சொல்லப்பட்டுள்ள முறைதான் கதைக்குச் சிறப்புத் தந்தது. வறுமை காரணமாக, "நான் ஏழை, இவ்வுலகில் வாழுவதற்குத் தகுதியற்றவன்" என்னும் சிறுவனின் கூற்று கதையின் இறுதிப் பகுதியில் ('விடுதலை' ப.11) வருகிறது. வறுமை, பிஞ்சுள்ளத்தை எவ்வாறு பாதித்துள்ளது என்பதை இச்சிறுகதை முன் வைக்கிறது. நம்முடைய சமூக அமைப்பில் காணப்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வு, சிறுவனுக்கு வாழ்க்கையில் நம்பிக்கையை உருவாக்காத சூழலை கதை முன் வைக்கிறது. கதையின் இறுதியில், சிறுவனின் மறைவிற்குப் பிறகு, கரை ஓரமாக ஒரு பெரியவர், 'ஏழையென்றும், அடிமையென்றும் எவனுமில்லை' என்று பாரதியார் பாடலைப் பாடிச் செல்வதாக வருகிறது. ('விடுதலை', ப.11) பாரதியின் பாடல் வரி மூலம், பொருளாதார வேறுபாடும், சாதி வேறுபாடுமற்ற சமச்சீர்மையுள்ள சமூகம் உருவாகுமென்ற எதிர்பார்ப்பை அகிலன் தந்துள்ளார். வாழ்க்கை பற்றிய நம்பிக்கையை ஊட்டுவதாக அவருடைய படைப்புக்கள் அமையும் பாங்கை இது காட்டுகிறது.

பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு, புதுக்கோட்டையில் வாழ்ந்த காலத்தில் அப்பகுதியிலிருந்து வெளிவந்த 'இந்திரா', 'தாய்நாடு', 'அணிகலம்', 'இன்பம்' போன்ற இதழ்களில் அவருடைய சிறுகதைகள் வெளிவந்தன. தொடக்கத்தில், தம்முடைய இயற்பெயரிலே அவர் சிறுகதைகளை எழுதினார். அந்த நாட்களில் விடுதலைப் போராட்ட நிகழ்ச்சிகளை மையமிட்டு எழுதிய சிறுகதைகளை வெளியிட இதழ்கள் மறுத்தன என்று அகிலன் குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று அன்றைய சமூக, பொருளாதார முரண்பாடுகளை மையமிட்டு எழுதிய கதைகளையும் 1940-42 கால கட்டத்தில் வெளியான தமிழ் இதழ்கள் வெளியிட மறுத்தன என்றும் அவர் குறிப்பிடுகிறார். ('எழுத்தும் வாழ்க்கையும்' - 122-123). இந்தச் சூழலில், 'இன்பம்' என்னும் மாத இதழில் உதவி ஆசிரியராக அவர் பொறுப்பேற்றார். குடும்பத்தின் சூழல் அவர் எங்காவது பணிபுரியவேண்டிய நிலையில் இருந்தது. அந்த இதழின் போக்கு, விடுதலைப் போருக்கு எதிராக இருந்த நிலையைக் கண்ட அகிலன் மிக விரைவில் அப்பணியை விட்டு விலகினார்.

1940-ஆம் ஆண்டில் அவர் எழுதிய 'சாவிலே வாழ்வு'

என்னும் சிறுகதை 'இந்திரா' என்னும் இதழில் பரிசு பெற்று வெளிவந்தது. 1942 நடுப்பகுதியில் 'கல்கி' இதழில் 'சரசியின் ஜாதகம்' என்னும் சிறுகதை வெளிவந்தது. இச்சிறுகதை அவர் எழுதிய வடிவத்தில் அல்லாமல், ஆங்காங்கே திரித்து வெளியிடப்பட்டது. இந்தக் கதைக்கு, அக்காலத்தில் சன்மானமாகப் பணம் கொடுக்கப்பட்டது. இருந்தும், தன் கதையைத் தம்முடைய அனுமதியின்றி குறைத்து வெளியிட்டதை, இளம்படைப்பாளரான அகிலன் ஏற்றுக்கொள்ள வில்லை. தொடர்ந்து பல காலம் வரை அந்த இதழுக்கு எழுத அவர் மறுத்துவிட்டார். அதே ஆண்டில் கலைமகள் இதழில் 'காசுமரம்' என்னும் சிறுகதை வெளிவந்தது. குழந்தையின் உளவியல் அடிப்படையில் வெளியிடப்பட்ட இக்கதை அவருக்குப் பெரும் பாராட்டைப் பெற்றுத்தந்தது. இந்தக்கதை முதற்கொண்டு 'அகிலன்' என்ற புனைபெயரில் அவர் எழுதலானார். இந்தக் கதைக்குப் பணம் எதுவும் கிடைக்கவில்லை. ஆனாலும் கதை முழுமையாக, எந்தவிதமான மாற்றமுமின்றி வெளியிடப்பட்டது. இந்த எழுத்துச் சுதந்திரத்தை மிகவும் விரும்பிய அகிலன் தொடர்ந்து 'கலைமகள்' இதழுக்கு எழுதினார். ('கதைக் கலை' ப.18) சிறுகதை எழுத்தாளராக அறிமுகமாகி, தொடர்ந்து சில காலத்திற்குச் சிறுகதைகளை எழுதி வந்தார்.

பெருங்களூர் கிராமத்தில் பத்திரம் பதிவு செய்யும் அலுவலகத்தில் அகிலன் பணியாற்றினார். பின்னர் புதுக்கோட்டை, கீரனூர், பொன்னமராவதி ஆகிய ஊர்களில் பத்திரப்பதிவு, தாசில்தார், பொதுப்பணித்துறை ஆகிய அலுவலகங்களில் சில காலம் அவர் பணியாற்றினார். 1944ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தன்னுடைய ஒன்றுவிட்ட மாமன் மகளான பட்டம்மாளை அவர் மணந்தார். கரூரை அடுத்துள்ள தான்தோன்றி மலையில் திருமணம் நடந்தது. திருமணத்தில், பிடிவாதமாக இருந்து அவர் கதராடை உடுத்தினார். சில மாதங்களில் மத்திய அரசின் அஞ்சல் துறையில் அவருக்கு வேலை கிடைத்தது. திருநெல்வேலியில், அப்பணிக்காக அவர் பயிற்சி பெற்றார். பயிற்சி முடிந்ததும் தென்காசியிலுள்ள அலுவலகத்தில் அவர் பொறுப்பேற்றார். அலுவலகம் தென்காசியில் இருந்தாலும், வடக்கே விருதுநகர் வரையிலும், ஓடும் புகைவண்டியில் செல்லும் அஞ்சலகப்பிரிவில் பணியாற்றும் பொறுப்பு அவருக்கு வந்தது.

எழுத்து வாழ்க்கை : இயல்பாகவே வாழ்க்கையையும், தன்னைச் சுற்றியுள்ள மனிதர்களையும் கூர்ந்து நோக்கும் திறன் அகிலனிடம் இருந்தது. அவருடைய சொந்த ஊரான பெருங்களூர் இயற்கை வளம் நிறைந்த, கலைகளை விளைவிக்கும் பூமியாக இருந்தது. அந்தக் கிராமத்து சிவன்கோவில் திருவிழாக்களும், அங்குள்ள தாமரைக் குளமும் அவருள் கற்பனையை வளர்த்தன. இந்தத் தாமரைக்குளம் பின்னணிதான் 'மங்கிய நிலவு' நாவலில் இராமநாதனின் காதல் வாழ்க்கையில் இடம் பெறுகிறது. தாமரைக்குளமும், சிவன்கோவில் விழாவும், ஆடற்கலையும் 'பாவை விளக்கு' நாவலில் தணிகாசலம்-செங்கமலம் காதலில் பின்னணியாக அமைகின்றன. இயல்பாகவே இயற்கையைச் சுவைக்கும் கலைமனமுடைய அகிலனுக்குத் தென்காசி, குற்றாலம், செங்கோட்டை, புனலூர், திருவனந்தபுரம் பகுதி இயற்கைச் சூழல் நல்ல கற்பனையை வளர்த்தது. இதன் விளைவாக, ஓடும் புகைவண்டியில் பணியாற்றிவிட்டு வந்த சில ஓய்வு நாட்களில் சிறுகதை எழுதினார். 'மேகசஞ்சாரம்', 'துணைவி', 'தணியுமா?', 'ஏன்', 'நிலவினிலே' ஆகிய சிறுகதைகளை இக்காலத்தில் தான் எழுதினார்.

1944-ஆம் ஆண்டு 'மங்கிய நிலவு' என்னும் பெயரில் சிறிய நாவல் ஒன்றை அவர் எழுதினார். அதே ஆண்டு புதுக்கோட்டையிலிருந்து அது வெளிவந்தது. நாட்டு விடுதலையில் நாட்டம் கொண்ட இராமநாதனிடம், அறியாப் பருவத்தில் அன்பு செலுத்தி காதலை ஏற்படுத்தி, கற்பனைகளை வளர்த்த பெண், மங்கிய நிலவாக எப்படி மாறினாள் என்பதை இந்த முதல் நாவல் விளக்குகிறது. 1949 ஆம் ஆண்டு, சிற்சில மாற்றங்களுடன் 'இன்ப நினைவு' என்னும் பெயரில் இது வெளி வந்தது. 1945ஆம் ஆண்டு 'கலைமகள்' இதழ் முதன் முதலாக நாவல் போட்டி ஒன்றை நாராயணசாமி ஐயர் நினைவாக அறிவித்தது. தென்காசியில் பணியாற்றி வந்த அகிலன் 'பெண்' என்ற பெயரில் நாவல் ஒன்றை எழுதி அனுப்பினார். 1946ஆம் ஆண்டு, 'பெண்' முதல் பரிசு பெற்றதைக் 'கலைமகள்' அறிவித்தது. அதே ஆண்டு ஜூலை முதல் டிசம்பர் முடிய கலைமகளில் தொடர்கதையாக அது வெளிவந்தது. 1947-இல் கலைமகள் பதிப்பகம் அதை நூலாகவும் வெளியிட்டது. நாட்டு விடுதலைப் போராட்ட சூழ்நிலையைப் பின்னணியாகக் கொண்டு இந்த நாவல்

வெளிவந்தது. அந்தக் காலத்தில் பிள்ளைகளை லண்டனுக்கு அனுப்பி ஐ.சி.எஸ். படிக்க வைத்து உயர் பதவிகளில் அமர்த்தவேண்டும் என்னும் மத்தியதரக் குடும்பத் தந்தையின் கனவை இந்த நாவலில் காணலாம். ஐ.சி.எஸ். பட்டத்தைத் துறந்துவிட்டு, சந்தானம், விடுதலைப்போரில் ஈடுபட்டுச் சிறை செல்லுகிறான். அவனுடைய மனைவி வத்சலா, மனம்மாறி இறுதியில் அவனை ஏற்றுக்கொள்ளுகிறாள். இந்த நாவலின் மையக்கதைப் பின்னணி மட்டுமின்றி, துணைக்கதையிலும், கள்ளுக்கடை மறியல், சிறைசெல்லல் போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெற்றுள்ளன. "இந்தக்கதையில் என் தந்தை நான் ஐ.சி.எஸ். படிக்கவேண்டுமென்று கண்ட கனவும், அதைச் சிறு பிராயத்திலே எதிர்த்த என் மனப்போக்கும், சந்தானம் பாத்திரப்படைப்பின் வாயிலாக வெளியாகின்றன", என்னும் அகிலனின் கூற்று இதை உணர்த்தும் ('பெண் ப. 5) விடுதலைப் போராட்டம் உச்சகட்டத்தில் இருந்தபோது இந்த நாவல் வெளிவந்தது. தமிழ் இலக்கியச் சூழலில், மணிக்கொடி இலக்கிய இதழ் வாயிலாகச் சிறுகதைகளில் சோதனை முயற்சிகள் நடந்த காலகட்டத்தில், நாவல் மிகவும் குறைவாகவே வெளிவந்தது. கல்கியின் சில நாவல்கள் மட்டும் வெளிவந்த அன்றைய சூழலில், இந்த நாவல் போட்டியும் அதன் விளைவான 'பெண்' நாவலின் வருகையும் பலருடைய கவனத்தையும் ஈர்த்தன. கதை சொல்லும் முறை, விடுதலைப் போராட்டப் பின்னணி, பாத்திரப்படைப்பு என்பன பெண் நாவலில் அழுத்தமாக வெளிப்பட்டுள்ளன. சீமைக்கொன்றைச் செடியையும், மலரையும் குறியீடாக இந்த நாவலில் அகிலன் பயன்படுத்துகின்றார். இந்த உத்தி அவருடைய படைப்புக் களில் தொடர்ந்து காணப்படுவதைப் 'பாவை விளக்கு,' 'பொன்மலர்,' 'சித்திரப் பாவை' போன்ற நாவல்களிலும் 'மகிழம்பூ,' 'மனோரஞ்சிதம்,' போன்ற சிறுகதைகளிலும் காணலாம்.

1946 ஆம் ஆண்டில் 'சக்திவேல்' என்ற முதல் சிறுகதைத் தொகுப்பு வெளிவந்தது. இருபத்திரண்டு கதைகள் அதில் உள்ளன. "1941ஆம் ஆண்டிலிருந்து 1945ஆம் ஆண்டு வரையில் நான் எழுதத் தொடங்கிய காலத்தில் எழுதிய சிறுகதைகள் இவை" ('சக்திவேல்' ப. 5) என்று அகிலன் முன்னுரையில் கூறுகிறார். தொடர்ந்து அவருடைய நாவல்களும் சிறுகதைத் தொகுப்புக்களும் அடுத்தடுத்து வெளிவந்தன. ஓடும்

புகைவண்டியில், சில நாட்கள் தொடர்ந்து பணியாற்றிவிட்டு வந்து, அடுத்து வரும் சில ஓய்வு நாட்களில் தொடர்ந்து அவர் எழுதினார். இதனால் உடல் நலம் கெட்டது. டைப்பாயிடு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட போதும், முழு ஓய்வு வேண்டுமென்ற மருத்துவர் சொல்லையும் மீறி அவர் எழுதினார். மருத்துவரின் வருகையைக் கூற, மனைவியை வாசலில் காவல் வைத்துவிட்டு, 'கலைமகள்' இதழுக்கு 'நெஞ்சின் அலைகள்' தொடர்கதையை எழுதினார். எழுத்தில் அவருக்கிருந்த ஈடுபாட்டை இது காட்டும். இந்த நிகழ்ச்சி சில மாற்றங்களுடன் 'பாவை விளக்கு' நாவலில் தணிகாசலம் - கௌரி படைப்பில் இடம்பெற்றுள்ளது. திருச்சியில் குடும்பத்தை வைத்துக் கொண்டு அவர் தம்முடைய அலுவலக, எழுத்துப் பணிகளைப் பார்த்து வந்தார். எழுத்துலகில் அவருக்கிருந்த வரவேற்பும், தொடர்ந்து வெளிவந்த படைப்புக்களும் அவரை அதிகம் எழுதச்செய்தன. எழுத்துப்பணியும், அலுவலகப் பணியும் இயைந்து நடைபெற இயலாது போனது. 1958ஆம் ஆண்டில் அலுவலகப்பணியை உதறிவிட்டு முழுநேர எழுத்தாளரானார். ஏழாண்டுகள் அவர் முழுநேர எழுத்தாளராக இருந்தார். இலட்சியபூர்வமான இலக்கிய வாழ்வு, பொருளாதாரத் தேவைகளால் பாதிக்கப்படுவதை அவர் அனுபவப்பூர்வமாக உணர்ந்தார். 1966ஆம் ஆண்டில், அகில இந்திய வானொலியில், சென்னை நிலையத்தில், சொற்பொழிவுத்துறை அமைப்பாளராகப் பணிபுரியும் பொறுப்பை ஏற்றார்.

அகிலன் சிறுகதை எழுத்தாளராகவே அறிமுகமாகி, சில ஆண்டுகள் சென்றபின்னர் நாவலாசிரியராகவும் பரிணமித்தார். நாவல், சிறுகதை ஆகிய இரண்டு இலக்கிய வகைகளிலும் தடம்பதித்துப் புகழ்பெற்ற ஒருசில படைப்பாளர்களுள் அகிலன் ஒருவர். அவர் 17 சிறுகதைத் தொகுப்புக்களையும் (மொத்தச் சிறுகதைகள் - 200), 19 நாவல்களையும் (சமூக நாவல்கள் 16; வரலாற்று நாவல்கள் - 3) படைத்துள்ளார். இவைகளுடன் சிறுவர் இலக்கியம் (4 நூல்கள்), நாடகம் (1), மொழிபெயர்ப்பு (3 நூல்கள்) கட்டுரை நூல்கள் (7) ஆகியவைகளையும் அகிலன் படைத்துள்ளார். நூல்வடிவம் பெறாத கட்டுரைகள் 70 உள்ளன.

அவர் தம்முடைய படைப்புகளுக்காகப் பல்வேறு பரிசுகளை அனைத்திந்திய அளவிலும் தமிழக அளவிலும்

பெற்றுள்ளார். 'சித்திரப்பாவை' நாவலுக்காக, 1975ஆம் ஆண்டில் பாரதீய ஞானபீடப் பரிசைப் பெற்றார். இந்தியாவில் மிக உயர்ந்த இலக்கியப் பரிசான ஞானபீடப் பரிசை இன்று வரை ஒரேமுறைதான் தமிழ் பெற்றது. அது அவருடைய 'சித்திரப் பாவை' சமூக நாவல் மூலம் கிடைத்தது. 'வேங்கையின் மைந்தன்' என்னும் வரலாற்று நாவலுக்கு 1963ஆம் ஆண்டில் சாகித்ய அகாதெமி பரிசைப் பெற்றார்.

'எங்கே போகிறோம்?' என்னும் அவருடைய நாவல், எம்.ஏ.சி. அறக்கட்டளைப் பரிசை 1975ஆம் ஆண்டில் பெற்றது. இந்த அமைப்பு உருவாக்கிய இப்பரிசுத்திட்டத்தில் முதன்முறையாகப் பரிசுபெற்ற நாவல் இதுவே. அகிலனின் 'கயல்விழி' வரலாற்று நாவல் 1965ஆம் ஆண்டில் அரசின் தமிழ் வளர்ச்சித்துறை பரிசைப் பெற்றது. 'நெஞ்சின் அலைகள்' நாவல் 1954ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சிக்கழகப் பரிசைப் பெற்றது. 'பெண்' நாவல் 'கலைமகள்' இதழ் முதல் முதலில் நடத்திய நாவல்போட்டியில் முதல் பரிசைப் பெற்றது. இதே நாவல், தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டையும் பெற்றது.

'எரிமலை' என்னும் அவருடைய சிறுகதைத் தொகுப்பு 1972-ஆம் ஆண்டில் தமிழ் வளர்ச்சித்துறையின் பரிசைப் பெற்றுள்ளது. அவருடைய 'சக்திவேல்', 'நிலவினிலே' ஆகிய இரு சிறுகதைத் தொகுப்புக்களும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுதல்களைப் பெற்றன. 'கண்ணான கண்ணன்' என்னும் அவருடைய சிறுவர் இலக்கியம், 1963ஆம் ஆண்டிற்கான தமிழக அரசின் கல்வித் துறையின் பரிசைப் பெற்றது.

அகிலனின் பல சிறுகதைகளும் பல நாவல்களும் பிற இந்தியமொழிகள் பலவற்றிலும் ஆங்கிலம், ஜெர்மன், செக், ருஷ்யன், சீனம், போலிஷ், பிரெஞ்சு ஆகிய உலக மொழிகளிலும் மொழி பெயர்ப்பாகியுள்ளன.

அகிலன் 1960ஆம் ஆண்டில் இலங்கைக்கும், 1973 இல் சோவியத் ரஷ்யாவிற்கும் 1975இல் மலேசியா-சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் சென்று கருத்தரங்குகளில் பங்கேற்று வந்துள்ளார். சோவியத் ரஷ்யா சென்றுவந்த அனுபவங்களைச் 'சோவியத் நாட்டில்' என்னும் பயணக் கட்டுரை நூலாக அவர் எழுதினார். மலேசியா சென்றுவந்த அனுபவத்தில், ரப்பர் தோட்டத் தொழிலாளர் பிரச்சினையை மையமிட்டு, அந்த நாட்டுப் பின்னணியில் 'பால்மரக்காட்டினிலே' என்னும்

நாவலை அகிலன் எழுதினார். தமிழ் நாட்டுப் படைப்பாளர் ஒருவர், மலேசிய ரப்பர்தோட்டத்து மக்களின் குடும்ப, சமூக வாழ்க்கைப் பிரச்சினைகளை மையமிட்டு நாவல் எழுதியது இதுதான் முதல்முறையாகும்.

'பாவை விளக்கு' நாவலை 1957-58 ஆம் ஆண்டுகளில் தன் வரலாற்று நாவலாக (autobiographical novel) அவர் எழுதினார். அன்றைய கால கட்டத்தில், புதியதான இந்த நாவல்வகை அவரால் தமிழுக்குக் கிடைத்த புதிய வரவாகும். அதேபோன்று, தம்முடைய படைப்புக்களையும் வாழ்க்கை அனுபவங் களையும் இணைத்து 'எழுத்தும் வாழ்க்கையும்' என்னும் நூலை 1978ஆம் ஆண்டு வெளியிட்டார். இதுவும் தமிழுக்குப் புதிய வரவு. படைப்பாளரையும் அவர் படைப்புக்களையும் ஒருசேர இணைத்து, வாழ்க்கைவரலாற்று (biographical) முறைத் திறனாய்வு செய்ய இத்தகு முயற்சிகள் பெரிதும் துணைபுரியும். அந்தவகையில் இந்த நூல் பயன் உடைய, பாராட்டத்தக்க முயற்சியாகும். இளைஞர்களை மனத்தில் கொண்டு, தன் முன்னேற்ற நூல் ஒன்றை 'வெற்றியின் ரகசியங்கள்' என்னும் பெயரில் அகிலன் படைத்துள்ளார். இவ்வாறு படைப் பிலக்கியங்களுடன், பயனுள்ள பல்வேறு ஆக்கங்களை அவர் தமிழுக்குத் தந்துள்ளார்.

மக்களிடம் நெடுங்காலமாகப் படிந்துள்ள பல்வேறு அறியாமைகளைப் போக்கி, அவர்களை விழிப்படையச் செய்யவேண்டும்; அதற்குத் தம்முடைய எழுத்து உதவ வேண்டும் என்ற கொள்கையுடன் அகிலன் எழுதினார். மக்கள் கூட்டத்தின் மீது அன்பும் மனிதநேயமும் கொண்டு, மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பாடுபடவேண்டும் என்ற கொள்கைப் பிடிப்பு அவருடைய பல்வேறு படைப்புக்களில் அடிநாதமாக ஒலிக்கிறது. தாம் வாழுகின்றகாலச் சமூக அமைப்பில் காணப்படும் குறைகளையும், சிக்கல்களையும் எடுத்துக் காட்டி, அவைகளை நீக்கும் வழிகளையும் அகிலன் தன் படைப்புக்களில் முன் வைக்கிறார். ஒருவகையில் இது குறிக்கோள் நெறி என்றாலும் நடப்பியலில் நின்றுகொண்டே, இந்தக்குறிக்கோளை அடையவேண்டும் என்று காட்டுகிறார். மனிதநேயமும் அன்பும் நிறைந்த காந்திய நெறியை அவர் படைப்புகளில் மைய இழையாகக் காணலாம். காந்திய நெறிக்கு முரணான வன்முறை, தீவிரவாதம் போன்றவை எந்தத் துறையில், எவ்வகையில் காணப்பட்டாலும் அவைகளை

வேரோடு சாய்க்கவேண்டும் என்கிறார் அகிலன். இவ்வாறு, திட்டமிட்ட கலைக்கொள்கையுடன் அவருடைய படைப்புக்கள் அமைந்தன. படைப்பு எந்த வகையில் அமைந்தாலும், தனிமனித, சமூக மேன்மையை அது வலியுறுத்தியது.

அகிலன், அரசுப்பணியிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர், சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்தார். அவர் 1988ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ஆம் நாளன்று அமரரானார்.

மனிதர்களுக்கிடையிலும், நாடுகளுக்கிடையிலும் பகைமையோ, முரண்பாடோ, போரோ கூடாது எனவும், அன்பும் நேயமும் தான் மனிதகுலத்தின் மேன்மைக்கு உதவுவன என்றும் தம்முடைய எழுத்துக்களில் அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். 'அவன் ஏழை' என்னும் முதல் சிறுகதை முதல் 'வானமா பூமியா?' நாவல் வரை இந்த மையக்கருத்தைக் காணலாம்; இந்தப் பெரு நோக்குடைய அவருடைய படைப்புக்கள், மனிதகுலம் உள்ளவரை, இச்செய்தியைச் சொல்லிக் கொண்டேயிருக்கும். இந்த எழுத்துக்களில் அவர் வாழுகிறார்.

இயல் –2

அகிலனின் படைப்புக்கள்

சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம், நாடகம், மொழிபெயர்ப்பு, கட்டுரைகள் என்று பல்வேறு வகையான படைப்புக்களை அகிலன் படைத்துள்ளார். தொடக்க காலத்தில் சிறுகதைகளைப் படைத்து வந்த அவர், பின்னர் பல்வேறு இலக்கிய வகைகளையும் தொடர்ந்து படைத்தார். எந்த இலக்கிய வகையாயினும், 'உண்மையின் அழகை எளிமையான முறையில் பேசவேண்டும்' என்ற அடிப்படைக் கலைக்கொள்கை அவரிடம் காணப்பட்டது. சிறுகதை, நாவல் ஆகிய இலக்கிய வகைகளின் உருவம், உத்தி போன்றவைகளில் மிகுதியான புதுமைகளைப் புகுத்தி, சோதனை முயற்சிகளாக அவர் படைத்துள்ளார். கதையின் உள்ளடக்கத்திற்கு எது ஏற்றமுறையோ, அந்த முறையில் கதையைச் சுவைபட அவர் கூறியுள்ளார். எந்தக் கடினமான கருத்தாயினும், எளிமையாகச் சொல்ல வேண்டும் என்பது அவர் கொள்கை. 'ஓரிரண்டு வருஷத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி' (மகாகவி பாரதியார் 1912ஆம் வருட 'பாஞ்சாலி சபத'த்தின் முன்னுரை) என்று பாரதியார் வகுத்த அடிப்படை நெறியில், எளிமையாகப் படைப்பதை அகிலன் நோக்கமாகக் கொண்டிருந்தார். 'இலட்சக்கணக்கான மக்களிடம் பேசக் கூடிய சத்தியத்தின் அழகை அடிப்படையாகக்கொண்ட கலையையும் இலக்கியத்தையுமே நான் விரும்புகிறேன்' என்னும் காந்தியடிகளின் கூற்றில் ஆழ்ந்த நம்பிக்கை உடையவர் அகிலன். ஆகவே, அவர் இதையே அடிப்படைக் கலைக்கொள்கையாகக் கொண்டிருந்தார். 'உருவ அமைதி என்னும் கலைக் கட்டுக்கோப்பின் புற அழகைவிட, உள்ளடக்கம் என்னும் கருத்தழகுக்கு முதலிடம் தரவேண்டும் என்பது காந்தியக் கலைக்கொள்கை. அதைக் கதைகளில் சோதனை செய்து பார்க்க முயன்றிருக்கிறேன்' ('எரிமலை' ப.5) என்று அகிலன் தம்முடைய கலைக்கொள்கையைக் காந்தியக் கலைக்கொள்கைகளிலிருந்து அமைத்துக் கொண்டதாகக்

கூறுகிறார். எந்தப் படைப்பாயினும், உண்மையின் அழகைக்கூறுவதான, படைப்பின் உள்ளடக்கத்திற்கு அவர் முதன்மை தருகிறார். உள்ளடக்கத்திற்கு ஏற்றமுறையில் வடிவத்தை அவர் ஆளுகிறார். கதையின் உள்ளடக்கத்திற்கு ஏற்ற வகையில் கதைகூறு உத்தியை அவர் பயன்படுத்துகிறார். அதனைச் 'சிசுவின் குரல்', 'குலதெய்வம்', 'எங்கோ ஓர் இதயம்', 'மனோரஞ்சிதம்', 'நான்-அவள்-அவன்', 'காந்தி வந்தார்', 'கதையும் பதிலும்', 'கடவுளின் பிரதிநிதி' ஆகிய சிறுகதைகளிலும், 'சிநேகிதி', 'துணைவி', 'பாவை விளக்கு', 'எங்கே போகிறோம்' ஆகிய நாவல்களிலும் காணலாம். சான்றாக, 'பாவைவிளக்கு' நாவலில், தணிகாசலத்தின் இளமை வாழ்க்கையைக் கூறுமிடத்து, கண்ணபுரம் நகரின் வருணனையைக் கூறும்போது வழிகாட்டி நேர்க்கு நிலை (guide point of view) என்ற உத்தியை ஆளுகிறார். நாவலைப் படிக்கும் ஒவ்வொரு வாசகனுக்கும், தானே அந்த இடத்தில் இருப்பது போன்ற உணர்வை ஆசிரியர் ஏற்படுத்துகிறார். இதேபோல, 'வாழ்வு எங்கே?' என்னும் நாவலின் முதல் இயல், 'நாளைக்குக் கல்யாணம்' என்னும் தலைப்புடன் தொடங்குகிறது. நாவலின் இறுதி இயல், 'இன்றைக்குக் கல்யாணம்' என்று முடிகிறது. முதல் இயலின் தலைப்பும் இறுதி இயலின் தலைப்பும் இணைந்து, ஒரு முழுமையை உருவாக்குகிறது. அத்துடன், 'வாழ்வு எங்கே?' என்று தலைப்பில் எழுப்பிய வினாவிற்கு விடை கூறுவதுபோல, "வாழ்க்கை நிரந்தரமானது. அது இங்கேதான் இருக்கிறது, அழியாத அன்பின் அடிப்படையில்" ('வாழ்வு எங்கே?' ப. 399) என்று முடிகிறது. நாவலை இயல்களாகப் பகுத்துத் தொடர்கதையாக எழுதினாலும், நாவல் என்னும் கலை வடிவம் பற்றிய, முழுமைப்பார்வை அவரிடம் இருந்தது என்பதை இதனால் அறியலாம். நாவலுக்கு வைக்கும் இயல் தலைப்பில்கூட ஆழமான கவனத்துடன் கலைப்படைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்பதை இதனால் அறியலாம். ஆக, எந்த இலக்கிய வகையாயினும், அதனைச் செம்மையாகப் படைக்கும், அவருடைய கலைக்கொள்கையை இதனால் அறியலாம்.

சிறுகதைகள்

சிறுகதை எழுத்தாளராகவே அகிலன் தமிழில் அறிமுகம் ஆனார். பள்ளிப் பருவத்தில், 'அவன் ஏழை' ("மிடியால் மடிதல்') என்னும் சிறுகதையை அவர் எழுதினார். அவர்

எழுதிய சிறுகதைகள் 17 தொகுப்புக்களாக (மொத்தம் 200 கதைகள்) வெளிவந்துள்ளன. இச்சிறுகதைகள் யாவும் பல்வேறு இதழ்களில் வெளிவந்து, பின்னர் தொகுப்புக்களாக வெளியாயின. தனிமனித, சமூகச் சிக்கல்களைக் கருப்பொருளாக ஆக்கி, அவர் சிறுகதைகளைப் படைத்துள்ளார். தொடக்க காலத்தில் (1938- 1949 வரை உள்ள காலகட்டம்) விடுதலைப்போராட்டகாலப் பின்னணியையும் அன்றைய சமூகச் சூழல், மனிதமன உணர்வு என்பவைகளையும் வெளியிடும் சிறுகதைகளை அவர் படைத்தார். மனித நலனுக்கு எதிரான தீமையை எதிர்க்கும் அவருடைய மனப்போக்கைப் பல சிறுகதைகளில் காணமுடிகிறது. இடைக்காலத்தில் (1950-1960 வரை உள்ள கால கட்டம்) அவர் சிறுகதைப் படைப்பாக்கத்தில், புதிய முறை ஒன்றைக் கையாண்டார். தம் கருத்தை நேரடியாகக் கூறாமல், முரண்பட்ட மாந்தர் படைப்பாலும், அவர்தம் செயல், உணர்வு என்பவைகளாலும் வெளியிடும் முறையை அகிலன் கையாண்டார். இக்காலச் சிறுகதைகளில் உருவமும் உள்ளடக்கமும் ஒன்றிற்கொன்று ஒத்திசைய அமைந்துள்ளன. மனிதனை வளர்க்க உதவும் நன்மைகளைப் பாராட்டும் அகிலன், மனித வளர்ச்சிக்கு உதவாதவற்றை எதிர்க்கிறார். கலை, வாழ்க்கையைச் செம்மைப்படுத்தவும் மனித நலனை மேம்படுத்தவும் உதவவேண்டும் என்னும் கலைக்கொள்கையை அவருடைய சிறுகதைகளில் காணமுடிகிறது. பிற்காலத்தில் (1961 - 1983 முடிய உள்ள காலகட்டம்) அவர் எழுதிய சிறுகதைகளில், உள்ளடக்கத்திற்குக் கூடுதல் கவனம் தந்து எழுதினார். வயிற்றுக்கு இன்றி வறுமையால் வாடும் மக்கள் கூட்டத்தைச் சிந்திக்கவிடாமல், சிந்தித்து அவர்கள் செயல்படின் தங்களை எதிர்க்க முற்படுவார்களோ என்ற அச்சத்தால் அம்மக்களின் சிந்தனையை மரத்துப்போகச் செய்ய முற்பட்டுச் செல்வந்தர்கள் செயலாற்றி வருகின்றனர். வர்க்க முரண்பாடுமிக்க முதலாளித்துவ சமூக அமைப்பில் இவ்வாறுதான் இருக்கும் என்றும் அகிலன் இக்காலச் சிறுகதைகளில் காட்டுகிறார். திரைப்படம், அரசியல், மேடைப்பேச்சு, சமயம், இதழ் என்று பரந்த அளவில் மக்களை எட்டும் கருவிகள் மக்களுக்கு எதிராகவும் முதலாளித்துவத்திற்கு ஆதரவாகவும் உள்ள அவல நிலையை அகிலன் தொடர்ந்து சிறுகதைகளில் படைத்துள்ளார். சிறுகதையின் கருப்பொருள் புலப்பாட்டிற்கு

ஏற்றமுறையில் கதையமைப்பை அவர் ஆளுகிறார். கதையமைப்பிற்கு ஏற்ப ஒவ்வொரு உத்தியையும் அவர் ஆள்கிறார். நீண்டவடிவம் இருந்தும் சிறுகதையின் ஒருமைப்பாடு குன்றாத கலைநயமிக்க சிறுகதைகளை அவர் படைத்துள்ளார். 'பூச்சாண்டி', 'எரிமலை' ஆகிய சிறுகதைகள் இதற்கு நல்ல சான்றுகளாகும். கதையின் கருப்பொருள், கதையமைப்பு, உத்தி என்ற மூன்றும் சிறந்த சிறுகதைகள் பலவற்றை அகிலன் படைத்துள்ளார். புதுமைப்பித்தனுக்குப் பின்னர், சமுதாயச் சிக்கல்களை மிகுதியாகப் படைத்து, அவைகளுக்குத் தீர்வுகளையும் முன்வைத்த சிறுகதைகள் பலவற்றைப் படைத்தவர் அகிலன். நாவலாசிரியராகவே மிகுதியும் இனங்காணப்பட்டுப் போற்றப்பட்டதால், தமிழ்ச் சூழலில் அவருடைய சிறுகதைகள் போதிய கவனத்தைப் பெறாமல் போய்விட்டன. சிறுகதையின் உள்ளடக்கம், வடிவம் (அமைப்பு), உத்தி ஆகியவைகளில் பல சோதனைகளை மேற்கொண்டதும், சில புதிய உத்திகளை ஆண்டதும், அகிலனுக்குத் தமிழ்ச் சிறுகதை உலகில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுத் தந்துள்ளது.

நாவல்கள்

1944-ஆம் ஆண்டு 'மங்கிய நிலவு' என்னும் நாவல் வெளிவந்தது. இதுதான் அகிலன் எழுதிய முதல் நாவல். விடுதலைப்போராட்டச் சூழலை மையமிட்டு எழுதப்பட்ட நாவல் இது. பின்னர் சிலமாற்றங்களுடன் 'இன்பநினைவு' என்னும் பெயரில் 1949-இல் வெளியானது. அகிலன் 19 நாவல்களை எழுதியுள்ளார். இவைகளுள் 'வேங்கையின் மைந்தன்' 'கயல்விழி', 'வெற்றித்திருநகர்' ஆகிய மூன்றும் வரலாற்று நாவல்கள். ஏனைய 16 நாவல்களும் சமூக நாவல்களே. 'இன்பநினைவு', 'சிநேகிதி', 'சந்திப்பு', 'கொள்ளைக்காரன்' ஆகியன நேரடியாக நூலாக வெளி வந்தவை. ஏனையன இதழ்களில் தொடர்கதையாக வெளிவந்து, பின்னர் நூலானவை. நேரடியாக வெளிவந்தாலும் தொடர்கதையாக எழுதினாலும், நாவலைப் பற்றிய முழுமைப் பார்வையும் திட்டமிட்ட, வடிவச்செம்மையுடைய கதை அமைப்பும் நாவலில் காணப்படுகிறது. ஒரே சமயத்தில் வாசகர் பலரையும் சென்று அடையக்கூடிய வடிவம் என்ற நோக்கில்தான் தொடர்கதை வடிவத்தில் அவர் எழுதினார். சுவையாகக் கதை கூறவேண்டும் என்பதற்காக, வாரந்தோறும்

(மாதந்தோறும்) நாவலின் தொடக்கத்திலும் முடிவிலும் செற்கையான முறையில் விறுவிறுப்பையும், மறைபொருள் தன்மையையும் (suspense) ஆர்வநிலைத்தூண்டலையும் அவர் பயன்படுத்துவதில்லை. தொடர்கதைக்கான செயற்கைக் கூறுகள் இல்லாமல், அவ்ருடைய நாவல்கள் படைக்கப் பட்டுள்ளன.

தொடக்கத்தில், சிறிய நாவல்களையே அவர் படைத்தார். 'மங்கிய நிலவு', 'பெண்', 'துணைவி' 'சிநேகிதி', 'அவளுக்கு' போன்ற நாவல்கள் இதற்குச் சான்றுகளாகும். 'நெஞ்சின் அலைகள்' தொடங்கி நீண்ட நாவல்களையே அவர் படைத்தார். அவருடைய நாவல்கள், சமகாலச் சமூகப் பிரச்சினைகளை மையமிட்டு அமைந்தன. வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் பொய்மை புகுந்து, போலித்தனம் பெருகிவிட்டன. அரசியல், பத்திரிகை, இலக்கியம், திரைப்படம் என்று அனைத்தும் பொருள் ஈட்டுவதற்காக மக்களை ஏமாற்றுகின்றன; எங்கும், எதிலும் கலப்படமும், லஞ்சமும், கள்ளப்பணமும் நடமாட, நாட்டின் மெய்யான வளர்ச்சி தடைப்பட்டது. நாடும் நாமும் போகும் பாதை சரியில்லை என்பதை 'எங்கே போகிறோம்?' என்னும் பெயரில் அவர் நாவலாக வெளியிட்டார். இந்த நாவல், சமூக, தனிமனித நாட்டு வரலாற்றில் குறிப்பிடத்தக்க சாதனையாகும். குடும்ப அமைப்பில், பெண்ணுக்கு மட்டும் கற்பையும் ஒழுக்கத்தையும் விதித்துவிட்டு, அனைத்து விதமான தீயபண்புகளுடனும் சமூகத்தையும் குடும்பத்தையும் பாழ்படுத்தும் கணவனின் ஆதிக்கப்போக்கை, ஆண் என்பதற்காக அனுமதிக்க இயலாது என்னும் சிந்தனையின் வெளிப்பாடாகச் 'சித்திரப்பாவை' என்னும் நாவலை எழுதினார். காலங்காலமாகச் சித்திரப் பாவையாக அடங்கியிருந்த பெண், நேரம்வரும்போது, தன்னுடைய அறியாமையை உதறிவிட்டு எழுவதை இந்த நாவல் ஆழமாகச் சித்திரிக்கிறது. பெண்ணுடைய விழிப்புணர் வையும், சம உரிமைக்கான எழுச்சியையும் 'சிநேகிதி', 'துணைவி', 'கயல்விழி', 'சித்திரப்பாவை', 'எங்கே போகிறோம்?' என்று பல நாவல்களில் படைத்துள்ளார். அடிப்படையில் தன்னுடைய காலச் சமூக அமைப்பிலும் தனிமனிதர்களிடமும் காணப்பட்ட குறைகளையும் சிக்கல் களையும் அவைகளுக்கான காரணங்களையும் நாவல்களில் முன்வைத்தார். இவைகள் மனிதனையும் சமூகத்தையும்

பாழ்படுத்துவதை எடுத்துக்காட்டினார். இவைகளிலிருந்து விடுபட்டு மேன்மையடையும் நெறிகளையும் காட்டினார். அன்பும், அகிம்சையும் நிறைந்த மனித வாழ்க்கையைத் தம்முடைய நாவல்களில் தொடர்ந்து வலியுறுத்தினார். ''வாழ்க்கையை அழகாக வாழக் கற்றுக்கொள். முடிந்தால் வாழ்க்கையை அழகுபடுத்து. முடியாவிட்டால் அதை அசிங்கப்படுத்தாமலாவது இரு' என்று 'சித்திரப்பாவை' நாவலில் (ப.75) அவர் கூறுகிறார். ஒருவகையில், அகிலனுடைய படைப்புகளின் ஊடாக மறைந்துகிடக்கும் வாழ்க்கை நோக்கு இது. வாழ்க்கையை அழகும் மணமும் நிறைந்ததாக ஆக்குவதற்கு ஒவ்வொரு மனிதனும் முயன்று உழைக்க வேண்டும் என்னும் நோக்கமிதில் உள்ளது. முதலாளித்துவ சமூக அமைப்பும், பொருளாதார முரண்பாடும், அடிமட்டத்து மக்களைப் பாதிக்கின்ற அவலத்தை மீண்டும் மீண்டும் அவருடைய நாவல்கள் எடுத்துரைத்தன. காந்திய நெறியில், அடையவேண்டிய இலக்கையும், அதற்கேற்ற வழிமுறை களையும் நாவல்களில் அவர் படைத்துள்ளார். குறிக்கோள் நெறி, நடப்பியல் நெறி, விமர்சன நடப்பியல் நெறி, அற்புத நவிற்சி நெறி ஆகிய இலக்கிய நெறிகள் அவருடைய நாவல்களில் காணப்படுகின்றன. எந்த நெறியாயினும், நாவல் படிக்கும் வாசகனைச் சிந்திக்க வைத்து, உயர்வதற்கான வழிமுறைகளைக் கூறவேண்டும் என்ற நோக்கில் அவர் எழுதினார். இந்தவகையில், 'மக்களுக்கு எது பிடிக்கிறதோ அதை எழுதாமல், எது பிடிக்க வேண்டுமோ அதை எழுதுவதுதான் எழுத்து' என்னும் உயரிய நோக்கில் அவர் எழுதினார். இதனால், பத்திரிகைகளில் தொடர்கதைகளாக எழுதியபோதிலும், தம்முடைய எழுத்திற்கு ஒருஅடிப் படையான நோக்கத்தை அவர் வைத்திருந்தார். நாவல் என்னும் கதை வடிவம் வாழ்க்கை மேம்பாட்டிற்குரியது என்பதை அவர் நாவல்கள் அனைத்திலும் காணலாம்.

சிறுவர் இலக்கியம்

சிறுவர் இலக்கியம் என்னும் வரிசையில், நான்கு நூல்களை அகிலன் படைத்துள்ளார். சிறுவர் கதைகளாக இவை உள்ளன. கதைசொல்வதுடன்கூட, இவைகளில் சிறுவர்களுக்கான அறம் கூறும் முறை உள்ளது. இவைகளுள், 'நல்லபையன்', 'கண்ணான கண்ணன்' இரண்டும் எழுதப்பட்ட காலத்தையும் அவைகளின் நோக்கத்தையும் அகிலன் முன்னுரையில்

எழுதியுள்ளார். 'இரண்டாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்த காலத்தில் பள்ளிக்கூடத்திலிருந்து வெளிவந்த பிறகு இந்தக் கதைகளை எழுதினேன். மனிதர்கள் கூட்டங்கூட்டமாகப் போரில் இறந்து போவதைக்கூட நான் ஓர் பெரிய இழப்பாகக் கருதமாட்டேன். மனிதத்தன்மை மடிந்துபோவதைக் காணும்போதுதான் மனம் வேதனைப் படுகிறது. அன்றைக்கு மக்களிடம் தொடங்கிய நாணயக் குறைவை இத்தனை ஆண்டுகள் சென்றபிறகும் நம்மால் ஈடுசெய்யமுடியவில்லையே' என்று அவர் (முன்னுரை, ப.3) கூறுகிறார். மனிதத்தன்மை குறைவதையும் மனிதர்களிடம் நாணயம் குறைந்துவருவதையும் எடுத்துக் கூறுவதாக 'நல்லபையன்' கதை அமைந்துள்ளது. சாதிவேறுபாடு கூடாது, அனைவரும் சமம் என்னும் கருத்தை எடுத்துக் கூறுவதாகக் 'கண்ணான கண்ணன்' கதை உள்ளது. சிறுவர்களுக்கு அறிவுரை கூறுவதை நோக்கமாகக் கொண்டு இக்கதைகள் படைக்கப்பட்டு உள்ளன.

நாடகம்

'வாழ்வில் இன்பம்', 'புயல்' 'உயிர்ப்பலி' ஆகிய மூன்று நாடகங்களை அகிலன் எழுதியுள்ளார். இவைகளுள், 'புயல்' (1947), 'உயிர்ப்பலி' (1961-'62) ஆகிய இரண்டும் மேடைக்காக எழுதப்பட்டு, நடிக்கப்பட்டன; நூல்வடிவம் பெறவில்லை. 'வாழ்வில் இன்பம்' (1955) மட்டும் மேடை நாடகமாக எழுதப்பட்டதுடன் நூலாகவும் வெளிவந்துள்ளது. மகிழ்ச்சி ஒன்றையே நோக்கமாகக் கொண்டு நாடகம் அமைக்கப் பட்டுள்ளது. இந்த நாடகம், 'வாழ்க்கையை, வாழ்க்கையின் உயிர் நிலையைத்தான் படம் பிடித்துக்காட்டுகிறது' என்று நாடகத்தின் முன்னுரையில் (ப.4) கூறப்படுவது மிகவும் பொருத்தமான கூற்றாகும். இந்த நாடகம், திருமண வீடுகளில் நடிப்பதற்காகவே உருவாக்கப்பட்ட மணவிழா நாடகம் ஆகும். தமிழில் இவ்வகையில் இது முதல் நாடகம் ஆகும்.

மொழிபெயர்ப்பு

பிறமொழிகளிலிருந்து, ஆங்கிலத்தின் வாயிலாகக் கதைகள், நாடகம் ஆகியவற்றை முறையே கதைகளாகவும் நாவலாகவும் அகிலன் மொழிபெயர்த்துள்ளார். பலமொழிச் சிறுகதைகள் (ஆங்கிலம், உருசியன், ஜெர்மன்) நான்கை அகிலன் மொழி - பெயர்த்துள்ளார். அவை 'எழுதாத கதை' என்னும் பெயரில்

நூலாக (1954) வந்துள்ளன. மாபசான் பிரெஞ்சு மொழியில் எழுதிய 13 சிறுகதைகளை ஆங்கிலத்தின் வழியே, தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவை, 'மாபசான் சிறுகதைகள்' (1978) என்ற பெயரில் நூலாக வந்துள்ளன. இவற்றுள் 9 சிறுகதைகள் மட்டும் முழு நிலவு (1955) என்னும் பெயரில் முன்பு வெளிவந்தவை ஆகும். 'பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிரெஞ்சு வாழ்க்கையை அப்படியே பல கோணங்களில் நின்று படம் பிடித்திருக்கிறார், மாபசான். சின்னஞ்சிறு கவிதைத் துணுக்குகளைப் போல் ஏராளமான சிறுகதைகளை இலக்கிய வளம் நிறைந்த நடையில் எழுதிக்குவித்தவர் மாபசான்... பிற ஆசிரியர்கள் எத்தனையோ பக்கங்களில் சொல்ல முடியாததை இரண்டே வரிகளில் திறம்படச் சொல்லும் தீரர் மாபசான்' என்று முன்னுரையில் (மாபசான் சிறுகதைகள், முன்னுரை, ப.4) அகிலன் கூறுகிறார். ஆஸ்கார் ஒயில்ட் என்னும் அயர்லாந்து நாட்டுப்படைப்பாளியின் கவிதைத்திறன்மிக்க 'சலோமி' நாடகத்தை அகிலன் 'தாகம்' என்னும் பெயரில் (1953) நாவலாக மொழிபெயர்த்துள்ளார். 'கலைஞர் ஒயில்டின் சொல்லழகு பிரமிக்கத்தக்கது. சொற்களின் ஆழம் சிந்திக்கத் தூண்டுவது. மூலநாடகத்தின் சொல்லமைப்புக்களைக் கூடிய வரையில் அப்படியே கொடுத்திருக்கிறேன்' என்று முன்னுரையில் ('தாகம்', பக்.5; 6) அகிலன் கூறியுள்ளார். பிறமொழிப் படைப்புகளை மொழிபெயர்த்ததின் வழியாகத் தம்முடைய படைப்பாற்றலைக் கூர்மைப்படுத்திக் கொண்டுள்ளார் அகிலன். அத்துடன், தமிழில் எழுதும் இளம் படைப்பாளர்களுக்குப் பிறமொழிக் கதைகளை அறிமுகப்படுத்தி, தமிழுக்கு வளம் சேர்த்துள்ளார் அவர். பொதுவாகத் தமிழ்ப் படைப்பிலக்கிய வரலாற்றில் தொடக்கத்தில் பலரும் உலகத்துச் சிறந்த படைப்புகளைத் தமிழுக்கு மொழி பெயர்த்துத் தந்தனர். அகிலனும் அந்த வரிசையில் இந்த மூன்று மொழிபெயர்ப்புப் படைப்புக்களைத் தந்துள்ளார்.

கட்டுரை நூல்கள்

புனைகதைகள் படைத்தது போன்று அகிலன் கட்டுரை இலக்கியங்களையும் படைத்துள்ளார். ஏழு நூல்களாக வந்துள்ளவை தவிர, நூல் வடிவம் பெறாமல், பல்வேறு தலைப்புகளில் எழுதப்பட்டு, இதழ்களில் வந்த அளவில் நின்றுவிட்ட கட்டுரைகள் பல உள்ளன. நூலாக வந்தவைகளில் படைப்பிலக்கியம் குறித்த திறனாய்வுக் கட்டுரை நூலாக

உள்ளவை மூன்று. 'கலையும் வயிறும்' (1956), 'கதைக்கலை' (1972), 'புதிய விழிப்பு' (1986) என்பன அவை. நாடு விடுதலை பெற்றபின் ஏற்பட்டுவரும் வளர்ச்சியை மையமாகக் கொண்ட நாட்டு அரசியல் சிந்தனை நூல் 'இளைஞருக்கு' (1962) என்பதாகும். அகிலனின் சோவியத் பயண அனுபவங்களைக் கூறும் பயண இலக்கியம் 'சோவியத் நாட்டில்...' (1975) என்னும் நூலாகும். வாழ்க்கை வரலாற்று அனுபவங்கள் எவ்வாறு எழுத்துக்களாக உருக்கொண்டன என்பதைக் கூறும் தன்வரலாற்றுத் திறனாய்வு (autobiographical criticism) நூல் 'எழுத்தும் வாழ்க்கையும்' (1978). இது தமிழுக்குப் புதிய வரவும் இவ்வகையில் முதலாவதான நூலும் ஆகும். தன்முன்னேற்ற நூல்வரிசை என்னும் வகையில் புதிய விழிப்புணர்வைக் கூறும் நூல் 'வெற்றியின் ரகசியங்கள்' (1979) என்பதாகும். 'கலையும் வயிறும்' தொகுப்பில் படைப்பும் படைப்பாளனும், நாவல், சிறுகதை, நாடகம், மதிப்புரை, படைப்பாளர் ஆகிய பொருள்கள் குறித்த திறனாய்வுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. 'சிறுகதையின் ஒவ்வொரு பகுதியுமே சுவையுள்ளதாகத்தான் இருக்கவேண்டும். கதை ஓட்டமும் நடை அழகும் கருத்தின் வேகமும் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருக்கும்படி செய்யவேண்டும்... மின்வெட்டுப் போல, ஓரிரண்டு வார்த்தைகள் சமூகத்தைக் கேலி செய்வதற்கோ, குத்திக்காட்டுவதற்கோ உபயோகப்படுத்தலாம்... கருத்தை வெளியிடுவதற்குள்ள திறமை காலப்போக்கில் தானாகவே எழுத்தாளர்களுக்கு ஏற்படும்' ('கலையும் வயிறும்', பக்.40, 42, 43) என்று சிறுகதை எழுதும் அனுபவத்தை அவர் எடுத்துக் கூறியுள்ளார். 'கதைக்கலை' நூலில் சிறுகதை, நாவல், உரைநடை, கார்க்கி-லெனின் ஆகிய படைப்பாளர்கள் பற்றிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. 'தீமையை எதிர்த்துப் போராடு என்பது என் அடிப்படைச் செய்தியாக இருக்கலாம்... நாட்டு விடுதலைக்குப்பிறகு, நான் எதிர்பார்த்த சமுதாய மாறுதல்கள் ஏற்படாததால், அதை ஒட்டி எனக்கேற்பட்ட குமுறல்களை என்னுடைய பிற நாவல்களில் நீங்கள் காணலாம்... படைத்தவன் பிறக்கும்போதிருந்த சமுதாயத்தைவிட, அவன் இறக்கும்போது, சமுதாயம் இன்னும் சிறந்ததாக இருக்கவேண்டுமென்ற ஒரே நோக்கதான் அது' ('கதைக்கலை', பக்.94, 95, 111) என்று 'கதைக்கலை' நூலில் கூறுகிறார். 'புதியவிழிப்பு' நூலில் சிறுகதை, நாவல், நடை,

படைப்பாளர் பணி என்னும் பொருள்களில் கட்டுரைகள் உள்ளன. 'எழுத்தாளன் என்பவன் ஒரு போர்வீரனுமாவான். அவன் சமுதாயத்தில் நிலவும் தீமைகளைச் சாடப்பிறந்தவன். வஞ்சிக்கப்பட்டவர்களின் சார்பில், புறக்கணிக்கப்பட்டவர் களின் சார்பில் பேசக்கூடியவன்' ('புதிய விழிப்பு', ப.90) என்று எழுத்தாளர்களின் கடமையையும் பொறுப்புணர்வையும் கூறுகிறார். 'எந்த அரசியல் பொருளாதாரத் தத்துவமாக இருந்தாலும் மக்களிடையே கல்வியறிவும் விழிப்புணர்வும் உழைப்பார்வமும் ஆற்றலும் இல்லாதவரை, வழிகாட்டுவோர் நாணயமும் திறமையும் மிக்கவர்களாக இல்லாதவரை அதனால் போதிய பயன் விளையப்போவதில்லை' ('எழுத்தும் வாழ்க்கையும்', ப.387) என்று குறிப்பிட்டுள்ளார். 'விடாமுயற்சியுடனும் தெளிந்த சிந்தனையுடனும் ஒருவன் இடைவிடாது செயலாற்றத் தொடங்கிவிட்டால், அவனுடைய உழைப்பால், கட்டாயம் அவனுடைய குடும்பம் முன்னேறிவிடும்... இந்தப் பொய்யாமொழி என் வாழ்வில் பொய்க்கவில்லை. இதைக் கடைப் பிடித்து நடக்கும் யாருடைய வாழ்விலும் இது பொய்க்காது' என்று 'வெற்றியின் ரகசியங்கள்' நூலில் (ப.19) அகிலன் கூறியுள்ளார்.

பொதுவுடைமை நாடான சோவியத் ரஷ்யாவிற்கு மூன்றுமுறை சென்று வந்த அகிலன் 'நான் கண்ட ரஷ்யா' (1980) எனும் பயணக் கட்டுரை நூலைத் தமது காந்தியக் கண்ணோட்டத்தில் ஆழமாக எழுதியுள்ளார். 'சோவியத் நாட்டில்' என்பதும் அவருடைய சோவியத் ரஷ்ய பயணக் கட்டுரை நூலாகும்.

புனைகதைப் படைப்பிலக்கியத்துறையில் மட்டுமின்றி வேறு பல துறைகளிலும் அகிலன் முத்திரை பதித்துள்ளார். நாடும் மனிதர்களும் முன்னேறவேண்டும் எனவும் அதற்குத் தம் படைப்புக்கள் துணைசெய்ய வேண்டும் எனவும் உயர்ந்த நோக்கத்துடன் அவர் தம் படைப்புகளை உருவாக்கினார்.

இயல் – 3

சிறுகதைகள்

சிறுகதை என்னும் இலக்கிய வகை செறிவும் திட்பமும் வாய்ந்தது. ஒரு கதைமாந்தரின் பண்புநலன், உணர்வு வெளிப்பாடு, ஒருசெயல், ஒரு நிகழ்ச்சி என்ற ஏதோ ஒன்றை வெளிப்படுத்துவதாகச் சிறுகதை அமையும். சிறுகதையில் எந்த ஒரு கூறு மையப்படுத்தப்படுகிறதோ, அந்த ஒன்றைச் சுற்றியே பிற கூறுகள் எல்லாம் பின்னப்படும். சிறுகதைக்கலையில் ஒருமைப்பாடு மிகவும் இன்றியமையாததாகும். சிறுகதையில் கூறியது குறைவாகவும் உணரவேண்டியது மிகுதியாகவும் இருக்கும். சிறுகதையின் தலைப்பு, தொடக்கம், முடிவு என்ற ஒவ்வொரு நிலையிலும் மிகச் சிறிய சொற்களால் ஆழமான பொருளை உணர்த்தவேண்டும். கதையில் இடப்படும் காற்புள்ளி, அரைப்புள்ளி ஆகிய நிறுத்தற்குறிகளும், புள்ளியிடாமல் விடப்படும் வெற்றிடங்களும் பேசாதன பேசி, காட்டாதன காட்டும் ஆற்றல் உடையனவாக விளங்குகின்றன. சிறுகதையில் ஆளப்படும் கருப்பொருளிற்கு ஏற்ற கலைவடிவம் தந்து, அதன் ஒவ்வொரு கலைத்திறனிலும் படைப்பாளர் ஆழமான கவனம் செலுத்திப் படைக்கிறதால்தான், கதை கலைநயத்துடன் அமைகிறது.

அகிலன் சிறுகதையாளராகவே தம் படைப்புலக வாழ்வைத் தொடங்கினார். அவர் தம்முடைய பள்ளிப் பருவத்தில், 1938ஆம் ஆண்டில் பத்தாம் வகுப்பு படிக்கும்போது, பள்ளிக்கூடக் காலாண்டுமலரில் 'அவன் ஏழை' என்னும் சிறுகதையை எழுதினார். அவர் எழுதிய சிறுகதைகள் 17 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. இத்தொகுதிகளில் 200 சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன. அகிலன் சிறுகதைகள் எழுதத் தொடங்கிய காலகட்டம் நாட்டு விடுதலைப் போராட்டம் மிகவும் தீவிரமாக இருந்த காலமாகும். அன்னியரிடம் அடிமைப்பட்டு, பல்வேறு சமூகச் சீர்கேடு களால் பாதிக்கப்பட்டு, ஏழ்மை, வறுமை, அறியாமை, அடிமைத்தனம், சாதிக்கொடுமை, மூடநம்பிக்கைகள் என்னும்

பல்வேறு தீமைகளால் சூழப்பட்டு மக்கள் இருந்தனர். எனவே, தளைகளிலிருந்து விடுதலை பெறவும் தீமைகளை எதிர்த்துப் போராடவும் தம் எழுத்து பயன்பட வேண்டும் என்னும் உயரிய நோக்கத்துடன் அகிலன் எழுத்துப்பணியை மேற்கொண்டார். ஏனெனில், அவருக்கு முன்னோடியாகவும் முன்மாதிரியாகவும் விளங்கிய மகாகவி பாரதியாரும் திரு.வி.க.வும் கல்கியும் புதுமைப்பித்தனும் கு.ப. ராஜகோபாலனும் அன்றைய சூழலில் இத்தகைய உயரிய நோக்கங்களைத் தம் படைப்புக்களில் வெவ்வேறு நிலைகளில், மாறுபட்ட கலை, இலக்கியக் கொள்கைச் சார்புகளுடன், வெவ்வேறு தரங்களில் தந்தனர். தமிழ்ப் படைப்புச் சூழலில் பாரதியார், அ. மாதவையா, கல்கி போன்ற படைப்பாளர்கள், உள்ளடக்கத்திற்குப் பெரிதும் முதன்மை தந்து, பொதுமக்கள் குரலாகச் சிறுகதைகளைப் படைத்தவர்கள். வடிவம், உத்தி என்பவைகளை விடவும், சிறுகதையின் உள்ளடக்கமான கரு புலப்பாட்டிற்கு முதன்மைதந்து, வெளிப்பட - வெடிப்புறப் பேசினாலும் பரவாயில்லை; சிறுகதை சமூகத்தீமைகளை எதிர்த்துப் போராடும் உணர்வைப் படிப்பவனிடம் ஏற்படுத்த வேண்டும் என்ற சமூகப் பொறுப்புணர்ச்சியுடன் எழுதினர். அகிலனும் இதே மரபின் தொடர்ச்சியாக, இதே நோக்கத்துடன், நாட்டுவிடுதலைப் போராட்டம் தந்த பாதிப்பில், காந்திய நெறியில், 'தீமையை எதிர்த்துப் போராடுவது' என்னும் நோக்கத்துடன் தம் படைப்புப் பணியைத் தொடங்கினார்.

அகிலன் எழுத்துப்பணியைத் தொடங்கிய காலகட்டத்தில், தமிழ்ச்சிறுகதைகள் மணிக்கொடியாளர்களால் நன்கு வடிவச் செம்மையும் உத்திகளில் புதுப்புது சோதனை முயற்சிகளையும் புரட்சிகரமான உள்ளடக்கங்களையும் கொண்ட கலைப் படைப்புக்களாக வெளிவந்திருந்தன. புதுமைப்பித்தனும் கு.ப. ராஜகோபாலனும் நன்கு ஆழமாகவும் பன்முகப் பரிமாணத் தன்மைகளுடனும் சிறுகதைகளை வளர்த்துச் சாதனை புரிந்திருந்தனர். நாட்டு விடுதலை என்னும் அரசியல் தளத்தில் நிறையச் சிறுகதைகளை இவர்கள் எழுதவில்லை. மாறாக, சமூக, குடும்ப அமைப்புக்களில் அன்று நிலவிய மனிதநேயமற்ற, மனிதநலனுக்கு எதிரான அனைத்துத் தளைகளையும் எதிர்த்துச் சிறுகதை படைத்தனர்.

சிறுகதைகளைப் புதிய புதிய முறையில் சோதனைப் பூர்வமான கலைவடிவங்களாகப் படைத்தனர். இந்தச்

சூழலில்தான், கல்கியின் அரசியல், நாட்டு விடுதலை கருத்தாக்க உள்ளடக்க மரபையும், கு.ப. ராஜகோபாலனின் நுட்பமான மனிதமன உணர்வுவெளிப்பாட்டுத் திறனையும் புதுமைப் பித்தனின் சமூகச்சாடல் மரபையும் உள்வாங்கிக்கொண்டு அகிலன் தமக்கென ஒரு தனி மரபில் சிறுகதை படைத்தார். 'கல்கி என்னுடைய கதைபடிக்கும் ஆவலை மாணவப் பருவத்தில் அதிகமாக்கினார். கு.ப. ரா. தம் கதாபாத்திரங் களோடு ஈடுபட்டு என்னை ஒன்றச் செய்தார். புதுமைப்பித்தன் என்னைச் சிந்திக்க வைத்தார்... என்னிடமிருந்த கற்பனை வளர அவர்கள் காரணமாயிருந்தார்கள்' என்று அகிலன் கூறுவதால் ('கலையும் வயிறும்', ப.23) இதனை உணரலாம். மாபசான் சிறுகதைகள் பலவற்றை ஆங்கிலத்தின் வழி அகிலன் தமிழில் பிற்காலத்தில் மொழிபெயர்த்தார். இது, அவருடைய படிப்பு ஆர்வத்தையும் தம்முடைய கதை கூறும் திறனை வளர்த்துக்கொள்ள விழையும் முயற்சியையும் காட்டும். சிறுகதைகள் படைக்கும் அனுபவத்தை இவ்வாறு அவர் பலவிதமான வழிகளில் கூர்மைப்படுத்திக்கொண்டார்.

அகிலனின் சிறுகதைகளை அவை வெளியான கால அடிப்படையில், மூன்று காலகட்டங்களாகப் பிரிக்கலாம். அவர் எழுதத் தொடங்கிய 1938-ஆம் ஆண்டு முதல் 1949-ஆம் ஆண்டு முடிய உள்ள காலம் தொடக்க காலம். 1950ஆம் ஆண்டு முதல் 1959-ஆம் ஆண்டு முடிய உள்ள காலகட்டம் இடைக்காலம் ஆகும். 1960-ஆம் ஆண்டு முதல் 1983-ஆம் ஆண்டு முடிய உள்ள காலகட்டம் இறுதிக்காலம் ஆகும். அகிலன் இச்சிறுகதைகளைப் பல்வேறு இதழ்களில் எழுதினார். தொடக்ககாலச் சிறுகதைகளில் வறுமையின் கொடுமை, வர்க்க முரண்பாடு, சாதிவேறுபாடு, காதல், குடும்பச் சிக்கல் ஆகிய பிரச்சினைகளை மையமிட்டு அவர் சிறுகதைகளைப் படைத்தார். 'அவன் ஏழை', 'காசுமரம்', 'சாவிலே வாழ்வு' ஆகிய சிறுகதைகளில் வறுமை, பிஞ்சு நெஞ்சங்களைப் பாதித்த அவலங்களை அகிலன் படைத்தார். காதல் உள்ளங்களை இணையவிடாமல் தடுக்கும் பொருளாதார வேறுபாடு, சாதி வேறுபாடு, சமூகக்கட்டுப்பாடு ஆகியவைகளைப் படைத்து, அவைகளை எதிர்க்கும் இளைய தலைமுறையினரின் மனநிலையை அகிலன் வெளிப்படுத் தினார். இந்தக்காலச் சிறுகதைகளின் வடிவத்தில் அவர் ஆழமான கவனம் செலுத்தினார். விடுதலைப் போராட்டகால

நிகழ்வுகளைச் சில கதைகளில் அகிலன் படைத்துள்ளார். மாறிவரும் சமுதாய அமைப்பிற்குத் துணைசெய்யாத பழைய வாழ்க்கைமுறை, சமூகமதிப்புகள், மரபு சார்ந்த பழமைப் போக்கு, கட்டுப்பாடு, சாதியமைப்பு போன்றவற்றை.அகிலன் இக்காலக் கதைகளில் எதிர்க்கிறார். மனிதாபிமானத்தை மறந்துவிட்ட சமூகப்போக்கை அவர் கண்டிக்கிறார். மனிதநலனுக்கு எதிரான தீமைகளை எதிர்க்கும் பண்பை அகிலனின் இக்காலச் சிறுகதைகளில் காணலாம். இப்போக்கு அவருடைய படைப்புக்களில் தொடர்ந்து இடம்பெறுவதைக் காணலாம்.

இடைக்காலத்தில் வறுமை, வர்க்க முரண்பாடு, ஏழைகளுக்கு உதவாமல், செல்வந்தர்களுக்குச் சாதகமாக உள்ள சட்டதிட்டம், அரசியல், சமூக அமைப்பு, பண்பாட்டுச் சீர்கேடு, அறிவியல் முன்னேற்றங்களை வளர்ச்சிக்குப் பயன்படுத்தாத நிலை, மனிதாபிமானமற்றுப்போகும் நிலை, இளைஞர் நலனுக்கு எதிரான வாழ்க்கைப்போக்கு என்னும் பல்வேறு சமூகநிலைகளைக் கதைப் பொருள்களாகக் கொண்டு அகிலன் சிறுகதைகளைப் படைத்தார். ஏழைகளை விடவும் பெரியமனிதர்களுக்குச் சாதகமாகவும் பாதுகாப்பாகவும் சமூகஅமைப்பும் சட்ட திட்டமும் அரசியலும் உள்ள நம் சமுதாயநிலையைக் கூறும் 'பெரியமீன்' என்னும் இக்காலச் சிறுகதை குறிப்பிடத்தக்கது. நேரடியாக இல்லாமல், முற்றுருவகமாக (allegory) இச்சிறுகதையை அவர் படைத்துள்ளார். முரண்பட்ட கதைமாந்தர்களைப் படைத்து, அவர்கள் மூலம் தம் கருத்தைக் கூறும் கலைத்திறனை இக்காலச்சிறுகதைகளில் அவர் கையாண்டார். முரண்பட்ட இரு மாந்தர், செயல்; உணர்வுகள் என்பவற்றால் தம் கருத்தைக் கூறும் கதையமைப்பை இக்காலச் சிறுகதைகளில் அகிலன் கையாண்டார். இதே அமைப்பு அவருடைய பிற்காலச் சிறுகதைகளிலும் காணப்படுகிறது. மனிதனுக்கு உதவுவதற்காக, மனிதநேயத்துடன் சமூக மதிப்புகள், சட்டதிட்டங்கள், வாழ்க்கை மரபுகள் இருக்க வேண்டும். மாறாக, மனிதனை மறந்துவிட்டு, அவனை வாழவிடாமல் தடுக்கும் சமூக அமைப்பையும் சட்டதிட்டங்களையும் விழுமியங்களையும் அகிலன் இக்காலச் சிறுகதைகளில் எதிர்க்கிறார். வாழ்க்கை பற்றிய பரந்துபட்ட நோக்கினை மனிதநேய உணர்வுடன் வெளியிடும் சிறுகதைகளை அகிலன் படைத்தார். மனிதனை

நல்லமுறையில் உருவாக்கச் சமுதாய அமைப்பு உதவவேண்டும் என்ற அவருடைய சிந்தனைப்போக்கு வெளிப்படுவதை இக்காலச் சிறுகதைகள் காட்டின.

வடிவ அமைப்பும் உள்ளடக்கமும் ஒன்றோடொன்று இணைந்து செல்லும் சிறுகதைகளை அகிலன் இக்கால கட்டத்தில் படைத்தார். இக்காலக் கதைகளில் கதைமாந்தர் களாக ஏழை எளியவர்கள், பிச்சைக்காரர்கள், திருடர்கள் ஆகிய சமுதாயத்தின் அடிமட்டத்தில் வாடுகின்ற மக்களைப் படைத்தார் அகிலன். நெடுங்காலமாகச் சமூகத்தில் அமுக்கப் பட்ட - ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாக அவருடைய சிறுகதைகள் விளங்கின. இந்தவகையில், பின்னர் வந்த ஜெயகாந்தன் தம்முடைய சிறுகதைகளில் அடிமட்டத்து மக்களைக் கதைமாந்தர்களாகப் படைப்பதற்கு அகிலனின் இக்காலச் சிறுகதைகள் பல முன்மாதிரியாக அமைந்தன. ஏழை, எளியவர்களுக்குச் சோறிடாமல் அவர்களை வாட்டுவதுடன், ஏழைப்பிச்சைக்காரனும் அவன் மனைவியும் நடைபாதை ஓரத்தில் உறவுகொள்ளுவதைக்கூடப் பொறுக்காது, அடித்து விரட்டும் செல்வந்தரையும் அவரை எதிர்த்து நிற்கும் பிச்சைக்காரியையும் அகிலனின் 'வெட்கம்' சிறுகதையில் காணலாம். "உனக்கு வெக்கமாயிருந்தா நீ ஒரு குடிசை கட்டிக் குடுக்கிறதுதானே? நீ தான் உலகத்துக்கே வீடு கட்டித் தர்றியே... எங்களுக்கு ஒருவேளைச் சோறுபோடக்கூட நாதியில்லே; ஒரு முழத்துணி குடுக்க மனுசரில்லே. கிடைக்கிற ஒரே சுகத்தைக் கண்டு ஏன் இப்படி நீங்க வயித்தெரிச்சல் பட்றீங்க" என்று பிச்சைக்காரி அச்செல்வந்தரை எதிர்த்துப் பேசுவதாக அகிலன் 'வெட்கம்' ('வழிபிறந்தது'), ('வெட்கம்') (ப.39) கதையில் படைத்துள்ளார். இக்காலச் சிறுகதைகளில் அன்பும் இரக்கமும் ஏழைகளிடம் இருப்பதாக அகிலன் காட்டுகிறார். இப்பண்பு அவருடைய பிற்காலச் சிறுகதைகளிலும் காணப்படுகிறது. துயரங்கள் நிறைந்த மனித வாழ்க்கையில் எதிர்காலம் நம்பிக்கை ஊட்டுவதாக அமையும் என்பதைப் புலப்படுத்தும் குறியீடாகக் குழந்தை பிறந்ததை அகிலன், 'குழந்தை சிரித்தது' சிறுகதையில் காட்டுகிறார். இதனை, 'சாவும் பயங்கரமும் கொலையும் கொள்ளையும் மிருகத் தனமும் நிறைந்த இந்த உலகத்தில் மனிதத்தன்மை அறவே அழிந்துவிடவில்லை என்பதற்காக அந்தக் குழந்தை மருதாயியைப் பார்த்து நம்பிக்கைகொண்டு அப்படிச்

சிரிக்கிறதா?' என்று, 'குழந்தை சிரித்தது' என்னும் சிறுகதையில் அகிலன் (குழந்தை சிரித்தது ('குழந்தை சிரித்தது'), ப.90) கூறுகிறார். இளைஞர் நலனைப் போற்றிப் பாதுகாத்து அவர்களை நல்வழிப்படுத்தாத சமுதாய அமைப்பை இக்காலச் சிறுகதைகளில் அகிலன் சாடுகிறார். இப்பண்பை அவருடைய பிற்காலச் சிறுகதைகளிலும் காணலாம். மனிதன் ஒவ்வொருவரும் உழைத்துப் பிழைக்க வேண்டுமே அல்லாது, பிறரை ஏமாற்றிப் பிழைக்கவோ, உழைக்காமலே செல்வம் சேர்க்கவோ முயலுதல் கூடாது என்பதை அகிலன் 'காட்டுக்குரங்கு' என்னும் சிறுகதையில் படைத்துள்ளார். நாம் அன்றாடம் காணும் நமக்கு நன்கு தெரிந்த மனிதர்களையும் வாழ்க்கையையும்தான் அகிலன் இச்சிறுகதைகளில் படைத்து உள்ளார். சிறுகதையின் அமைப்பிலும் நோக்குநிலை போன்ற உத்திகளிலும் ஆழ்ந்த கவனத்துடன் படைக்கப்பட்ட கலைப்படைப்புக்களாக அவருடைய இக்காலகட்டச் சிறுகதைகள் உள்ளன.

பிற்காலத்தில் மிகுந்த சமூக உணர்வுடன் அவர் சிறுகதை களைப் படைத்தார். நம்முடைய சமூக அமைப்பில் தங்கிவிட்ட வறுமையைப் போக்க முன்வராததுடன், வறுமையைக்கூடத் தங்கள் புகழை விளம்பரப்படுத்தி வெளிச்சமிட்டுக் காட்டப் பயன்படுத்தும் நிகழ்கால வள்ளல்களை அகிலன் படம் பிடித்துக் காட்டுகிறார். கதைமாந்தர் படைப்பு, பண்புநலன், நிகழ்ச்சி என்ற ஒவ்வொன்றிலும் ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட இரண்டை மோதவிடுவதன் வாயிலாகக் கதைமாந்தர் பண்பையும் கதைப்பொருளையும் தம் கருத்தையும் வெளியிட்டுக்கொள்ளும் அமைப்பிலே அகிலன் இக்காலச் சிறுகதைகளைப் படைத்துள்ளார். செல்வர்களின் தன்னல வேட்கையையும் பொது நலனை மறந்துவிட்ட அவர்கள் பண்பையும் அகிலன் பல சிறுகதைகளில் காட்டுகிறார். "இந்த வள்ளல்களோட அறிவுக்கும் திறமைக்கும் சக்திக்கும் இவங்களுக்கு மனச்சாட்சிங்கற ஒண்ணு மட்டும் இருந்திட்டா இத்தனை பேர் ஏழை, எளியவங்க இந்தப் பக்கத்திலேயே இருந்திருக்கமாட்டாங்க. இவங்க நினைச்சிருந்தா, இங்கே அத்தனை பேரையும் எப்பவுமே பட்டினியில்லாம காப்பாத்தியிருக்கலாமே" என்று 'தெய்வத்தின் குரல்' என்னும் சிறுகதையில் அகிலன் (சகோதரர் அன்றோ (தெய்வத்தின் குரல்), பக்.98-99) காட்டியுள்ளார். இது, சமூகச்சிக்கலை அவர்

அணுகியுள்ள முறையைக் காட்டும். பரந்த அளவில் மக்களைச் சென்றடையும் திரைப்படம், பத்திரிகை, மேடைப்பேச்சு என்பவைகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, அவைகள் மூலம் தங்கள் புகழைப் பரப்பி வருகின்றனர் செல்வர்கள். வயிற்றுக்கு இன்றி வாடும் ஏழை, எளிய மக்கள் கூட்டத்தைச் சிந்திக்கவிடாமல், அறியாமையிலே செல்வர்கள் அவர்களை வைத்துள்ளனர். ஏழைமக்கள் சிந்தித்துச் செயற்பட்டால், தங்களை எதிர்க்க முற்படுவர் என்பதால், அவர்கள் சிந்தனையை மரத்துப்போகச் செய்ய முற்பட்டுச் செயல் புரிகின்றனர் என்று அகிலன் இக்காலச் சிறுகதைகளில் காட்டுகிறார். வறுமையால் வாடும் ஏழைமக்கள் கூட்டமோ திரைப்படம் காண்பதற்குக் கூட்டம் கூட்டமாகச் செல்கின்றனர். திரைப்படம் காட்டும் நிழலான வாழ்வு நிலையானதென்று நம்பி ஏமாறுகின்றனர். திரைப்பட நடிகர், அரசியல்வாதி, சமயவாதி ஆகியோர் நடத்தும் இரட்டை வாழ்வில் ஏமாந்து, தங்களை இழக்கின்றனர் என்று அகிலன் காட்டுகிறார்.

திரைப்படம், அரசியல், பத்திரிகை போன்ற எதுவாயினும், மனிதநலன், சமுதாயமேம்பாடு ஆகியவற்றிற்கு எதிராகச் செயல்படுவதை அகிலன், இக்காலத்தில் வெளியான தம் சிறுக்தைகளில் கண்டிக்கிறார். இக்காலகட்டத்தில் வெளியான 'எரிமலை' என்னும் சிறுகதை குறிப்பிடத்தக்கதாகும். மனித மனத்தை - ஆன்மாவைக்கெடுக்கும் இதழ்கள் செய்யும் இழிதொழில் மிகக்கொடியது என்று அகிலன் இச்சிறு கதையில் காட்டுகிறார். இதழ்களும் இலக்கியமும் மனிதமனத்தைப் பாழ் செய்வதைத் தொடர்ந்து எதிர்த்து எழுதி, சொல்வேறு-செயல்வேறு என்று வாழும் சமுதாயப் புல்லுருவிகளை அகிலன் இக்கதையில் இனங்காட்டுகிறார். "அறிவு பணத்துக்கு அடிமையாகி, இயந்திரத்தின் துணைக்கொண்டு, மனித ஆன்மாவைக் கெடுப்பதென்றால், கோடிக்கணக்கான ஆன்மாக்களைக் குறைந்த நேரத்தில் கெடுக்கமுடியும். எந்திரத்தால் மனிதனை மிருகமாக் கினீர்களோ, பிறகு அவன் உங்கள் மீதுதான் பாய்வான்" என்று 'எரிமலை' என்னும் சிறுகதையில் அகிலன் (எரிமலை (எரிமலை) ப.26) கூறுகிறார்.

நாட்டின் பொருளாதாரச் சீர்கேடு, வாழ்க்கைநிலைத் தாழ்வு, மனிதமன வீழ்ச்சி ஆகியவைகளுக்குத் துணைபோகும்

பத்திரிகைகளின் போக்கினைத் தொடர்ந்து பல சிறுகதைகளில் அகிலன் கண்டித்து எழுதும் போக்கினை இக்காலச் சிறுகதைகள் பலவற்றில் காணலாம். நல்லசமுதாயம் உருவாக ஆசிரியர், மாணவர், எழுத்தாளர், நல்ல நூல்களை வெளியிடும் நூல் வெளியீட்டாளர் என அனைவரும் உழைக்க வேண்டும் என்று அகிலன் காட்டுகிறார். அரசின் நூலக இயக்கத்தால், பணம் சேர்க்கும் வியாபாரிகளான பதிப்பாளர்களும் திடீர் எழுத்தாளர்களும் தோன்றி, மட்டமான எழுத்துக்களை உற்பத்திசெய்து, பணங்குவிக்கின்றனர் என்று 'கையிலும் பில்லிலும்', 'எத்தனும் எழுத்தாளனும்' கதைகளில் அகிலன் காட்டுகிறார். பணமே முதன்மை ஆவதால், முதலாளித்துவச் சமூக அமைப்பின் அனைத்துவிதமான தீமைகளும் பெருகுகின்றன என்பதையும், சமுதாயச் சீர்கேட்டிற்கு இதனால் அடிகோலுகின்றனர் என்பதையும் 'எத்தனும் எழுத்தாளனும்' சிறுகதையில் அவர் படைத்துள்ளார். இத்தகைய போக்கு நீடித்தால் நல்ல சமூகம் உருவாக உழைப்பவன் எல்லாம் சமூகத்தில் இருந்து ஒதுங்கிவிடக்கூடும் எனவும் அவனை இழப்பது சமுதாயச் சீரழிவிற்குத் துணைபோவதாக முடியும் எனவும் 'எத்தனும் எழுத்தாளனும்' சிறுகதையில் அகிலன் காட்டுகிறார். இதே கருத்தை அகிலன் வேறொரு கட்டுரையிலும், "பேனா பிடிப்பவனை எந்தச் சமுதாயம் அலட்சியம் செய்கிறதோ, அதன் தலை துப்பாக்கி பிடிப்பவனைச் சுமக்க நேரிடும் என்பதைச் சொல்லுவதும் என் கடமை" (கதைக்கலை, எழுத்துலகுக்கு ஓர் அறைகூவல், ப.151) என்று கூறியுள்ளார். சமுதாய மேன்மைக்கு உழைப்பவனைப் புறக்கணித்தால், சமூகம் சீர்கேடும் அடையும் என்பதை அவர் வலியுறுத்தி வந்துள்ளார்.

பெண்விடுதலை, பெண்ணுக்குக் கல்வியிலும் வேலை வாய்ப்பிலும் சமஉரிமை கிடைத்தாலும், அலுவலகச் சூழல்களிலும் குடும்பத்திலும் பெண்களுக்கு ஏற்படும் சிக்கல்களை இக்காலச் சிறுகதைகளில் அகிலன் படைத்துள்ளார். பெண்ணுக்கு வாழ்க்கை சரிவர அமையாதநிலை, பெண்ணைச் சார்ந்தவர்கள் பெண்ணைத் துயர்ப்படுத்திப் பணம் பறிக்கும் நிலை ஆகியவற்றை அகிலன் படைத்துள்ளார். வாழ்க்கையைச் செம்மைப்படுத்தவும் திருத்தவும் படைப்பு பயன்படவேண்டும் என்னும் கலைக்கொள்கையை அகிலன் சிறுகதைகளில் தொடர்ந்து வெளிப்படுத்தியுள்ளார்.

கதை கூறும் திறன்களில் பலவிதமான உத்திகளை அகிலன் ஆள்கிறார். கதை கூறும் நோக்குநிலையில் ஆசிரியர் கூற்று முறையை மிகுதியும் பயன்படுத்தியுள்ளார் படர்க்கைக் கூற்றில் அனைத்தும் அறிந்த இறைநிலை, ஆசிரியர் துணைமாந்தராக வரும் நிலை, கதைமாந்தர் ஒருவரிடம் உரையாடியபோது அறிந்த கதையை வாசகருக்குக் கூறும் முறை என்ற முறைகளை அகிலன் ஆண்டுள்ளார். தலைமை மாந்தர் கூற்று, துணைமாந்தர் கூற்று, மாந்தர் பலர் கூற்று, கடிதமுறை, நாட்குறிப்புமுறை என்னும் பலவகையான கூற்றுமுறைகளை அகிலன் பயன்படுத்தியுள்ளார். எந்தவகையான கதைக்கு எந்தவகைக் கூற்றுமுறை பொருந்தும் என்று தெரிந்து அவர் பயன்படுத்துகிறார். உள்ளடக்கத்திற்கு ஏற்ற பொருத்தமான நோக்குநிலையை அவர் ஆள்கிறார். சிறுகதை மிகவும் விரைவாக ஓடும் குதிரைப்பந்தயம் போன்றது. அதில் கதை நிகழும் காலம் மிக விரைந்து செல்லும். கதையைக் காலவரிசைப்படி-நிகழ்ச்சிகள் நடந்த முறைப்படி-கூறுவது ஒருமுறை. மாறாக, இடையில் கதையைத் துவங்கி முன் நிகழ்ந்ததை நினைவின் அலைகளாகப் பின்னோக்கு உத்தி (Flash back) வாயிலாகக் கூறுவது ஒரு வகை. பின்னோக்கு உத்தியைப் பலவிதமான முறைகளில் அகிலன் பயன்படுத்தியுள்ளார். 'இரவு-பகல்' என்னும் சிறுகதையில், நிகழ்காலக் கதையை 'இரவு' என்னும் உட்தலைப்பில் கூறுகிறார். கடந்தகாலக் கதையைக் கூறுமிடத்தில் 'பகல்' என்று உட்தலைப்பை ஆளுகிறார். மீண்டும் நிகழ்காலத்திற்கு மாறுமிடத்தில் 'இரவு' என்று நுட்பமாக ஆள்கிறார். 'மகிழம்பூ' சிறுகதையில், பின்னோக்குத் திறனை மிகுந்த நுட்பத்துடனும் கலை நோக்குடனும் அகிலன் ஆண்டுள்ளார். 'மேசையில் குவிந்து கிடந்த மகிழம்பூ இப்போது வாடியிருந்தது. வாடவாடத்தான் அதற்கு மணம் அதிகம் போலும். அதையே வெறித்துப் பார்த்துக்கொண்டு அவர் உட்கார்ந்துவிட்டார்' (ஒருவேளைச் சோறு (மகிழம்பூ), ப.84) என்று பின்னோக்கு தொடங்குவது காட்டப்படுகிறது.. இதுவரை நிகழ்காலத்தில் நடந்த கதை இப்போது இறந்த காலத்திற்கு மாறுகிறது. காலமாற்றத்தை-பின்னோக்கு தொடங்குவதை - மகிழம்பூ மலர்களை டாக்டர் முருகேசன் வெறித்துப்பார்ப்பது மூலம் காட்டுகிறார் அகிலன். கதை முடிவில், 'ஆஸ்பத்திரி விடுதிக்கு அவர் திரும்பியபோது, அவரை அறைக்குள் இருந்த மகிழம்பூவின் மணம் வரவேற்றது'

(ப.96) என்று வருவது கால மாற்றத்தை - மீண்டும் நிகழ்காலத்திற்கு வருவதைக் காட்டும். இச்சிறுகதையில் மகிழம்பூ குறியீடாக மனத்தில் உள்ள காதலைக் குறிக்க ஆளப்பட்டுள்ளது. அதைக் கொண்டே, பின்னோக்கு உத்தியைப் புலப்படுத்துவது மிகச்சிறந்த முறையாகும்.

ஒரு கதையின் தொடர்ச்சியாக மற்றொரு சிறுகதை யினையும் ஆசிரியர் படைத்தால், அவ்விரு சிறுகதைகளும் மாட்டேற்றுக் கதைகள் ஆகும் ஒரு சிறுகதையின் முடிவிலிருந்து துவங்கி முதல் சிறுகதையில் எழுப்பப்பட்ட சிக்கலுக்கு வேறொரு வகையில் தீர்வு தருமாறு இரண்டாவது கதை அமையும். இரண்டும் அதனதன் அளவில் தனித் தனிச் சிறுகதைகள். ஆயினும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டு வரும் தன்மை காரணமாக, மாட்டேற்றுக் கதைகள் என அழைக்கப்படுகின்றன. 'கோஷா' 'கதையின் முடிவு' ஆகிய இரு சிறுகதைகளும் இவ்வாறு அமைந்தவை. ஒரு சிறுகதையின் முடிவுபோல மற்றொரு சிறுகதையின் முடிவு அமைந்தாலும், இரு சிறுகதைகளிலும் இரு வேறுபட்ட மாந்தர்களின் பண்புகள் விளக்கம் பெறுவது ஒருவகை, 'மின்னுவதெல்லாம்', 'கதையும் பதிலும்' ஆகிய இரு சிறுகதைகள் இவ்வகைக்குச் சான்றுகளாகும். 'மின்னுவதெல்லாம்' சிறுகதை மனோர மாவிற்கு ஏற்பட்ட முடிவே, 'கதையும் பதிலும்' சிறுகதை அவளுக்கும் (இக்கதையில் அந்தப் பெண் மாந்தருக்குப் பெயர் சுட்டப்படவில்லை; அவள் என்ற சுட்டுப்பெயரே கதை நெடுக ஆளப்படுகிறது) ஏற்படுகிறது. ஆயினும், 'மின்னுவதெல்லாம்', சிறுகதை பெண்ணின் பண்பை முதன்மைப்படுத்த, 'கதையும் பதிலும்' சிறுகதையில் ஆணின் பண்பு முதன்மை பெறுகிறது. இதனை, "அந்தக் கதையின் (மின்னுவதெல்லாம்) முடிவிற்கும் என் வாழ்வின் நிகழ்ச்சிக்கும் ஓர் ஒற்றுமை இருக்கிறது... தங்களுடைய கதையின் முடிவு என்னுடைய இந்தக் கதையின் ஆரம்பத்திற்குக் காரணமாயிருந்தது. நீங்கள் ஒரு பெண்ணைப் பற்றி எழுதியிருந்தீர்கள்... நான் ஒரு ஆணைப் பற்றி எழுதப் போகிறேன்' என்று வரும் 'கதையும் பதிலும்' கதையின் கூற்று (சத்திய ஆவேசம் ('கதையும் பதிலும்'), ப.147) இதனைக் காட்டும்.

கதையின் கருவையோ, கதை மாந்தர் பண்பையோ நேரடியாகக் கூறாமல், ஏதேனும் குறியீட்டால் உருவகித்துக் கூறுகிறார் ஆசிரியர். ஏதேனும் ஒரு நிலையில், குறியீட்டைப்

பயன்படுத்துவது அல்லாமல் கதை முழுவதிலும் - தலைப்பு முதல் இறுதி வரை எல்லா நிலைகளிலும் - குறியீட்டைப் பயன்படுத்துவது, முற்றுருவகம் (allegory) எனப்படும். இவ்வகைக் கதைகளில், நேரடியாகக் கூறிய கதை ஒன்றாகவும், உருவகமாகக் குறிப்பிடப்படும் - கூறாமல் உணர்த்தப்படும் கதை வேறொன்றாகவும் இருக்கும். ஏனைய சிறுகதைகளைப் போல அல்லாமல், இவ்வகைக்கதைகள் அளவில் சிறியதாக இருக்கும். 'பெரியமீன்', 'காட்டுக் குரங்கு', 'பலூனும் பலாப்பழமும்', 'கூட்டுக் குடும்பம்' ஆகிய சிறுகதைகளை அகிலன் இவ்வகையில் படைத்துள்ளார். இவ்வகைக் கதைகளில், விலங்குகளைப் படைத்து, அவைகளின் மூலமாக ஆசிரியர் கருத்தைக் கூறுகிறார். சான்றாகப் 'பெரியமீன்' கதையில், வலையில் பிடிபட்டுத் தப்பிச் செல்லும் மீன் கூறுவதாக, "பலம் மிகுந்த நம்மைக் கட்டுப்படுத்த இன்னும் வலை அவர்களிடம் தயாராகவில்லை. அப்படியே நாம் அகப்பட்டு அவர்களிடம் சென்றால்கூட, இப்போது நம்மைக் கண்டு அவர்கள் பயப்படத்தான் செய்வார்கள். கரைக்குப் போன பிறகுகூட நாம் துள்ளி நீரில் விழுந்தால், அவர்களுக்குப் பிடிக்கத் துணிவு கிடையாது. ஏன் தெரியுமா? நாம் பெரிய மீன்கள்" (அமராவதிக்கரையில் (பெரிய மீன்), ப. 50) என்று வரும் கூற்று இதைப் புலப்படுத்தும். சில கதைகளில், கதை மாந்தர்களுக்குப் பெயரில்லாமல் அகிலன் படைத்துள்ளார். சிறுகதையின் கலைத்திறனிற்காகவும் கதையில் இடம் பெறும் பிரச்சினையின் பொதுப்பண்பிற்காகவும் கதை மாந்தருக்குப் பெயர் சூட்டாமல் அவன், அவள் என்று சுட்டுப் பெயர்களால் மட்டுமே குறிப்பிடுகிறார். 'கரும்பு தின்னக்கூலி', 'பையனும் பெண்ணும்', 'அவளுக்கு', 'பிள்ளைவரம்', 'காட்டு மிராண்டிகள்', 'நல்லவர் கெட்டவர்', 'பூச்சாண்டி', 'காக்கைச் சிறகினிலே,' 'நாட்டு மருந்து', 'கதையும் பதிலும்', 'அடிமைப்பெண்' ஆகிய சிறுகதைகளில் இவ்வாறு சுட்டுப்பெயர்களைக் கையாண்டுள்ளார். 'பிள்ளைவரம்' என்ற சிறுகதையில், வறுமையில் வாடும் ஏழை ஒருவன், அவன் மனைவி, குழந்தை, அவர்களுடைய கதையை எடுத்துரைக்கும் கதையாசிரியர் என்று வரும் கதைமாந்தர் யாருக்கும் பெயர் சூட்டப்படவில்லை. கதையாசிரியரின் தன்மைக் கூற்றில் கதை சொல்லப்படுகிறது. சமூகத்தில் காணப்படும் பொருளாதார முரண்பாட்டை எடுத்துக்காட்டி வறுமையின் கொடுமையால்

தாம் பெற்ற பிள்ளையையே விற்று விடுகிறான் ஏழை என்று காட்டுகிறார் அகிலன். "இனிமேல் பிள்ளை வரம் வேண்டாங்க; பசியா வரம் படைத்தவங்களுக்குத்தான் பிள்ளைவரம் தேவை" (செங்கரும்பு ('பிள்ளைவரம்') ப.71) என்று வரும் கூற்றால் இதனை அறியலாம். வறுமை ஒரு மனிதனுடைய பிள்ளைப் பாச உணர்வைக்கூட, பின்தள்ளி, அவனை வதைக்கிறது என்னும் சமூகப் பிரச்சினையை வலியுறுத்தும் இக்கதையில், கதை மாந்தர்களின் பெயர் முதன்மை பெறவில்லை. தமிழ் இலக்கிய மரபில், அனைவருக்கும் பொதுவான காதல் உணர்ச்சியைக் கூறும் அகப்பாடல்களுக்குச் 'சுட்டி ஒருவர் பெயர்' கூறப்படாமல் பொதுமையாக உணர்வை வெளிப் படுத்தும் சங்கப்பாடல் மரபு உள்ளது. அந்த அடிப்படையில், பொதுமையான சமூகப் பிரச்சினை என்பதால், சிறுகதையிலும் அகிலன் அம்மரபைப் போற்றியுள்ளார்.

வாழ்க்கை இப்போதுள்ள நிலையிலிருந்து மேன்மேலும் உயர்வதாக அமையவேண்டும். அதற்குத் துணைபுரியும் வண்ணம் சமுதாய அமைப்பும் சட்டதிட்டமும் கட்டுப்பாடும் மரபுகளும் சமூகமதிப்புகளும் இருக்கவேண்டும். இலக்கியம், திரைப்படம், அரசியல், பத்திரிகை, மேடைப்பேச்சு என்ற அனைத்தும் மனித வாழ்க்கை மேன்மை அடையத் துணைபுரியவேண்டும் என்னும் வாழ்க்கை நோக்கை அகிலன் சிறுகதைகளில் வெளிப்படுத்தியுள்ளார். மக்களின் சிந்தனை ஆற்றலைத் தூண்டி, அவர்கள் முன்னேறுவதற்கு உதவுமாறு இவை யாவும் இருக்கவேண்டும். இதனை, 'மூளை உள்ளவனிடம் உண்மையை அழகாய்ச் சொல்லிப் பிழைக்கவேண்டியிருக்கிறது' (வழிபிறந்தது (வெறி), ப.121) என்று வரும் கூற்றால் உணரலாம். இதற்கு மாறாக மனிதனுடைய மேம்பாட்டிற்கும், வாழ்க்கைப் போக்கிற்கும் எதிராக உள்ள தீமைகள் எந்தத்துறையில், யாரிடம் இருந்தாலும் அதை எதிர்த்துப்போராட வேண்டும் என்று அகிலன் இச்சிறுகதைகளில் காட்டுகிறார். தீமையைத் தீமை என்று தெரிந்தும், அதனைக் கண்டு ஒதுங்கிச் செல்லுதல் கூடாது; அதனை எதிர்த்துப்போராடவேண்டும் என்னும் கருத்தை வாழ்க்கையின் மையநோக்கமாக, தம்முடைய சிறுகதைகளில் அகிலன் காட்டுகிறார். போராட்டமாக வாழ்க்கை இருந்தாலும், எதிர்காலம் சிறப்பானதாக அமையும் என்று நம்பிக்கைக்குரல் கொடுப்பதாகச் சிறுகதைகளைப்

படைத்துள்ளார். துயரங்களுக்கு நடுவிலும், குழந்தையைக் கண்டு, தாய் மகிழ்ச்சி கொள்ளுவதைச் சிறுகதைகளில் காட்டுகிறார். இது, எதிர்கால வாழ்க்கை நம்பிக்கையுடையதாக இருக்கும் என்பதை விளக்கும் குறியீடு ஆகும். 'சிசுவின் குரல்', 'தாலிக்கயிறு', 'குழந்தை சிரித்தது', 'சினிமாக்கதை', 'வாழப்பிறந்தவன்' ஆகிய சிறுகதைகளில் இதைக் காணலாம். "கவலைப்படாதே! நமக்கு இன்னொரு மகன் பிறக்கப் போகிறான். அவ்வளவுதானே!" மெல்ல அவளருகில் சென்று அவளுக்கு ஆறுதல் கூற முற்பட்டான் செல்லப்பா. இப்போது அவன், வாழ்க்கையை வெறுக்கவில்லை. அதனுடன் போராடப் புதிய தெம்போடு புறப்பட்டான்" (சத்திய ஆவேசம் (வாழப்பிறந்தவன்) ப.37) என்று வருமிடம் இதைப் புலப்படுத்தும்.

இப்படித்தான் வாழவேண்டும் என்னும் குறிக்கோள் உடையதாகச் சிறுகதைகளை அகிலன் படைக்கிறார். நடப்பியல் நெறியில் படைத்தாலும், குறிக்கோள் பாங்கு இதில் புலனாகிறது. சிறுகதையின் கருப்பொருள் புலப்பாட்டிற்கு ஏற்ற அமைப்பை அகிலன் ஆண்டுள்ளார். உள்ளடக்கத்திற்கு ஏற்ற உருவ அமைப்பை அவர் ஆள்கிறார். அமைப்பிற்கும் கதைக்கருவிற்கும் ஏற்றமுறையில் ஒவ்வொரு உத்தியையும் அவர் ஆள்கிறார். சிறுகதையின் ஒருமைப்பாடு வெளியாகும் வண்ணம் உத்திகளைப் பயன்படுத்தி, கதையின் கருப் பொருளும் அமைப்பும் சிறக்குமாறு அகிலன் சிறுகதைகளைப் படைத்துள்ளார். சிறுகதையின் கருப்பொருளிற்கு இயைந்து வராத, செயற்கையான அமைப்பை அவருடைய சிறுகதை களில் காணமுடிவதில்லை. இதனால் அவருடைய கலைக்கொள்கையில் உள்ளடக்கம் முதன்மை பெறுகிறது. "உருவ அமைதி என்னும் கலைக்கட்டுக்கோப்பின், புறஅழகைவிட, கருத்தழகுக்கு முதலிடம் தர வேண்டியுள்ளது' என்று வரும் அகிலன் கூற்றாலும் (எரிமலை, ('இந்தக்கதைகள்' என்னும் முன்னுரை), ப.5) அறியலாம். 'தணியுமா?', 'இளமையில் நடந்தது' ஆகிய தொடக்ககாலச் சிறுகதைகளில், கதையின் இறுதியில் நோக்குநிலை மாற்றம் தந்து, ஆசிரியர் இடையிட்டுப் பேசுகிறார். இது, உள்ளடக்கத்திற்கு முதன்மை தரும் நோக்கத்தில், படிக்கும் வாசகனுக்குப் புரியவைக்க வேண்டும் என்பதற்காக அமையும் ஆசிரியரின் குறுக்கீடு ஆகும். கதையில் உணர்த்துவதற்குப் பதிலாக, நேரடியாகக்

கூறுவது, கதையின் ஓட்டத்தைத் தடை செய்வதுடன், கலையழகையும் பாதிக்கிறது. 'புலருக்கு அவன் தண்ணீர் கொடுத்திருக்கிறான்; அவனுக்குக் கிடைக்கவில்லை' என்று வருவதுடன் 'தணியுமா?' சிறுகதை முடித்துவிடுகிறது. அதற்குப் பின்னர், 'அவன் பட்டினியால் செத்த செய்தி எந்தப் பத்திரிகையிலும் வெளிவரவில்லை. ஏனென்றால், வங்காளத்தில் லட்சக்கணக்கில் செத்துக் கொண்டிருந் தவர்களைப் பற்றியே வெளியிட அவைகளில் இடமில்லா திருந்தது' (சக்திவேல் (தணியுமா?'), ப.150) என்று வரும் வரிகள் மிகுதியாக, கட்டுரைத் தன்மையில் உள்ளன. 'அவன் தண்ணீர் கிடைக்காமல் இறந்துபோனான்' என்று வெளிப்படையாக ஆசிரியர் கூறுவது, கதையின் வடிவச்செம்மையை - கலையழகைச் சிதைக்கிறது. தொடக்ககாலச் சிறுகதைகளில், இவ்வாறு ஆசிரியர் வெளிப்படப் பேசும் போக்கு உள்ளது. பிற்காலச் சிறுகதைகளில் சிலவற்றில் உள்ளடக்கத்திற்கு முதன்மை தந்து, அதனால் வடிவம் நீண்டு, ஒருமைப்பாடு சிதைந்த போக்கு காணப்படுகிறது. 'கொஞ்சம் லஞ்சம்', 'நரகாசுரர்புரம்', 'பசி, பசு, பாசம்', 'சட்டம் என்ற கழுதை', 'கையிலும் பில்லிலும்' போன்ற சிறுகதைகள் இதற்குச் சான்று.

சிறுகதையின் வடிவத்தைப் பொருத்ததல்ல ஒருமைப்பாடு. சிறுகதையின் ஒருமைப்பாடு, அனைத்துக் கூறுகளையும் ஒன்றாக ஒருமுனைப்பட அமைப்பதாகும். ஆசிரியரின் இடையீடு, சிந்தனையை நேரடியாக வெளியிடுவது, கலைத் திறனைச் சரிவர ஆளாதது காரணமாகக் கதையின் ஒருமைப்பாடு சிதைகிறது என அறியலாம். மற்றபடி வடிவம் காரணமாகக் கதையின் ஒருமைப்பாடு சிதையாது, நீண்டவடிவம் இருந்தும் ஒருமைப்பாடு குன்றாத கலைநயம் சிறந்த 'பூச்சாண்டி','எரிமலை' போன்ற சிறுகதைகள் இதைக் காட்டும்.

சிறுகதையின் கருப்பொருள், கதையின் அமைப்பு, உத்தி என்ற மூன்றும் சிறந்த சிறுகதைகள் பலவற்றைப் படைத்துள்ள அகிலனுக்குத் தமிழ்ச் சிறுகதையுலகில் குறிப்பிடத்தக்க இடம் உண்டு. பொருளாதாரச் சிக்கல், வர்க்கமுரண், வறுமைத் துயர், சாதிவேறுபாடு போன்ற பல்வேறு சமூகச் சிக்கல்களைக் கருப்பொருளாகக் கொண்டு அகிலன் சிறுகதைகளைப் படைத்தார். சமூக அடிமட்டத்து மக்கள் சிக்கல்களை மையமிட்டு, அம்மக்களைக் கதைமாந்தர்களாக ஆக்கிச்

சிறுகதை படைத்த பெருமை அகிலனுக்கு உண்டு. சிக்கல்களைப் படைத்ததுடன் அவற்றிற்குத் தீர்வை காட்டுவதிலும் அவர் நாட்டம் செலுத்தினார். அந்தத் தீர்வை சமுதாய மேன்மை, சமூகமதிப்பு, இந்திய வாழ்க்கைப் பின்னணி, தமிழ்ப் பண்பாட்டுச் சூழல் ஆகியவைகளுக்கு ஏற்ப அமையுமாறு அவர் படைத்தார். சிறுகதையின் அமைப்பு, உத்தி ஆகியவற்றில் பல சோதனைகளை மேற்கொண்டதும், சில புதிய உத்திகளை ஆண்டதும் அவருக்குத் தமிழ்ச் சிறுகதையுலகில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுத் தந்துள்ளது. புதுமைப்பித்தனுக்குப் பின் தமிழ்ச் சிறுகதை யுலகில், சமுதாயச் சிக்கல்களை மிகுதியும் தம் சிறுகதைகளில் படைத்தவர் அகிலன். அவரைச் சிறுகதையாளராகக் கண்டு, ஆராய நிறைய வாய்ப்புகள் அவருடைய சிறுகதைகளில் உள்ளன.

இயல் – 4

நாவல்கள்

அகிலன் நாவலாசிரியராகவே பெரிதும் அறியப் பட்டுள்ளார். அவர் 19 நாவல்களைப் படைத்துள்ளார். அவைகளுள் வரலாற்று நாவல்கள் மூன்று. அவை, வேங்கையின் மைந்தன், கயல்விழி, வெற்றித் திருநகர் என்பன ஆகும். ஏனைய பதினாறு நாவல்களும் சமூகநாவல்கள். பெண், இன்பநினைவு, துணைவி, சிநேகிதி, சந்திப்பு, நெஞ்சின் அலைகள், அவளுக்கு, வாழ்வுஎங்கே, பாவை விளக்கு, புதுவெள்ளம், பொன்மலர், சித்திரப்பாவை, கொள்ளைக் காரன், எங்கே போகிறோம், பால்மரக்காட்டினிலே, வானமா பூமியா ஆகியன அவை. இவைகளுள் பெண், இன்ப நினைவு, துணைவி, சிநேகிதி, சந்திப்பு, அவளுக்கு, கொள்ளைக்காரன் என்பன சிறிய நாவல்கள். ஏனையன பெரிய நாவல்கள். இவை யாவும் வெவ்வேறு சமூகச் சிக்கல்களை வேறுபட்ட தளங்களில் பேசுவன. ஆயினும் அடிப்படையில், இந்திய நாட்டு விடுதலைக்கு முன்பு காணப்பட்ட தமிழக வாழ்க்கைச் சூழலையும், விடுதலைபெற்ற பின்னர் உள்ள வாழ்க்கைச் சூழலையும் இவை காட்டுகின்றன. குடும்ப வாழ்வை மையமாக வைத்து, தமிழ்ச் சமுதாய வாழ்வைச் சமூக, பொருளாதார, அரசியல் பின்னணியில் இந்த நாவல்கள் காட்டுகின்றன. அடிப்படையில் இந்த நாவல்கள் யாவும் குடும்ப அமைப்பில் எழும் சிக்கல்கள், தனிமனிதச் சிக்கல்கள் ஆகியவற்றை மையமிட்டு அமைந்தவை. சமூக வாழ்க்கையில் காணப்படும் பொருளதாரச் சிக்கல், வர்க்கமுரண், சாதி வேறுபாடு, பெண்களுக்கு எதிரான கொடுமைகள், பொதுவாழ்வில் காணப்படும் ஒழுக்கக்கேடு, லஞ்சம், அரசியல் சீர்கேடுகள், கள்ளச்சந்தை வணிகம், கறுப்புப்பணம் ஆகியவை மனிதவாழ்வைப் பாதிக்கும் அவலத்தை இந்த நாவல்களில் அகிலன் காட்டுகிறார். சமூகச் சீர்கேடுகளையும் அவை உருவாவதற்கான காரணங்களையும் சீர்கேடுகளரல் ஏற்படும் விளைவுகளையும் அகிலன் இந்த நாவல்களில் படைத்துக்

காட்டியுள்ளார். இச்சீர்கேடுகள் நீங்கி நன்னிலை அடையும் நெறிகளையும் அகிலன் சமூக நாவல்களில் காட்டியுள்ளார். சமூகத் தீமைகளை எதிர்த்துப் போராடவேண்டும் என்பதை இந்த நாவல்களில் காட்டுகிறார். தீமைகளை நாம் களையாவிட்டால், வன்முறையும் தீவிரவாதமும் தலைதூக்கும் எனவும், அகிம்சைக்கும் உண்மைக்கும் மாறான வன்முறைப் போக்கு உருவாகும் எனவும் அகிலன் மீண்டும் மீண்டும் காட்டுகிறார். முதலாளித்துவ சமூக அமைப்பு மாறவேண்டும் என்று காட்டுகிறார்.

அடிப்படையில் அகிலன் காந்திய நெறியாளர். காந்தியக் கொள்கைகளையும் விடுதலைப் போராட்ட காலப் பின்னணியையும் தம்முடைய சமூகநாவல்களில் அவர் மீண்டும் மீண்டும் வெளிப்படுத்தினார். காந்தியக் கொள்கைகளை அடிப்படை நெறிகளாகக் கொள்ளாமல், போலியாக வாழ்ந்து, பணம்பெருக்கும் பொய்மையாளர்களைத் தோலுரித்துக் காட்டினார். சமூக, அரசியல், பொருளாதார நிலைப்பாடுகளை விமர்சன நடப்பியல் நெறியில் காட்டினார் அகிலன். சமூகமாற்றம் ஏற்படவேண்டும் என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். காந்தியநெறியை இலட்சியநிலையில் காட்டினார்.

அகிலன் தொடக்ககாலத்தில் சிறு நாவல்களையே படைத்தார். மங்கிய நிலவு என்பதுதான் அவருடைய முதல் நாவல். இந்த நாவல் பின்னர் சில மாற்றங்களுடன் இன்பநினைவு என்னும் பெயரில் வெளியானது. மங்கிய நிலவு நாவல், விடுதலைப் போராட்ட பின்னணியில் எழுதப்பட்டது. விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு அடிபட்ட நிலையில் துன்புற்ற இராமநாதனைக் காப்பாற்றி உதவுகிறாள் கமலம். அவர்களுக்குள் காதல் மலர்கிறது. பெண்பற்றி இருவேறுபட்ட எண்ணங்களையுடைய சுப்பையாவும் (இராமநாதனை விடுத்து சுப்பையாவை மணக்கிறாள் கமலம்) இராமநாதனும் சிறையில் சந்திப்பதில் நாவல் தொடங்குகிறது. பின்னோக்கில் பழைய கதை நினைவு ஓட்டத்தில் காட்டப்படுகிறது. இந்தியச் சூழலில், தமிழகக் குடும்ப அமைப்பில் பெண்ணின் நிலை இச்சிறு நாவலில் மையமாகிறது. பெண்களின் துயரமான வாழ்க்கையும் அதற்குரிய காரணங்களும் மங்கியநிலவு தொடங்கி அகிலனுடைய பல நாவல்களில் மையமாக அமைகின்றன இந்த நாவலில் இடம்பெறும் சிறு வருணை ஒன்று: குளத்தில்

மலர்ந்திருந்த தாமரைப் பூவைக் கமலம் கேட்டதற்காக, இராமநாதன் பறிக்கச் செல்கிறார். நீரில் நீந்த அவர் இடர்ப்படுவது கண்டு, கமலம் தானே நீரில் இறங்கி விரைவாகவும் மிகவும் லாவகமாகவும் தாமரைப்பூக்களைப் பறித்து வருகிறாள். அவள் நிரில் நீந்தி விரைவாகச் செல்வதை அகிலன் வருணிக்கிறார். இந்த நிகழ்ச்சியும் வருணனையும் அப்படியே பாவை விளக்கு நாவலில் இடம்பெறுகின்றன. மங்கியநிலவு நாவல் கமலம்-இராமநாதன், பாவைவிளக்கு நாவலில் செங்கமலம்-தணிகாசலம் ஆக இடம் பெறுகின்றனர். 'கமலத்தின் பூங்கொடி போன்ற மெல்லிய உடல் ஸ்படிகமாகத் தெளிந்திருந்த நீர்ப்பரப்பில் மிதந்தது; நெளிந்தது; வளைந்தது; சுழன்றது; கைகளால் இரு கூறாக நீரைப் பிளந்துகொண்டு அவள் தாமரைக் கொடிகளூடே மீன் குஞ்சுபோல் ஊடுருவிச் சென்றாள்' என்று இன்ப நினைவு (ப. 24) நாவலில் இடம்பெறுகிறது. 'சுறாமீன் குஞ்சுபோல் அவள் நீருக்குள் பாய்ந்தாள். குழையும் பளிங்காலான அவளுடைய தேகம், தாமரைக் கொடிகளினூடே அலட்சியமாய் நெளிந்து, வளைந்து சுழன்று முன்னேறியது' என்று பாவைவிளக்கு (ப.87) நாவலில் அப்படியே இடம்பெறுகிறது. பாவை விளக்கு நாவலில் புதுப்பட்டியாகவும் இன்ப நினைவு நாவலில் பொன்னங்குடியாகவும் இடம்பெறுவது ஒரே ஊர்தான். அகிலனின் சொந்த ஊரான பெருங்களூர்தான் இவ்விரு நாவல்களிலும் வெவ்வேறு பெயர்களில் இடம்பெற்றுள்ளது. மங்கியநிலவாகப் பெண் ஆனதை இராமநாதன்-கமலம்-சுப்பையா படைப்புக்கள் வழி அகிலன் காட்டுகிறார்.

'பெண்' நாவல் விடுதலைப் போராட்ட காலத்தை மையமிட்டு எழுதப்பட்டுள்ளது. வெள்ளையர்களின் அடிமையாக இருக்கவிரும்பாத சந்தானம், தன்னுடைய ஐசி.எஸ். பட்டத்தையும் அதனால் வரும் பதவி, பணவசதி மிக்க வாழ்க்கை என்ற அனைத்தையும் துறக்கிறான். இந்திய நாட்டு அடிமைநிலை, சமுதாய அடிமைநிலை, ஏழ்மை, அறியாமை இவைகளைப் போக்குவதற்காக அவன், விடுதலைப் போரில் ஈடுபட்டுச் சிறை செல்கிறான். "நான் ஆடம்பர வாழ்க்கையை விரும்பவில்லை... கோடானுகோடி ஏழைமக்களைப்போல் நானும் வாழ்ந்து, அவர்களுக்காக அவர்கள் மத்தியிலேயே உழைக்கப் போகிறேன். என் நாட்டு மக்களை உயர்த்த என் உயிர் உள்ள வரையில் பாடுபடப் போகிறேன்" (பெண், பக்.68-

69) என்று வரும் சந்தானத்தின் கூற்றால் இதனை உணரலாம். நாட்டு விடுதலைக்காக, இப்படி அனைத்தையும் துறந்து, சிறைசென்ற சந்தானம் போன்ற இளைஞர்கள் ஏராள மானவர்களை நாடு கண்டது. வசதியும் ஆடம்பரமுமிக்க சுகவாழ்விற்காகவும் வீண்பெருமை, ஆணவம் காரணமாகவும், வத்சலா முதலில் கணவன் சந்தானத்தைப் புறக்கணிக்கிறாள். குடும்பநலன், கணவனின் அன்பு இவற்றை உணர்ந்து, மனம் மாறுகிறாள். குடும்ப அமைப்பு, நாட்டு நலன், சமூகமாற்றம் பற்றிய அழுத்தமான பார்வையை அகிலன் இந்த நாவலில் வெளிப்படுத்துகிறார். கதைப் பின்னல் அமைப்பு, சுவையாகக் கதை கூறும் திறன், உயிர்த்துடிப்பான கதைமாந்தர் படைப்பு, நுட்பமான உரையாடல் என்ற பல நிலைகளிலும் நாவல் படைப்புக்கலையை அகிலன் திறம்பட இந்நாவலில் ஆண்டுள்ளார். பின்னர் வெளிவந்த பல நாவல்களில் இப்படைப்புத்திறன் நன்கு கூர்மைபெற்று, அகலமும் ஆழமும் பெற்று வளர்ந்துள்ளது. பெண் நாவலில், சீமைக்கொன்றைச் செடியைக் குறியீடாகக் கொண்டு அகிலன், தாம் கூறவிரும்பிய கருத்தைப் படிப்பவர்களுக்கு உணர்த்துகிறார். "இது சீமைச் செடியல்லவா? அதனால்தான் இந்திய மண்ணில் இவ்வளவு சீக்கிரம் கொழுத்து வளர்கிறது" (பெண், பக்.46) என்று வரும் வருணனை இதைக்காட்டும். இக்குறியீட்டு உத்தியை அகிலன் பாவைவிளக்கு, பொன்மலர், சித்திரப்பாவை ஆகிய நாவல்களில் கையாண்டார். கதை நிகழ்ச்சிகளையும் மாந்தர்கள்ளயும் மிக நுட்பமாக, இயைபுபட அகிலன் பின்னிப் பிணைத்துள்ளார்.

துணைவி நாவல் கதைமாந்தர் பலரின் கூற்றில் அமைந்துள்ளது. கல்யாணி, பாலச்சந்திரன் ஆகிய தலைமை மாந்தர் இருவரின் கூற்றிலே பெரும்பாலும் கதை சொல்லப்படுகிறது. சிறு அளவில் பிறமாந்தர் சிலர் (நான்குபேர்-முருகேசன், சாந்தா, ஜம்புலிங்கம், சுந்தரி ஆகியோர்) கூற்றில் கதை சொல்லப்படுகிறது. பெண்ணின் மன உணர்வை மையமிட்டு இந்த நாவல் அமைந்துள்ளது. ஒருவனைக் காதலித்துவிட்டு, மற்றொருவனை மணந்து கொள்ளும் பெண்ணின் மனஉணர்வை இந்த நாவல் விளக்குகின்றது. கிராம வாழ்க்கையில், தமிழ்க்குடும்பச் சூழலில், கணவனின் தீயபண்புகள், தவறான நடத்தை காரணமாக அவனை விட்டு வெளியேறித் தனித்து ஒரு பெண்

வாழ்வது என்பது, அந்த நாட்களில் இயலாத செயல். கல்வியும் வேலைவாய்ப்பும் பொருளாதாரச் சுதந்திரமும் இல்லாத நிலையில், கிராமத்துப்பெண் படும் அல்லலை இந்த நாவல் சொல்லுகிறது. என்றாவது ஒருநாள் கணவன் மனம் மாறுவான் என்று அவள் காத்திருப்பதாக இந்த நாவல் கூறுகிறது. பின்னர் சித்திரப்பாவை நாவலில், முழுவதும் தீயவனான தன்னுடைய கணவனிடமிருந்து ஆனந்தி விடுதலை பெற்று வெளிவருவதாக அகிலன் காட்டியுள்ளது இதன் வளர்ச்சி நிலையாகும். துணைவி நாவல் பெண்ணின் மனஉணர்வுப் போராட்டத்தை நுட்பமாகக் கூறுகிறது. கதை மாந்தர் மாறி மாறிக் கதை சொல்லும் முறை காரணமாக, படிப்பவர், ஒவ்வொரு மாந்தர் கூற்றுக்கேற்ப மாறிமாறிப் படிக்கவேண்டிய இடருக்கு உள்ளாகின்றனர். இதன் காரணமாகத்தானோ என்னவோ பின்னர் எழுதிய நாவல்களில் இந்தப் பலர் கூற்றுமுறையை அகிலன் கையாளவில்லை.

'சினேகிதி' என்னும் நாவல் கதைத் தலைவன் துரையின் கூற்றில் கதை சொல்லுவதாக அமைந்துள்ளது. இந்த நாவலும் பெண்ணை மையமிட்டு அமைந்துள்ளது. தன்னுடைய உடல்நிலை காரணமாக, முதியவரான நாராயணசாமி, தன் இளம் மனைவி லலிதாவை, அவள் விரும்பிய துரையுடன் சேர்த்துவைத்துத் தான் விலகிக் கொள்ளுகிறார். வயது ஒவ்வாத பொருந்தா மணம் அன்றைய காலகட்டத்தில், பெண்ணுக்குத் துயர் தருவதாக நடைமுறையில் இருந்தது. ஆயினும், துணிந்து மேற்கொள்ளப்படும் முடிவு அன்பு நெஞ்சங்களை ஒன்று சேர்க்கிறது. சமூகக் கட்டுப்பாடும், குடும்ப அமைப்பும் மனிதனை வாழவைக்கவும், மேன்மைப்படுத்தவும் துணை செய்யவேண்டும்; மரபு என்பதற்காக, வாழ்நாள் முழுவதும், பெண்ணைத் தண்டித்தல் கூடாது. இந்தக் கருத்தை சினேகிதி நாவல் முன் வைக்கிறது. 'நாம் வாழவேண்டும்; மற்றவர்களும் வாழுவதற்கு வழிவிடவேண்டும்' (சினேகிதி 140) என்னும் செய்திதான் இந்த நாவலின் மையச் செய்தியாக உள்ளது. 'சந்திப்பு' என்னும் சிறுநாவல், சாதிவெறியைப் போக்க வேண்டும் என்னும் கருத்தை மையமிட்டது. காதல் தோன்றி வளர்வதை, அரும்பு, மொட்டு, மலர், முள் என்று குறியீட்டு நிலையில் ஆசிரியர் குறிப்பிடுகிறார். காதலுக்குச் சாதி தடையாக உள்ளது என்னும் கருத்தைக் கூறுகிறது இந்த நாவல்.

'நெஞ்சின் அலைகள்' நாவல் இந்திய விடுதலைப்

போராட்டத்தில், நேதாஜியின் தலைமையிலான இந்திய தேசிய ராணுவப் பணியைப் பின்னணியாகக் கொண்டு அமைந்தது. கதைத் தலைவன் வாசு, இந்திய தேசிய ராணுவத்தில் சேர்ந்து நாட்டு விடுதலைக்காகப் போராடுகிறான். பொருளாதார வேறுபாடு காதலர்களைப் பிரிக்கிறது என்னும் பழைய செய்திதான் இந்த நாவலின் அடிப்படை. விடுதலைப் போராட்டச் சூழலில், நாட்டில் காணப்பட்ட விலைவாசி உயர்வு, ஜப்பான் மீது குண்டு வீச்சு, இந்திய தேசிய ராணுவச் செயற்பாடுகள் என்பன மிக விரிவாக இந்த நாவலில் இடம் பெறுகின்றன. இந்திய தேசிய ராணுவப் பணிகள் பின்னணியாக அமையுமாறு எழுதப்பட்ட ஒரே தமிழ்நாவல் இதுதான். இந்த நாவலில் வரும் புஷ்பா பாத்திரப் படைப்பில், 'பெண்' நாவல் வத்சலா, 'வாழ்வு எங்கே' லீலா, 'பாவை விளக்கு' உமா ஆகியோரைக் காணலாம். பொதுவாக அகிலனின் சமூக நாவல்களில், கதைமாந்தர் படைப்பில் இத்தகைய நுட்பமான ஒற்றுமைக் கூறுகளைக் காணலாம். 'அவளுக்கு' என்னும் நாவல் கடித உத்தி முறையில் அமைந்தது. நான்கு படைப்பாளர்கள் சேர்ந்து எழுதிய நாவல் இது. இதில் அகிலன் இரண்டு பகுதிகளை எழுதியுள்ளார். கதைகூறும் உத்தி முறைதான் இதில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். சாதி, பணம் போன்ற வேறுபாடுகளைக் களைந்து சமச்சீர்மை உடைய சமூக வாழ்க்கைக்குக் காதல் ஒன்றுதான் மாற்றாக அமையமுடியும் என்பதை அகிலன் வலியுறுத்துகிறார்.

'வாழ்வு எங்கே?' என்னும் நாவல், மனம் ஒத்து அன்புடன் வாழும் குடும்பவாழ்க்கையை வலியுறுத்துகிறது. கலப்பு மணத்தாலும், காதல் மணத்தாலும் ஏற்படும் விளைவை இந்த நாவல் சுட்டுகிறது. அந்த நாட்களில் கலப்பு மணம் செய்து கொண்டவர்களுக்குப் பிறந்த பெண் ராதாவின்திருமணம் பெற்றோரின் கலப்பு மணத்தால் தடைப்படுகிறது. சாதி என்னும் கட்டுப்பாடு நம்முடைய சமூக வாழ்வில் எவ்வளவு தூரம் வேரோடிப் போயிருக்கிறது என்பதை இந்த நாவல் அழகுறக் காட்டுகிறது. சாதி போன்ற சமூகத் தடைகளை மனிதர்கள் எதிர்த்துப் போராடவேண்டும் என்பதையும், எதிர்கால இளைய சமுதாயம், இத்தடைகளைக் கடந்து, அன்பால் ஒன்றுபடவேண்டும் எனவும் அகிலன் வலியுறுத்துகிறார். 'வாழத் தெரிந்தவர்களுக்குத் துன்பமும் இல்லை; சாவும் இல்லை. வாழ்க்கை நிரந்தரமானது. அது இங்கேதான்

இருக்கிறது. அழியாத அன்பின் அடிப்படையில்' (வாழ்வு எங்கே? ப.399) என்னும் வரிகள் நாவலின் மையக் கருத்தை உணர்த்துகின்றன. வாழ்வு எங்கே? என்னும் வினாவுடன் தொடங்கிய நாவல், 'அது இங்கே தான் இருக்கிறது, அழியாத அன்பின் அடிப்படையில்' என்று முடிந்திருப்பது, கருத்துத் தொடர்ச்சியையும், முன்பின் இயைபையும் காட்டும் சிறந்த உத்தி. அதேபோல இந்த நாவலின் முதல் இயல் 'நாளைக்குக் கல்யாணம்' என்று தொடங்குகிறது; நாவலின் இறுதி இயல் 'இன்றைக்குக் கல்யாணம்' என்று முடிகிறது. இயல் தலைப்பில் கூட ஒரு முழுமையை இந்த உத்தி வெளிப்படுத்துகிறது. நாவலின் கருவிற்கும், கதைப் போக்கிற்கும் கதைமாந்தர் பண்பிற்கும் ஏற்றமுறையில், இயலுக்குத்தலைப்பு சூட்டும் உத்தியை அகிலன் பயன்படுத்தி உள்ளார். இந்தக் கலைத்திறன், 'வாழ்வு எங்கே?' நாவலிலிருந்து தொடங்கி, 'பால்மரக் காட்டினிலே' நாவல் வரை தொடர்ந்து காணப்படுகிறது.

'பாவை விளக்கு' நாவல் தன்வரலாற்று நாவல் என்னும் வகையில் தமிழில் குறிப்பிடத்தக்க முதல் முயற்சியாகும். தணிகாசலம் என்னும் எழுத்தாளன் குடும்ப, சமூக உறவுகளுக்கிடையில் போராடும் அக, புறப்போராட்டங்கள் இந்த நாவலில் காட்டப்படுகின்றன. அறிவு, உணர்வு ஆகிய இருவேறுபட்ட தளங்களில் இயங்கும் மாந்தர்களின் மனப்போராட்டமே இதன் பெரும் பகுதியாக அமைந்துள்ளது. இந்த வகையில் உளவியல் பகுப்பாய்வு நாவலாக இது உள்ளது. நாவலின் தலைப்பு குறியீடாக நின்று, நாவலின் கருப்பொருளை உணர்த்துகிறது. உணர்வு மயமான நிலை பாவையாகவும் (பெண்), அறிவுபூர்வமான நிலை விளக்காகவும் அமைந்து, உணர்வுக்கும் அறிவுக்குமான போராட்டமே இந்நாவலின் கரு என்பதைச்சுட்டுகிறது. நடைமுறை வாழ்க்கை, உணர்வுமயமான பாவையாகவும், குறிக்கோள் நோக்கு விளக்காகவும் உள்ளன. உயரிய குறிக்கோளை நோக்கிய மனித ஆளுமை வளர்ச்சியே இந்த நாவலின் மைய இழையாக ஓடுகிறது. நாவலின் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், குறிக்கோளை நோக்கிப் போராடும் தணிகாசலத்தின் போராட்டம் மையமாக உள்ளது. இந்த நிலையில், மிகச்செறிவான முறையில் கதைப்பின்னல் அமைப்பும், நிகழ்ச்சிகளின் வைப்புமுறையும் ஒன்று சேர்ந்து செறிவுடைய கட்டமைப்பை நாவலுக்குத் தந்துள்ளன. தணிகாசலம் என்ற மனிதனுக்குள் இருவேறுபட்ட

ஆளுமை - இரண்டு வேறு உருக்கொண்ட மனிதர்கள்- நடமாடுவது போன்ற முறையில் கதைப்பின்னல் அமைக்கப்பட்டுள்ளது. "அறியாப்பிள்ளை என்ற ஒருவனும், அறிந்த மனிதன் என்ற மற்றொருவனும் ஆக இரண்டுபேர் சேர்ந்தவன் நீ" (பாவைவிளக்கு, ப.36) என்று தேவகி தணிகாசலத்திடம் கூறுவது இதனை வலியுறுத்தும். ஒரே மனிதனை இருவேறுபட்ட மனநிலை அடிப்படையிலான ஆளுமைகளை உடையவனாக அகிலன் இந்த நாவலில் படைத்துள்ளார். இதே மாதிரியான பாத்திரப்படைப்பு அடிப்படையில், கதைப் பின்னல் உருவாக்க நெறியை அகிலன் 'கயல்விழி' நாவலிலும் படைத்துள்ளார். அறியாத நிலையிலிருந்து ஒளிபெற்று அறிந்த நிலைக்கு உயருகின்ற ஒரு மனிதனின் வாழ்க்கைப்பயணமே இந்த நாவலின் கரு. "தாழைமடலைப் போன்ற ஒளிச்சுடர் நீண்டு நிற்பது போலவும் அவள் கண்களுக்குத் தெரிந்தன. எலும்பும், தோலும், தசை நாரும் ரத்தமும், வேர்வையும், ஆசாபாசங்களும், வெகுளித்தனமும், சிறுமையும் கலந்த அந்தப் பையனிடமா அந்த ஒளி? - ஆம். தெரிந்து கொள்ளக்கூடிய கண்கள் அதைத் தெரிந்து கொண்டன" (பாவைவிளக்கு, ப.40). இந்தக் காட்சியில் தேவகியின் பார்வை வழியாகத் தணிகாசலத்துக்குள் உள்ள ஒளிவீச்சு நமக்குக் காட்டப் படுகிறது. நாவலைக் கூர்மையாகப் படிக்கும் வாசகன் நாவல் முழுவதிலும் வரக்கூடிய இருள், ஒளி, ஒளிச்செல்வம், பாவைவிளக்கு ஆகிய படிமங்களில் நாவலின் கருவைப் புரிந்து கொள்ளலாம். பெண்ணை, அடிமையாக, ஆணுடைய இன்பநுகர்ச்சிப் பொருளாக மட்டுமே படைத்திடும் வெகுஜன கலாச்சாரத்திலிருந்து மாறுபட்டு, ஆணுக்குத் துணை நிற்பவளாக, கருத்துப் பரிமாற்றஞ்செய்து அவனுடைய வளர்ச்சிக்குத் துணைபுரிபவளாக உமா, தேவகி ஆகிய பெண் மாந்தர்களை அகிலன் இந்த நாவலில் படைத்துள்ளார். மங்கியநிலவு முதல் வானமா? பூமியா? வரை, நாவல்கள் அனைத்திலும் பெண்மாந்தர் படைப்பில் அகிலன் இந்த நெறியைப் பின்பற்றியுள்ளார். சமூகஉணர்வுடன் கூடிய எழுத்தாளர் ஒருவர் தம்முடைய அனுபவங்களையும், வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் கற்பனையுடன் சேர்த்துப் பின்னிய இந்த வாழ்க்கை வரலாற்று நாவல், கருவெளிப்பாட்டினாலும், கதைசொல்லும் உத்திமுறைகளாலும், நுட்பமான கதைமாந்தர் படைப்பாலும், பெண்கள் பற்றிய சமூகப்

பொறுப்புணர்வு மிக்க கோட்பாட்டினாலும், தமிழ் நாவல் வரலாற்றில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றுள்ளது.

'புதுவெள்ளம்' நாவலில், நம்முடைய நாடு விடுதலை பெற்றபிறகு, அடைந்திருக்கவேண்டிய முன்னேற்றங்களுக்குத் தடையாகவுள்ள சமுதாயநிலையை அரசியல், சமூகம், பண்பாடு, பொருளாதாரம் ஆகிய காரணிகளோடு ஆழமாகப் படைத்துள்ளார். கருப்புச் சந்தை வணிகம் பெருகி, மிதமிஞ்சிய தன்னலமும், பொருள்வேட்டையும் காரணமாகத் தனிமனித ஒழுக்கமும், சமூகக்கட்டுப்பாடும் சிதைந்தன; அறமதிப்புக்கள் சீர்குலைந்தன என்று அகிலன் 'புதுவெள்ளம்' நாவலில் காட்டுகிறார். காந்தியப் பொருளாதாரத்தை இந்த நாவல் மையமாகக் கொண்டுள்ளது. உடல் உழைப்பைப் போற்றி வாழும் சமூகம் உருவாகவேண்டும். என்று இதில் வலியுறுத்துகிறார். கருப்பொருளிலும், நாவலில் கட்டமைப்பிலும் சோதனை முறையை முதன்மைப்படுத்தி அகிலன் இந்த நாவலைப் படைத்துள்ளார். 'காந்திய எதார்த்த வாதம்' கலைக்கொள்கையை இந்த நாவலில் அகிலன் மையப்படுத்தியுள்ளார். 'பொன்மலர்' என்னும் நாவல் கருப்புச் சந்தை வழியே பணம் குவிக்கும் ஒரு மனிதனுடைய தீயசெயல்களுக்கு எதிராக, அவனது சகோதரனால் வஞ்சிக்கப்பட்ட பெண் அவனிடமிருந்து விடுபட்டு தனித்து நின்று போராடி வாழ்வதைக் காட்டுகிறது. பெண்ணுக்குக் கல்வியும், வேலைவாய்ப்பும் அதனால் பொருளாதாரச் சுதந்திரமும் கிட்டவேண்டும்; கிடைத்தால் சங்கரிபோலப் பெண்கள், ஆண்களின் அடக்குமுறைக்கு எதிராகப் போராடவும், துணிவுடன் தனித்து நிற்கவும் முடியுமென்று அகிலன் காட்டுகிறார்.

'சித்திரப்பாவை' நாவல் மாறுபட்ட முறையில் பெண்ணுரிமையைக் காட்டுகிறது. தீமையே உருவமாகிக் கொடுமைச் செய்யும் கணவனுக்கு அடங்கியிருப்பதே கற்பு என்னும் சமூக மதிப்பை உதறி எறிந்து, அத்தீயவனிடமிருந்து விடுதலை பெற்று வெளிவருகிறாள் ஆனந்தி என்பதை இந்த நாவல் மையமாகக் கொண்டுள்ளது. அந்த வகையில் 'கற்பு நிலை என்று சொல்ல வந்தார் இரு கட்சிக்கும் அதைப் பொதுவில் வைப்போம்' என்னும் பாரதியாரின் கோட்பாட்டில் இந்த நாவலில் கற்பு விளக்கம்பெறுகிறது. தன்னல வேட்கையும், பொருள் குவிக்கும் பேராசையும், தீய

ஒழுக்கங்களும் நிறைந்த மாணிக்கம், தன் மனைவி ஆனந்தியை வெறும் அடிமையாக, தன்னுடைய போகப்பொருளாக மட்டும் கருதி வாழ்கிறான். அவனுடைய ஒழுக்கக்கேடுகளை அறிந்துகொள்ளும் ஆனந்தி, ஒரு கட்டத்தில், அவனிடமிருந்து விடுதலை பெற்று வெளியேறுகிறாள். தன் காதலன் அண்ணாமலையுடன் இணைந்து புதிய வாழ்வை மேற்கொள்ளுகிறாள். ஒரு நிலையில் குடும்ப அமைப்பில் கணவன் மனைவி உறவு நிலையை மையமாகக் கொண்டுள்ள இந்த நாவலில், பொருள் குவிக்கும் பேராசையும் வஞ்சகப் பண்புகளும் பெருகிவிட்ட புறஉலகச் சமூக வாழ்க்கையை நடப்பியல் நெறியில் பின்னணியாக ஆக்குகிறார். குடும்ப வாழ்க்கையின் வீழ்ச்சிக்குப் புறஉலகச் சமூகவாழ்க்கை காரணமாகிறது என்பதை அழுத்தமாகக் காட்டுகிறார். காலங்காலமாக நம்முடைய சமூகஅமைப்பில் பெண் அடக்கி ஒடுக்கி வைக்கப்பட்டுள்ளாள். 'ஓவியத்தில் எழுதப்பட்ட பெண்போல அடக்கத்துடன் மாணவன் இருந்து ஆசிரியரிடம் கல்வி கற்கவேண்டும்' என்னும் பொருளில் இலக்கண நூலான நன்னூலில் ஆசிரிய-மாணவ உறவுநிலை விளக்கப்படுகிறது ('சித்திரப்பாவையின் அத்தக அடங்கி' என்பது நன்னூலில் வரும் நூற்பா). கல்வி உலகவாழ்வில், ஆசிரியரிடம் மாணவன் அடங்கியிருப்பது, குடும்பவாழ்வில் ஆணுக்குப் பெண் அடங்கியிருப்பது போல' என்று உவமிக்கப்படுகிறது. அடங்கியிருந்த பெண், தவிர்க்கமுடியாத சூழலில் விழிப்புணர்வு பெற்று வீறுகொண்டு வெளிவந்தாள் என்னும் மையக்கருத்தை நாவல் தலைப்பு குறியீடாக உணர்த்துகிறது. இந்த நாவலில் பாத்திரப்படைப்பு மிகவும் அழுத்தமாக உருவாக்கப்பட்டுள்ளது. ஆனந்தி இத்தகைய விடுதலையைப் பெறுவதற்கு, அவளுடைய தோழி சாரதா பெரிதும் துணைபுரிகிறாள். 'கயல்விழி' நாவலில், போர்க் கொடுமைக்கு ஆளாகி, தான் குடும்பவாழ்க்கைக்கு ஏற்றவளல்ல என்னும் தாழ்வு மனப்பான்மைக்குக் கயல்விழி ஆளாகிறாள். அவளுக்கு விழிப்புணர்வு ஊட்ட, சித்திரப்பாவை ஆனந்திக்குக் கிடைத்ததுபோல உற்றதோழி கிடைக்கவில்லை. அன்றைய சூழலில், இத்தகைய சிந்தனை பொருத்தமுடையதுதானா என்னும் தயக்கம் படைப்பாசிரியரிடமும் இருந்திருக்கக்கூடும். சித்திரப்பாவையில், காலமாற்றத்திற்கேற்ப அது சாத்திய மாகியுள்ளது. குடும்பவாழ்க்கை, சமூகப் பொறுப்பு ஆகிய அனைத்திலும் மனிதன் தானும் வாழ்ந்து மற்றவர்களையும்

வாழ விடவேண்டும். மனித மேன்மைக்குத் துணை செய்யாத சட்டதிட்டம், சமூகமதிப்பு போன்றவைகளை எதிர்க்க வேண்டும் என்னும் குரல் சித்திரப்பாவை நாவலிலும் ஒலிக்கிறது.

'கொள்ளைக்காரன்' என்னும் நாவல் சிறிய நாவல். சிறுவன் ஒருவனுடைய பார்வையில் கதை சொல்லப்படுகிறது. அந்தக் காலத்துக் கிராம வாழ்க்கை, கிராமப்புறங்களில் அடிக்கடி வந்துபோன கொள்ளைக் கூட்டத்தின் வாழ்க்கை ஆகியவற்றை இந்த நாவல் கூறுகிறது. இதில் இடம் பெறும் கொள்ளைக் காரன் மிகுந்த நேர்மைத்துணிவும், வீரச்செறிவும் மிக்கவனாக விளங்குகின்றான். ஒருவகையில் இதை 'என் தந்தையார் காலத்து வரலாற்றின் சின்னஞ்சிறு ஏடு' என்று அகிலன் முன்னுரையில் கூறுகிறார். கதைகூறும் முறையால் இந்த நாவல் சிறப்புப் பெறுகிறது. 'எங்கே போகிறோம்' நாவல் தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க சாதனையாகும். நமது நாடு விடுதலை பெற்றுப் பலகாலம் ஆகியும், அறிவியல் முன்னேற்றங்கள் பெருகியும்கூட, அரசியலாளர்களின் சுயநலம், போலி வாழ்க்கை, பணவியாபாரிகளால் பத்திரிகை, திரைப்படம், அரசியல் என்ற அனைத்தும் சீர்கெட்டுள்ள நிலை, காந்தியக் கொள்கைகள் முறையாகப் பின்பற்றப் படாமை ஆகியவற்றை இந்த நாவல் மையமாகக் கொண்டுள்ளது. வாழ்க்கையின் சகலநிலைகளிலும் போலித் தனங்களும் பொய்யும் புனைசுருட்டும் மேலோங்கிட உண்மையும், அகிம்சையும் பின் தள்ளப்பட, எங்கு பார்த்தாலும் வன்முறை பெருகியுள்ளதைக் கண்டு 'நாடும் மக்களும் எங்கே போகின்றன' என்று ஆசிரியர் எழுப்பிய கேள்வியே இந்த நாவல். காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவை ஒட்டி, காந்தியக்கொள்கைகளை வெளிப்பேச்சுக்கு மட்டும் பயன்படுத்திக்கொண்டு உள்ளுக்குள் சகல ஒழுக்கக்கேடு களுக்கும் ஆளாகிப்போன அரசியலாளர்களையும் பத்திரிகை யாளர்களையும் மையமிட்டு 'எரிமலை' என்னும் சிறுகதையை எழுதினார். அதன் தொடர்ச்சியாக 'எங்கே போகிறோம்' நாவல் அமைந்தது. வரதட்சணைக் கொடுமையால் திருமணம் ஆகாமல் தடைப்பட்டுப்போன புவனா ஒரு நிலையில், உடலை விற்றுப்பிழைக்கும் நிலைக்கு ஆளாகிறாள். சமூகத்தின் மிகவுயர்ந்த மனிதர்கள், ஏராளமான பொருளை அவளிடம் கொண்டுவந்து கொட்டும் இழிந்தவர்களாக உள்ளனர். அவள்

செய்யும் தொழிலைவிடவும், ஒரே நேரத்தில் கோடிக் கணக்கான மக்களின் ஆன்மாவைச் சீரழிக்கும் மிக மோசமான செயலைப் பத்திரிகைகள் செய்து வருகின்றன என்பதை இந்த நாவல் முன்வைத்தது. நம்முடைய சமூக வாழ்க்கையில் பணம், முதலாளித்துவம் என்பவை எவ்வாறு புரையோடிப்போய் உள்ளன என்பதை இந்த நாவல் மிகவும் அற்புதமாகக் காட்டுகிறது. வறுமையும் ஏழ்மையும் பெருகி, மக்கள் அடிப்படைத் தேவைகள்கூடக் கிட்டாமல் தவிக்க, ஒருசிலர் மட்டும் செல்வக்குவியல்களுக்கிடையில் வாழ்வதை மிகப்பெரும் வர்க்கமுரணாகக் காட்டும் அகிலன், 'எளியவாழ்க்கையும் உயர்ந்த சிந்தனையும் வேண்டும்' எனவும், கடையனையும் கடைத்தேற்றும் தர்மகர்த்தாப் பொருளாதாரம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் கூறப்பட்ட காந்தியக்கொள்கை எங்கே போனது?' என்று இந்த நாவலில், அடிப்படையான வினாவை எழுப்புகிறார். இந்த நாவலில் புவனா, சிதம்பரம், பொன்னையா பாத்திரப்படைப்பு மிக அழுத்தமாக அமைந்துள்ளன. நாடு விடுதலை பெற்றதன் முழுப்பயனையும் வளர்ச்சியையும் அடிமட்டத்து மக்கள் பெறாத சமுதாய அமைப்பு மாற்றப்படவேண்டும் என்று அகிலன் 'புது வெள்ளம்' நாவலில் காட்டினார். அதன் அடுத்த கட்ட பரிமாணமாக இந்த நாவல் உள்ளது. இளைஞர் களிடையே வன்முறை பெருகியுள்ளது என்பதையும் இந்த நாவல் காட்டுகிறது. தங்களுடைய எதிர்கால வாழ்க்கைக்குத் தேவையான நம்பிக்கையும், உத்திரவாதமும் இல்லாத நிலையில் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகியுள்ள சூழலில், சாதியும், பணமும் மேலோங்கியுள்ள நடைமுறையில் போலி அரசியலாளர்களின் செயல்களைக் கண்டு இளைஞர்கள் வன்முறையை நாடுகின்றனர் என்னும் சிந்தனையை அகிலன் இதில் முன்வைக்கிறார். இதே போக்கு நீடித்தால் காந்தியம் தோற்றுப்போய் வன்முறைதான் மிஞ்சும் என்னும் குரலை இந்த நாவலில் கேட்கலாம். அரசியல் விமர்சன நாவல் என்ற வகையில், தமிழில் இந்த நாவல் குறிப்பிடத்தகுந்தது. காந்தியக் கலை இலக்கியக் கொள்கையும் அழகியலும் இந்த நாவலை வடிவமைத்துள்ளன. அனைத்து நிலைகளிலும் முழுமையான வீச்சுடன் இந்த நாவல் அமைந்துள்ளது.

'பால்மரக்காட்டினிலே' ஆசிரியரின் மலேசிய அனுபவத் தின் காரணமாக எழுதப்பட்ட நாவல். மலேசிய ரப்பர்த்

தோட்டப் பின்னணியில் அங்கு சென்று குடியேறிய மக்களின் சமூகப்பிரச்சினைகளையும் குடும்பப் பிரச்சினைகளையும் மையமிட்டு இந்த நாவல் அமைந்துள்ளது. தமிழகச் சூழல் அல்லாத, மற்றொரு நாட்டுச் சூழலில் அகிலன் படைத்த ஒரே நாவல் இது. ரப்பர்த் தோட்டத் தொழிலாளர்கள் தங்களுடைய பிரச்சினைகளுக்காகப் பாலன் தலைமையில் ஒன்றுகூடி, காந்தியநெறியில் போராடி, வெற்றி பெறுவதை இந்த நாவல் காட்டுகிறது. பாலன், கண்ணம்மா பாத்திரப்படைப்பு மிக நுட்பமாகவும் செறிவுடனும் இந்த நாவலில் படைக்கப் பட்டுள்ளன. 'வானமா பூமியா' நாவல் ஆசிரியரின் கடைசி நாவல். பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்பப் பெருநகரங்களில் மக்களுக்குக் குடி இருக்க வீடும், குழந்தைகள் படிப்பதற்கு ஏற்ற பள்ளிக்கூடம் கட்ட இடமும் இல்லாத சூழலை இந்த நாவல் அற்புதமாகக் காட்டுகிறது. பணம் படைத்த வணிகர்களின் மிதமிஞ்சிய பணஆசை, தேவைக்குமேல் இடங்களை வாங்கி, அவைகளை அடுக்குமாடி வீடுகளாக ஆக்கி மிதமிஞ்சிய விலைக்கு விற்கவும் கூடுதலான வாடகைக்கு விடவும் முனையும் நாட்டத்தை மிக அழுத்தமாக இந்த நாவல் காட்டுகிறது. வானமே கூரையாகவும் பூமியே இருப்பிடமாகவும் எண்ணற்ற மக்களின் வீடு இல்லாத பிரச்சினையை ஆழமான பொறுப்புணர்வுடன் இந்த நாவல் காட்டுகிறது. கதைமாந்தர் படைப்பை விடவும் சமூகப்பிரச்சினை இந்த நாவலில் மேலோங்கியுள்ளது.

அகிலன் எழுதியுள்ள வரலாற்று நாவல்களில் 'வேங்கையின் மைந்தன்' சோழப் பேரரசை மையமிட்டது. பொதுவாக வரலாற்று நாவல்கள் அற்புத நவிற்சிப்பாங்கும் தனிமனிதனான கதைத்தலைவனின் வீரசாகசச் செயல்களும் கொண்டனவாக இருக்கும். வேங்கையின் மைந்தன் நாவலும் அதே வழித்தடத்தில் இளங்கோவின் வீரதீரசாகசச் செயல்களுடன் உள்ளது. காதலையும் வீரத்தையும் இந்த நாவல் மையப்படுத்தி எழுதப்பட்டுள்ளது. ரோகிணி படைப்பு மிகவும் நுட்பமாக உள்ளது. 'கயல்விழி' நாவல் பாண்டியப் பேரரசின் பிற்கால எழுச்சியை மையமிட்ட நாவலாகும். மாறவர்மன் சுந்தர பாண்டியன் தன் கூத்தின் மூலம் மக்கள் மனத்தில் நாட்டு விடுதலை என்னும் கனலை மூட்டிக் கிளர்ந்து எழச் செய்கிறான். தனிமனிதனின் வீரச்செயல்களாக இல்லாமல், நாட்டுமக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு நடத்தும் மக்கள்

போராட்டமாக, வெகுஜனப் போராட்டமாக அப்போராட்டத்தை அகிலன் படைத்து உள்ளார். போரினால் விளையும் கொடுமைகளைக் காட்டி, போரற்ற சமூகம் உருவாகவேண்டும் என்று அகிலன் காட்டுகிறார். மன்னர்களின் நாடு பிடிக்கும் ஆசையால் ஏற்படும் போரால் விளையும் தீமைகளுள் தலையாய தீமையாகப் பெண்கள் மீது இழைக்கப்படும் பாலுறவு வன்முறைகளை இந்த நாவல் எடுத்துக்காட்டுகிறது. காலங்காலமாக இருந்துவரும் ஆண்களின் இத்தகைய பண்பு-பெண்களைத் தம்முடைய இன்பநுகர்வுப்பொருளாகக் கருதி வன்முறைக்கு ஆளாக்கும் பண்பு மாறவேண்டும் என்பதே இந்த நாவலில் ஆசிரியர் முன் வைக்கும் செய்தி. இந்த நாவலில் கயல்விழி பாத்திரப்படைப்பு மிகவும் நுட்பமாக, உளவியல் திறத்துடன் படைக்கப்பட்டுள்ளது. கயல்விழியின் மனப் போராட்டம் அவளுடைய அறிவுக்கும் உணர்ச்சிக்குமான போராட்டம். அவளுக்குள் மாறுபட்ட இரண்டு பேர் இருப்பதுபோன்ற மன உணர்வைப் படிப்பவரிடம் ஏற்படுத்துமாறு அவள் படைப்பை ஆசிரியர் படைத்துள்ளார். "வன்முறைக்குப் போருக்கு ஒரு முடிவே இருக்காது. தமிழ் இனம் ஒற்றுமை இழந்து காலம் காலமாகவே, கொலை, கொள்ளை, தீ இவற்றால் தன்னைத்தானே அழித்துக்கொண்டு வந்திருக்கிறது... விலங்குணர்ச்சிப் போராட்டமே இனி நமக்கு வேண்டாம்". (கயல்விழி, ப. 567) எனவரும் கூற்று நாவலின் மையச் செய்தியாகும். வரலாற்று நாவலை அற்புதமான பாத்திரப்படைப்பின் மூலம் அகிலன் உயர்த்தியுள்ளார்.

'வெற்றித்திருநகர்' நாவல் விசயநகரப்பேரரசு மதுரையில் நாயக்கர் ஆட்சியை உருவாக்கி, நிலைபெறச் செய்த காலத்தை மையமிட்ட நாவலாகும். இந்த நாவலில், விசுவநாதன், பாத்திரப்படைப்பை மிக நுணுக்கமாக அகிலன் உருவாக்கியுள்ளார். வரலாற்று நாவல்களில் காணமுடியாத முறையில் உயிர்த்துடிப்பான உரையாடலும் நுட்பமான உணர்ச்சி வெளிப்பாடும் மாந்தர்களின் பண்பு நலன்களுக்கிடையிலான முரணும் மோதலும் ஒன்றுசேர்ந்து நாடகக் காப்பியமாக இந்த நாவலை ஆக்கியுள்ளன. 'வயதிலே இளைஞனாக இருந்தாலும் விசுவநாதன் மிகப்பெரிய மனிதன், என்பதை அன்று கண்டு கொண்டார் அரியநாத முதலியார் (வெற்றித்திருநகர், ப.473) என்ற வரிகளில் விசுவநாதனை அகிலன் காட்டுகிறார். மிகப்பெரிய செயல்வீரமும் உயர்பண்புகளும் நாட்டுப்பற்றும்

மிக்க இளைஞனாக அவனை முன்மாதிரியாக அகிலன் படைத்துள்ளார்.

அகிலனின் நாவல்கள் கலைத்திறனும் கருத்து வளமும் நிறைந்தனவாக உள்ளன. நாம் காணும் சமூக வாழ்க்கையும் மனிதர்களும் இன்னும் மேன்மை அடையவேண்டும் என்று அவருடைய நாவல்கள் கூறுகின்றன. தமிழ் நாவல் வரலாற்றிற்கு அவருடைய பங்களிப்பு மகத்தானது.

இயல் – 5

சமுதாய நோக்கு

அகிலன் தம்முடைய புனைகதை படைப்பிலக்கியமான நாவல், சிறுகதைகளில் வெளிப்படுத்தும் சமுதாயநோக்கை இவ்வியலில் காண்போம். அகிலன் இளைஞராக இருந்து தம்முடைய எழுத்துப்பணியைத் தொடங்கிய சமயம் நம்முடைய நாடு அன்னியருக்கு அடிமைப்பட்டிருந்தது. அவருடைய தொடக்ககாலப் படைப்புக்கள் அன்னிய ராட்சிக்கு எதிராக நாடெங்கிலும் நிகழ்ந்த விடுதலைப் போராட்டத்தை மையமிட்டு எழுதப்பட்டன. பின்வந்த் படைப்புக்கள், விடுதலைபெற்ற நாட்டில் காணப்பட்ட சமூக, குடும்பப் பிரச்சினைகளை மையமிட்டு அமைந்தன. அரசியல் விமர்சனம், சமுதாய மாற்றத்தை வலியுறுத்தும் விமர்சன நடப்பியல் நெறியில் அவர் தம் படைப்புக்களை எழுதினார். எனவே, சமுதாயப்பார்வை அவருடைய படைப்புக்களில் மேலோங்கி இருந்தது. அடிப்படையில் அவர், காந்திய நெறியாளராக இருந்ததால், காந்தியக்கொள்கைகளை அடிப்படையாக வைத்தே அவருடைய சமூகப்பார்வை அமைந்தது. தீமைகளை எதிர்த்துப் போராடவேண்டும் என்னும் அடிப்படையான பண்பு அவருடைய படைப்புக் களில் காணப்பட்டது. தாம் வாழ்ந்தபோது காணப்பட்ட சமூக அமைப்பைவிடவும் மேன்மையான சமூகம் உருவாகவேண்டும் என்பதை அவர் தம் படைப்புக்களில் வலியுறுத்தினார். ஒருவகையில் இது குறிக்கோள் நெறி என்றாலும், சீர்கேடுகளற்ற சமூகம் உருவாக-சமூகமாற்றம் ஏற்பட சீர்கேடுகளை எதிர்த்துப் போராடவேண்டும் என அகிலன் காட்டினார். இது நடப்பியல் நெறி சார்ந்ததாகும். மனிதமேன்மைக்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் எதிரான தீமைகளை அவர் தொடர்ந்து எதிர்த்து எழுதினார். "படைத்தவன் பிறக்கும் போதிருந்த சமுதாயத்தைவிட, அவன் இறக்கும்போது சமுதாயம் இன்னும் சிறந்ததாக் இருக்கவேண்டுமென்ற ஒரே நோக்கந்தான்" ('கதைக்கலை',

ப.111) எனவும், "தீமைக்குப் பணிந்துவிடாதே, அதை எதிர்த்து உறுதியோடும் பண்போடும் போராடு. ஏழ்மை இந்த நாட்டின் சாபக்கேடு. அடிமைத்தனத்தை விரட்டியதுபோல், அதையும் விரட்டிவிடு" ('கதைக்கலை', ப.97) எனவும் அகிலன் தம்முடைய கட்டுரைகளில் கூறும் கருத்துக்கள் இதை வலியுறுத்தும். நாவல், சிறுகதை ஆகிய படைப்புக்களில், கதையின் போக்கில், மாந்தர்களின் உரையாடலில், அவர்களின் எண்ண ஓட்டத்தில் சமுதாய நோக்கை வெளிப்படுத்துகிறார். கதையின் போக்கில் உவமை, குறியீடு போன்ற உத்திகளின் வாயிலாகச் சமுதாய நோக்கை அகிலன் புலப்படுத்துகிறார். பெண் நாவலில், "இது சீமைச் செடியல்லவா? அதனால்தான் இந்திய மண்ணில் இவ்வளவு சீக்கிரம் கொழுத்து வளர்கிறது" ('பெண்', ப.46) என்று குறியீடாகக் காட்டுவது இதைப் புலப்படுத்தும்.

சாதிவேறுபாடு

இந்தியச் சமூக அமைப்பு சாதிக்கட்டமைப்பில் உருவானது. சாதிக் கட்டமைப்பில், ஏறுமுக வரிசையில் மேல்நிலையில் உள்ளோர், கீழ் நிலையில் உள்ளவர்களை ஒடுக்கிவைத்துள்ளனர்; மிகக் கடுமையாகச் சாதியின் பெயரால் வேறுபாடு காட்டப்படுகிறது. சாதிகள் மீது நம்பிக்கை கொள்ளாமல், ஆணும் பெண்ணும் காதலித்துக் கலப்புமணம் செய்து கொண்ட பின்னர், கலப்பு மணத்தில் பிறந்த குழந்தை வளர்ந்து ஆளாகி மணம் பேசப்படும்போது, பெற்றோரின் சாதிகள் வெவ்வேறு என்று காரணங்காட்டி மணம் தடைப்படுகிறது. இத்தகு, சாதிவேறுபாடு பார்க்கும் சமூகப் போக்கை அகிலன் சிறுகதைகளிலும் நாவலிலும் காட்டுகிறார். சாதிவேறுபாடு நீங்கி, சமுதாயம் மாறவேண்டும் என அகிலன் வலியுறுத்து கிறார். சாதி பற்றிக் கவலைப்படாமல், காதல் மணமும் கலப்புமணமும் செய்து கொள்ள இளைஞர்கள் முன்வர வேண்டும் என அகிலன் வலியுறுத்துகிறார். அன்பின் அடிப்படையில்தான் வாழ்க்கை அமையவேண்டுமே அல்லாது, சாதியை முதன்மைப்படுத்தி வாழ்க்கையை அமைத்துக் கொள்வது கூடாது என்று அகிலன் காட்டுகிறார்.

தீயில் சிக்கித் தவித்த தன் மகளைத் தன்னுயிரையும் பொருட்படுத்தாமல், காப்பாற்றுகிறான் சோமு என்னும் இளைஞன், 'வழிப்போக்கன்' என்னும் சிறுகதையில். பின்னர், அவன் யாரோ வழிப்போக்கன் என்பதால், அவனுடைய சாதி

இன்னது என்று தெரியாமல், அவனுக்குத் தன் மகளை மணமுடிக்க மறுத்துவிடுகிறாள், அத்தாய். "என் உயிர் போனாலும், உன்னை அவனுக்குக் கொடுக்கமாட்டேன்" ('சக்திவேல்' (வழிப்போக்கன்), ப.133) என்று தாய் தன் மகளிடம் கூறுகிறாள். 'எவனோ ஒரு வழிப்போக்கன்' என்று அத் தாய் காரணம் கூறுவது, சாதிவேறுபாடு காரணமாகக் காதல் உள்ளங்களைப் பிரிப்பதைக் காட்டும். அன்பால் இணைந்த காதல் உள்ளங்களைச் சாதி வேறுபாடு காட்டிப் பெரியவர்கள் பிரித்து வைப்பதைச் 'சினிமா வண்டி' சிறுகதையிலும் அகிலன் காட்டுகிறார். "இதோ பார் பொன்னம்மா. பேரைக் கெடுத்துப் போடாதே! அவன் சாதி கெட்டவன்" (சக்திவேல், 'சினிமாவண்டி', ப.71) என்று தந்தை தன் மகள் பொன்னம்மாவிடம், சாதியைக் காரணங்காட்டிக் காதலை மறுத்துவிடுகிறார் என்று சினிமாவண்டி சிறுகதை காட்டும்.

சாதியில் உயர்ந்தவர் முன், தாழ்ந்த சாதியைச் சார்ந்தவன் மேல் துண்டை எடுக்காமல் போனது ஒரு பெருங்குற்றம் எனவும் அதற்காகக் கசையடி கொடுத்து அவன் தண்டிக்கப்பட்டான் எனவும் 'தாமரைப்பூ' சிறுகதையில் அகிலன் காட்டுகிறார். 'மேல்துண்டை எடுக்காமல் பெரிய தனக்கார ஐயா வீட்டுக் கொல்லைப்புறம் சென்றதற்கு அவளுடைய தகப்பன் கசையடிபட்ட கதையும் இன்னும் பல கொடுமைகளும் எனக்கு எங்கே தெரியப்போகின்றன' ('சக்திவேல்', ('தாமரைப் பூ'), ப.138) என்று வரும் பகுதி இதைக் காட்டும். மேல் சாதிக்காரர்கள் தங்கள் ஆதிக்கப்போக்கு, மேன்மை மனநிலை காரணமாகத் தங்களை உயர்ந்தவர்கள் என எண்ணிக்கொண்டனர். அதன் விளைவாக, கீழ்ச்சாதி என்ற பெயரில், சமுதாயத்தில் ஒரு பிரிவு மக்களை அடிமைப்படுத்தி ஒடுக்கினர். அவர்களுக்கு அடிப்படை உரிமைகள் தராமல் மறுத்தனர். தங்களை உயர்வானவர்கள் எனவும், தாழ்ந்த இனமக்களைத் தீட்டுடையவர்கள், அவர்கள் தொட்டால் தாங்கள் தீட்டுப்பட்டவர்களாகிவிடுவோம்' எனவும் எண்ணி, அதைச் செயல்படுத்தி வந்தனர். 'சாதி' என்னும் சிறுகதையில் இதை எடுத்துக்கூறும் நிகழ்ச்சி ஒன்று காட்டப்படுகிறது. வண்டியில் பயணம்செய்த மேற்சாதியைச் சார்ந்த ஒருவரின் மேல்துண்டு கீழேவிழ, தாழ்ந்த இனம் சார்ந்த மாடசாமி என்பவன் அதை எடுத்துத் தந்துவிடுகிறான். இது தவறு என்று வேறு ஒருவர்-மேற்சாதிக்காரர் கண்டிக்கிறார். 'ஏண்டா

மாடசாமி; அதைத் தொட்டுத்தான் எடுத்துக் கொடுக்கணுமா? நாங்கள்ளாம் இல்லையா? அவன் பறையன் ஸார்!: என்றார் வண்டிக்குள் இருந்த பிள்ளைவாள்'' என்று வரும் பகுதி இதைக் காட்டும் ('பசியும் - ருசியும்' (சாதி), ப.58) இத்தகைய வேறுபாடு காட்டும் போக்கை அகிலன் எதிர்க்கிறார். இத்தகைய, சாதிவேறுபாடு காணும் போக்கு அடியோடு மாற வேண்டும், சாதிவேறுபாடுகளற்ற ஒரே சமுதாய அமைப்பு உருவாக வேண்டும் எனவும், அகிலன் கூறுகிறார். சமூக மாற்றம் ஏற்படவேண்டும் என்பதை இளைஞர்கள் வழியே அகிலன் கூறுகிறார். "இப்போ இருக்கிற சாதி, மதம், நிறம் இந்தக் கட்டுப்பாடு சுத்தமா தளரணும். மனுஷனோட வளர்ச்சிக்கு அது தடையா இருக்கப்படாது. இப்படி இருந்தால்தான் நாம் வாழலாம்'' ('பசியும் ருசியும்' ('சாதி'), பக். 67-68) என்றும் "வலி இல்லாமல் புண்ணை ஆபரேஷன் செய்ய முடியாது ஸார். தமிழ்ச் சமூகம் அழுகி நாற்றமெடுத்து உருப்படாமல் சீரழியவேண்டியதுதான்...'' ('பசியும் ருசியும்' ('சாதி'), ப.66) என்றும் வரும் கூற்றுக்கள் இதனைப் புலப்படுத்தும். அன்பு உள்ளங்களை இணையவிடாமல் சாதியின் பெயரால் தடுப்பதை அகிலன் எதிர்க்கிறார். இதற்கு மாற்றாகக் கலப்புமணத்தை அவர் ஆதரிக்கிறார். 'சாதி' என்னும் கதையில் இதனை வலியுறுத்துகிறார்; சாதி என்னும் புண் புரையோடிப் போயுள்ளது, அதனை அறுத்துத்தான் சரிசெய்யவேண்டும் என்பதை, 'கீறிவிட்டு ஆற்றும் வேதனை வைத்தியத்தைத் தவிர வேறு ஒரு நல்ல வழிக்கும் நாம் இன்னும் வந்த பாடில்லையே' ('பசியும் ருசியும்' (சாதி) ப.69). மனிதவளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் சாதி, மதம், நிறம் போன்ற கட்டுப்பாடுகள் முழுவதுமாக நீங்கவேண்டும் என்று சிறுகதைகளில் அகிலன் வெளிப்படுத்துகிறார். 'வாழ்வு எங்கே?' நாவலில், பெற்றோர்கள் செய்துகொண்ட கலப்பு மணம் அவர்களின் பிள்ளைகளின் திருமணத்தைப் பாதிப்பதை அகிலன் காட்டுகிறார். ஆனாலும், இறுதியில், சாதிக்கட்டுப்பாடுகளை வலியுறுத்திவந்த பெரியவர்கள் மனம் மாறி கலப்பு மணத்தை ஆதரிப்பதாகக் காட்டுகிறார். 'நாமெல்லாம் மனித சாதி. அது போதும்' ('வாழ்வு எங்கே'?ப.39 5) என்று வரும் கூற்று இதனை வலியுறுத்தும். மேலே குறிப்பிட்ட, சாதிவேறுபாடுமிக்க சமூகஅமைப்பைக் காட்டும் சிறுகதைகள் ஆசிரியரின் இளமைக் காலத்தில் (1942 - 1945) எழுதப்பட்டவை. நம்முடைய

நாடு விடுதலை பெறுவதற்குமுன், வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் சாதிக்கட்டு மேலோங்கி மக்களைத் துன்புறுத்தியது. அன்றைய சூழலில், சிறுவர்கள் படிக்கும் பள்ளிகளில்கூட சாதி மேலாதிக்கம் செலுத்தி வந்தது. இதனை நேரடியாகத் தம்முடைய பள்ளி வாழ்க்கையில் கண்டும் அனுபவித்தும் வந்ததை அகிலன் 'எழுத்தும் வாழ்க்கையும்' என்னும் தம்முடைய கட்டுரை நூலில் குறிப்பிடுகிறார். 'சாதி ஒழிக்கப்படவேண்டும் என்பதை நான் நம்புகிறவன்' ('எழுத்தும் வாழ்க்கையும்' ப.37) என்று அவர் கூறுவது இதனை வலியுறுத்தும். கீரனூர் என்னும் ஊரில் தாலுகா அலுவலகத்தில் பணிபுரிந்தபோது, அரிசன இளைஞர் ஒருவரைத் தம்முடன் ஒரே அறையில் தங்க வைத்துக் கொண்டு, அவரும் தாமும் உயர்சாதிக்காரர் வீட்டில் ஒன்றாக உணவு உண்டு வந்ததையும் அதனால் பல எதிர்ப்புக்களை நேரடியாக எதிர்கொண்டதையும் அகிலன் 'எழுத்தும் வாழ்க்கையும்' நூலில் (பக்.163-165) கூறுகிறார். தாம் கண்டு அனுபவித்ததை எழுதியதுடன், தாம் சொன்ன சமூகச்சீர்திருத்தக் கருத்துக்களைத் தம் சொந்த வாழ்க்கையில் அகிலன் கடைப்பிடித்தார். சொன்னவண்ணம் செய்தவராக அவர் வாழ்ந்தார் என்று இதனால் அறியலாம்.

பொருளாதார முரண்

நம் சமூகஅமைப்பு அடிப்படையில் பொருளாதாரக் கட்டுமானத்தில் உருவானது. உடைமையாளர், உடைமையற்ற வறியவர் என்னும் இருவிதமான வர்க்கம் எப்போதும் உண்டு. வர்க்க வேறுபாடு காரணமாக முரண் என்றும், எங்கும் காணப்படுகிறது. உடைமையாளர்களின் பொருளை மேலும் மேலும் குவிக்கும் தன்னல வேட்கையால் வறுமை மிகக் கடுமையான முறையில், ஏழை-எளிய மக்களைப் பாதிக்கிறது. வறுமை, வர்க்கமுரண், செல்வர்களின் தன்னலவேட்கை, பொருள் குவிக்கும் பேராசை, முதலாளித்துவ சமூக அமைப்பு, பொருள்வேட்டை என்னும் பல நிலைகளை அகிலன் தம் படைப்புக்களில் காட்டுகிறார். வேறுபாடு நீங்கி, சமச்சீர்மையும் சமத்துவமும் உள்ள சமூக அமைப்பு உருவாகவேண்டும் என்று அகிலன் காட்டுகிறார். பலருடைய வயிற்றுக்குப் போக வேண்டியதை ஒருவர் மட்டும் சம்பாதித்துச் சேர்த்து வைப்பது திருட்டு எனவும் பகல் கொள்ளையைவிடக் கேவலமானது எனவும் அகிலன் கூறுவது அவருடைய சமுதாயநோக்கை நன்கு புலப்படுத்தும். "நூற்றுக்கு ஐம்பதுபேர் குடிசைகளிலும்

பிளாட்பாரங்களிலும் புழுக்களிலும் கேவலமாக நெளியும் இதே நகரத்தில், நான் லட்சத்துக்குமேல் சம்பாதிக்கிறேன் என்றால் திருடி; பகல்கொள்ளைக்காரியைவிடக் கேவல மானவள். அவர்கள் வயிற்றுக்கும் துணிக்கும் போக வேண்டியதை நான் ஏமாற்றித் திருடுகிறேன்" ('எரிமலை' - ('எரிமலை') ப.19) 'எரிமலை' சிறுகதையில் அகிலன் கூறும் செய்தியால் அறியலாம். "மக்களுக்குச் சேரவேண்டியதைக் கொள்ளையடிப்பவர்களுக்கு மரண தண்டனையல்லவோ விதிக்கவேண்டும்" ('எங்கே போகிறோம்', ப.199) என்று 'எங்கே போகிறோம்' நாவலில் இதே கருத்தை வே று விதமாக அகிலன் கூறியுள்ளார். காந்தியப் பொருளாதாரம் என்னும் தர்மகர்த்தா கோட்பாட்டை அகிலன் வலியுறுத்துகிறார். ஒருவகையில், நடைமுறைக்கு இயைந்துவராத குறிக்கோள்நெறி என்று இதனைக் கொள்ளலாம். இந்த நெறியைப் பின்பற்றத்தவறி, முதலாளித்துவப்போக்கே நீடித்தால், இளையசமுதாயம் திரண்டு எழுவர்; வன்முறை நெறிதான் ஏற்படும் என்பதை மீண்டும் மீண்டும் பல படைப்புக்களில் அகிலன் வலியுறுத்தி வந்துள்ளார். "சத்தியத்தை நீங்க சாகடிச்சிங்க, அப்புறம் இந்த நாட்டிலே ரத்தப் புரட்சிதான் வரும்" ('எங்கே போகிறோம்', ப.235) என்று வரும் கூற்று இதனைக் காட்டும். அகிலன் தம்முடைய முதற் சிறுகதையான 'அவன் ஏழை' முதல் கடைசியாக எழுதிய 'வானமா பூமியா?' நாவல் வரை, பொருளாதார முரண் நிலையைத் தம் படைப்புக்களில் பல்வேறு பரிமாணங்களில் காட்டினார்.

பல சிறுகதைகளிலும் நாவல்களிலும் அகிலன் வறுமை யைப் படம்பிடித்துள்ளார். முதற்சிறுகதையான 'அவன் ஏழை' என்பதே வறுமைத்துயரை மையமிட்டதாகும். தன் தாயின் வறுமைத்துயரைக் குறைக்க அவளுக்கு உதவுவதற்காகக் காசுகளை விழுங்கிக் காசு மரம் தன் வயிற்றில் முளைத்ததாக எண்ணும் சிறுமியைக் 'காசுமரம்' சிறுகதையில் அகிலன் காட்டுகிறார். 'இனிமே உனக்கு ரொம்பப் பணம் கிடைக்கும் அம்மா. நான் இன்னிக்கு நிறைய காசு முழுங்கியிருக்கிறேன்; நான் செத்துப் போனவுடனே சீக்கிரம் காசுமரம் முளைக்கும். அப்புறம் உனக்குக் கஷ்டமே இல்லேம்மா" என்று காசுமரம் சிறுகதையில் சிறுமி காவேரி கூறுவது இதனைக் காட்டும். ('சக்திவேல்' (காசுமரம்), ப.171) 'தணியுமா?' என்னும் சிறுகதையில் பிறருக்குத் தண்ணீர்கொடுத்து உதவிய சிறுவன்

கோஷி பட்டினியால் வாடியபோது, அவனுக்குத் தண்ணீர் கொடுக்கக்கூட யாரும் முன்வராத நிலையில் அவன் இறக்கிறான் என்று அகிலன் காட்டுகிறார். இச் சிறுகதைகளில் வறுமையால் வாடிய குழந்தைகள் இறக்கும் முடிவைக் காட்டி, வறுமைத்துயரை ஆழமாகச் சிந்திக்கச் செய்கிறார் அகிலன்.

பிழைப்பதற்கு வழியின்றிப் பல இடங்களில் அலையும் இளைஞனுக்கு யாரும் வேலை தர முன்வரவில்லை. அதே சமயம், அவன் திருடனாக மாறுவதற்குத் துணை செய்யும் சமூகம், திருடியதற்காகச் சட்டத்தின் பெயரால் அவனைத் தண்டிக்கிறது. நீதிமன்றத்தில் அவன், தனக்குச் சிறைத் தண்டனைத் தருமாறும், அது கிடைத்தால் சிறையில் கிடைக்கும் கூழாவது தன் பசிக்குதவும் என்றும் கூறுகிறான். “ஞாயமாய்ப் பொழைக்க வழி இல்லைங்க. அதனால் திருடினேன்... எனக்கு விடுதலை வேண்டாம். என்னை ஜெயிலில் போடுங்க. ஜெயிலில் அரை வயிற்றுக்கஞ்சி கிடைக்கும். பசியால் சாவதைவிடத் தூக்குப் போட்டுச்சாவது கஷ்டமில்லை” (‘விடுதலை’ (விடுதலை) பக்.25-26). இக்கதையில் வரும் துயரமுடிவு படிப்பவரைச் சிந்திக்கத் தூண்டுகிறது. ஏழ்மை, வேலையின்மை, பசி ஆகியவை இளைஞனைத் திருடத் தூண்டுகின்றன. உழைத்துப் பிழைக்கமுடியும் என்பதான வாழ்க்கை குறித்த நம்பிக்கையை, வறுமை அடியோடு நீக்கிவிடுகிறது என்று இக்கதை காட்டுகிறது. இளைஞர்களுக்கு நாளை பற்றிய நம்பிக்கையையும், வாழ்வதற்குரிய உத்திர வாதத்தையும் தராத, வர்க்க முரண்பாடுமிக்க சமூக அமைப்பு மாற்றப்படவேண்டும் என்று அகிலன் நம்மைச் சிந்திக்க வைக்கிறார். ‘சுதந்திரப்பறவை’ என்னும் சிறுகதையில், வேலை கிடைக்காத இளைஞன், “நம் சமுதாயத்தின் தற்போதைய போக்கு நம் அடிப்படைத் தேவைகளைக் கவனிக்கவில்லை. அதை அடியோடு வேரறுத்துவிட்டு நாம் ஒரு புதிய சமுதாயத்தை ஏற்படுத்தவேண்டும்” (‘சக்திவேல்’ (சுதந்திரப் பறவை) ப.180) என்று கூறுவதாக வருகிறது. நம்முடைய சமூக அமைப்பு, பொருளாதார ஏற்றத்தாழ்வுடன் இருக்கும்வரை, வறுமைத் துயர் ஏழைகளைப் பாதிக்கும். எனவே, சமூக மாற்றம் ஒன்றுதான் இதற்கு மாற்று வழி என்று இளைஞர்களைக் கொண்டு அகிலன் பேசவைக்கிறார். “காலத்தை நாம் மாற்றத்தான் போகிறோம் . அதுவரையில் பொறுமையாக இரு” (‘எங்கே போகிறோம்’, ப.298) என்று ‘எங்கே

போகிறோம்' நாவலில் வரும் கூற்றும் இதை வலியுறுத்தும். வறுமையால் வாடும் ஏழைகளின் அவலத்தைக் காட்டுவதற்கு, செல்வம் படைத்தவர்கள் நேரடியாகக் கதைமாந்தர்களாகச் சிறுகதைகளில் அகிலன் கொண்டு வருவதில்லை. வறுமையால் வாடுபவர்களின்பால் படிப்பவர் கவனஞ் செல்லுமாறு கதைகளைப் படைக்கிறார். அதே நேரத்தில், இழை பிரியாமல் செல்வர்களைப் பின்னணியில் உலாவவிட்டு முரணை உருவாக்குகிறார். இந்த உத்தியின் மூலம், வறுமையின் கொடுமையும், வறுமைக்குக் காரணமான செல்வந்தர்களின் பணங்குவிக்கும் தன்னலப் போக்கும் அருமையாகச் சித்திரிக்கப்படுகின்றன. 'கோயில்விளக்கு', 'புயல்', 'புகழும் விளம்பரமும்', 'சுதந்திரப்பறவை', 'குழந்தையின் கேள்வி', 'மேகஞ்சாரம்', 'எல்லோருக்கும் பெய்த மழை' ஆகிய சிறுகதைகளில் இந்தப் போக்கைக் காணலாம். மேலும், வர்க்க முரண்பாட்டை எளிமையான உவமைகள் மூலம் அகிலன் விளக்குகிறார். 'எல்லோருக்கும் பெய்த மழை' என்னும் சிறுகதையில் இதனைக் காணலாம். "சுடுகாடு போல, இல்லை அதிலும் மோசமாகப் பணம்படைத்த இந்தக் கிராமத்து மிராசுதார்களின் உள்ளம்போல அந்தக் கிராமும், அதைச் சுற்றியுள்ள பிரதேசமும் வறண்டு கிடந்தன" ('நிலவினிலே' (எல்லோருக்கும் பெய்தமழை) ப .92). மிக எளிமையான சொற்களில், பின்னணி வருணனையும், கதையின் மையத்திற்குத் தேவையான, பொருளாதார வேறுபாடு குறித்த கருத்தும், இதில் ஒருசேர வெளிப்படுகின்றன. கதைகளில் வெளிப் படையாகச் செல்வர்கள் பற்றிய தன்னுடைய கருத்தை அகிலன் கூறுகிறார். இதனைப் பசி சிறுகதையில் 'பணக்காரர்களோ எதையும் திருட்டுக் கொடுக்கும்படியாக அவ்வளவு ஏமாளி களாக இல்லை. ஏமாளிகளாக இருந்தால்தான் அவர்கள் பணக்காரர்களாக ஆகியிருக்க மாட்டார்களே' ('செங்கரும்பு' (பசி) ப.93) என்று கூறுவதனால் அறியலாம். ஏழை மக்கள் அன்பும் இரக்கமும் மனிதாபிமானமும் மிக்கவர்களாக உள்ளனர் என்று அகிலன், 'மூன்று வேளை', 'புகழும் விளம்பரமும்', 'நொண்டிக்குப்பன்' ஆகிய சிறுகதைகளில் காட்டுகிறார். உயிருக்கு மன்றாடும் ஒருவனை நடுத்தெருவில் கண்டும் காணாமலும் வசதிமிக்கவர்கள் செல்ல, வறுமையில் வாடுகின்ற பெண், அவனுக்கு உதவ தன் காதுத்தோட்டை அடகுவைக்கிறாள் என்று 'புகழும் விளம்பரமும்' சிறுகதையில்

அகிலன் காட்டுகிறார். ஏழைமக்கள், எவ்வளவுதான் வறுமை வந்த போதிலும், உழைத்துப்பிழைக்கவே விரும்புகின்றனர் என்று பல சிறுகதைகளில் ('பொங்கலோ பொங்கல்', 'பிள்ளைவரம்', 'மூன்றுவேளை') அகிலன் காட்டுகிறார். ஏமாற்றத் தெரியாதவர்களாய், எதையும் உண்மை என நம்புகிறவர்களாய் இவர்களை ஆசிரியர் படைத்துள்ளார். இதனை 'ஏழைப் பங்காளர்' சிறுகதையில், "தங்களை வெட்டுகின்றவர்களையே நம்பும் ஆடுகளின் கூட்டத்தை" ('சத்திய ஆவேசம்' (ஏழைப்பங்காளர்), ப.69) என்று காட்டுகிறார். செல்வர்கள், திரைப்படம், அரசியல், பொது மேடை போன்ற அனைத்து வழிகளின் மூலமாகவும் தங்களைப் பற்றிய பொய்யான மாயத்தோற்றத்தை உருவாக்கி வருகிறார்கள். ஏழைகளும், இதனை உண்மையென நம்பி ஏமாறுகின்றனர். இதைத்தான், 'தன்னை வெட்டுபவனை நம்பும் ஆட்டு மந்தை' மனவுணர்வு என்று அகிலன் காட்டுகிறார். வறுமையிலும்கூட, திரைப்படம் பார்ப்பதற்கும் திரைப்பட நடிகர்களைத் தம்முடைய வழிபடு கடவுளராகக் கொண்டாடுவதற்கும் மக்கள் தயங்கவில்லை. திரைப்படம் காட்டும் நிழல் வாழ்வை மெய்யென நம்பும் அறியாமை யிலிருந்து விடுபடாதவரை, ஏழ்மை நம்மை விட்டு நீங்காது என்று அகிலன் காட்டுகிறார். ஏழை மக்களின் இந்த அறியாமையைத் தங்களுக்குச் சாதகமாகச் செல்வர்கள் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்று சில சிறுகதைகளில் அகிலன் காட்டுகிறார். 'சாயங்கால வேளைகளில் எல்லாச் சினிமாக் கொட்டகைகளிலும் கூட்டம் நிறைய இருந்தது. அடித்துப் புடைத்துக் கொண்டு ஜனங்கள் உள்ளே நுழைந்தனர்... கிராமங்கள் பஞ்சத்தால் வாடி பட்டினியால் துடிப்பது பொய்யா? அல்லது இந்தக்கூத்தும் பாட்டும் அதற்காக வெறிகொண்டு திரியும் சனக்கூட்டமும் பொய்யா?' ('செங்கரும்பு' (பசி) ப.89) என்று கூறுவது இதனை வலியுறுத்தும். வறுமை நீங்கிடச் சமச்சீரான, பொருளாதார முரணற்ற சமூகம் உருவாக, சமுதாய மாற்றம் ஏற்படவேண்டும் என்று காட்டும் அதே வேளையில், உழைப்பின்மையையும், அறியாமையையும், திரைப்பட மோகத்தையும் விட்டு ஒழித்தால்தான் மேன்மைபெற முடியுமென்றும் வலியுறுத்துகிறார்.

செல்வர்கள் ஏழைகளைத் துன்புறுத்தி, துன்பமுறும் அவர்களிடமிருந்து தாம் லாபம்தேட முயல்கின்றனர்

என்பதைப் 'புயல்' என்னும் சிறுகதையில் அகிலன் காட்டுகிறார். ஏழைகளின் துயர் கண்டு இரங்கி அவர்களுக்கு உதவாது, அவர்களுடைய துயரின் மூலம் தமக்குப் புகழ் வருமானால், அதையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள முனைகின்றனர். 'சாப்பாடு பரிமாறும் ஒருவரைச் சுற்றிக்கொண்டு பளிச் பளிச்சென்று ஒளி மின்னச் சிலர் புகைப்படம் பிடித்தார்கள். "பெரியசாமியே தம் கையால் பரிமாறினாராமே என்று பத்திரிகையிலே போடுவதுக்கு இப்போது படம் பிடிக்கிறாங்க" ('சகோதரர் அன்றோ?' (தெய்வத்தின் குரல்), பக்.97-98) என்று வருமிடம் இதைக் காட்டும். வயிற்றுக்குச் சோறிட்டு உதவுவதைக்கூட, தன்னுடைய விளம்பரத்திற்காகச் செய்யும் நிலை இதில் காட்டப்படுகிறது. தங்களிடமுள்ள பணத்தின் துணையால், பத்திரிகை, சினிமா, அரசியல் பேச்சுமேடை, சமயம் என்று மக்களைப் பரந்த அளவில் எட்டும் அனைத்தையும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். ஏழைமக்களைச் சிந்திக்கவிடாமல், தம் கட்டிற்குள் செல்வர்கள் வைத்துள்ளனர். சிந்தித்து அவர்கள் செயல்பட்டால் தங்களை எதிர்க்கத் துணிவார்கள் என்பதால், சிந்திக்கவிடாது மூளைச்சலவை செய்கின்றனர் என்று அகிலன் படைப்புக் களில் தொடர்ந்து காட்டுகிறார். 'பொன்மலர்', 'புதுவெள்ளம்', 'சித்திரப்பாவை', 'எங்கே போகிறோம்' ஆகிய நாவல்களில் செல்வர்களின் இந்த நிலைப்பாடு மிக விரிவாகக் காட்டப்பட்டுள்ளது. செல்வர்கள், கருப்புச்சந்தை மூலமாகப் பணம் குவிக்கின்றனர். முறையில்லாத, இந்தக் கள்ளப்பணம், சமூகத்தின் பொருளாதாரத்தைச் சீர்குலைத்து வறுமையைப் பன்மடங்காக ஆக்குகிறது. இதனை 'எங்கே போகிறோம்' நாவலில் "நாட்டில் பொருளாதார வளர்ச்சி இருக்கும்... கருப்புப்பணம் பெருகும். பணக்காரன் மேலும் பணம் குவித்துக்கொண்டே போவான். ஏழை பரம ஏழையாக ஆகிக்கொண்டேவருவான். உங்களைப் போன்ற பத்திரிகைக் காரர்களெல்லாம் கள்ளப்பணத்துக்கு வெண்சாமரம் வீசத்தொடங்குவீர்கள்" ('எங்கே போகிறோம்', ப.200) என்று புவனாவின் கூற்றில் இதைக் கூறுகிறார்.

இந்த நிலை மாறி, சமதர்மச் சமுதாயம் உருவாவதற்குக் காந்தியப் பொருாதாரம்-தர்மகர்த்தா முறை - நடைமுறைக்கு வரவேண்டும் என்று அகிலன் வலியுறுத்துகிறார். பொருள்

உள்ளவன், தன்னிடமுள்ள, தேவைக்கு அதிகமான பொருளைப் பிறருக்குப் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும்; தனிமனிதனுடைய தேவைகள் கட்டுப்படுத்தப்படவேண்டும்; எளிய வாழ்க்கையும், உயர்ந்த சிந்தனையும் வேண்டும் என்பது காந்தியநெறி. "மனிதனுடைய தன்னல ஆசைகளுக்கு ஒரு எல்லை கட்டுவது மிகவும் அவசியமானது. அதற்குச்சட்டமும் வேண்டும்; நடவடிக்கையும் வேண்டும்". ('எங்கே போகிறோம்?' பக்.200-201). பணநாயகமும் முதலாளித்துவமும் முதன்மை பெற்றுள்ள சமுதாய அமைப்பு அடியோடு மாற்றப்பட வேண்டும் என்பதே அகிலன் முன்வைக்கும் தீர்வாகும். அடிப்படையான சமூகமாற்றமும் மனமாற்றமும் ஏற்பட வேண்டும் எனவும் அகிலன் காட்டுகிறார்.

இளைஞர்களிடையே வன்முறை எண்ணம் மிகுதியும் பரவிவருவதை அகிலன் பல படைப்புகளில் தொடர்ந்து காட்டி வந்துள்ளார். வறுமையும் வேலை வாய்ப்பின்மையும் பெருகி, வாழ்க்கை பற்றிய அவநம்பிக்கையும் பெருகிவிட்டன; எதிர்காலம் பற்றிய உத்திரவாதம் இல்லை. இந்த நிலையில் செல்வர்களின் பொருள் வேட்டையையும் கறுப்புப்பணம் குவிக்கும் பணநாயகப் பாங்கையும் கண்டு, சமூகமாற்றத்திற்கு வேறு வழி தெரியாதபோது, வன்முறை ஒன்றே வழி என எண்ணிச் செயற்படுகின்றனர். இதனை அகிலனின் 'பாவை விளக்கு', 'புதுவெள்ளம்', 'எங்கே போகிறோம்', 'வானமா பூமியா' ஆகிய நாவல்களிலும் 'சுதந்திரப் பறவை' போன்ற சிறுகதையிலும் காணலாம். 'இன்றைய நாட்டில் ஏழைக்கு உணர்ச்சி இருக்கக்கூடாது. அவன் லட்சியக் கனவும் காணக்கூடாது. சோற்றுக்கு வழி கோலாத நாட்டில் லட்சியம் எங்கே உருப்படப்போகிறது" ('சக்திவேல்', (சுதந்திரப்பறவை), ப.180) என்று சுதந்திரப்பறவை சிறுகதையில் வரும் இளைஞன் ரத்தினசாமியின் கூற்று இளைஞர்களிடையே காணப்படும் வன்முறைக்கான காரணத்தைக் காட்டும். 'புதுவெள்ளம்' நாவலில் பெருமாள்சாமி, 'எங்கே போகிறோம்' நாவலில் சுபாஷ், 'வானமா பூமியா' நாவலில் மணி ஆகிய மாந்தர்கள் வன்முறை நெறியை ஆதரிப்பவர்களாகப் படைக்கப் பட்டுள்ளனர். நாம் காணும் நடைமுறைச் சமூக அமைப்பில் உள்ள பணநாயகப்போக்கும் முதலாளித்துவப்போக்கும் இளைஞர்களிடையில் வன்முறை ஒன்றால்தான் சமூகமாற்றம் ஏற்படும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியுள்ளன. "மனுஷனை

மனுஷன் வயித்திலே அடிக்கிறதிலே, சுரண்டுறதிலே, நாயிலும் கேவலமாக மனுஷனைத் தெருவிலே வாழச்சொல்றதிலே எங்கே உங்க சத்தியம் இருக்கு? எங்கே உங்க அகிம்சை இருக்கு? உடம்பிலே அடிக்கிறதுதான் வன்முறையா? வயிற்றிலே அடிக்கிறது வன்முறையில்லையா?... கள்ளப்பணத்திலே அரசியல் நடத்தறதிலே, பொய்க் கணக்கிலே பொருளாதாரம் நடத்தறதிலே எங்கே சத்தியம் இருக்கு? எங்கே அகிம்சை இருக்கு?" ('வானமா பூமியா?', பக்.95-96) என்று 'வானமா பூமியா?' நாவலில் மணி என்னும் இளைஞன் கூற்றில் வருவது இதை வலியுறுத்தும், நம்முடைய சமூக அமைப்பும் அரசியல், பொருளாதாரக் கட்டமைப்பும் வர்க்க வேறுபாட்டை மிக அதிகமாக்கி, வன்முறை ஒன்றால்தான், சமச்சீர்மை ஏற்படும் என்ற எண்ணத்தை இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளதை இது காட்டும், ஆயினும், நாவலின் போக்கில், இளைஞர்கள் வன்முறை நெறியை விடுத்து, அகிம்சை நெறிக்கு மாறிவிடுவதை அகிலன் இந்த நாவல்களில் காட்டியுள்ளார். அதற்கு அகிலன் காந்தியநெறியில் கொண்டுள்ள பற்றுத்தான் காரணமாகும்.

பண்பாட்டுச் சீரழிவு

அடிப்படையான நம்முடைய பண்பாட்டை இழந்து, வேரில்லாத மரமாக, தேவையற்ற மேலைநாட்டு, முதலாளித்துவ நாடுகளிலுள்ள ஒழுக்கக்கேடுகள் மிக்க கலாச்சாரத்தைப் பத்திரிகைகளும் திரைப்படமும் செய்து வருகின்றன என்பதைப் 'பொங்கலோ பொங்கல்', 'பசு, பசி, பாசம்' சிறுகதைகளிலும், 'எங்கே போகிறோம்', 'சித்திரப் பாவை' நாவல்களிலும் பல கட்டுரைகளிலும் அகிலன் காட்டியுள்ளார். இவை நமக்கு வேண்டாம் எனவும், உழைப்பை மதித்துப் போற்றும் சமூக அமைப்பு ஏற்படுவதற்கு ஏற்றமுறையில் நம்முடைய பண்பாட்டையே திரைப்படம், பத்திரிகைகள் வெளிப்படுத்தவேண்டும் எனவும் அகிலன் வலியுறுத்துகிறார். "மண்வளத்தின் இரத்தம் ஓடுவதை இந்தப் பத்திரிகை சொல்கிறது. தொலைதூரம் போய் நாம் மேல் நாடுகளைக் காப்பியடிப்பதைவிட, மலையாளப் பத்திரிகைகளைப் பார்த்தாவது நாம் இழந்துவரும் நம் கலாச்சாரப் பிரக்ஞையைப் பெறலாம்", ('எங்கே போகிறோம்', பக்.149-150) என்று 'எங்கே போகிறோம்' நாவலில் கூறுவது இதனை வலியுறுத்தும். பொங்கல் விழா, உழைப்பை முதன்மையாகக்

கொண்ட சமூக அமைப்பில் உழைப்பிற்கு நன்றி செலுத்துவதற்கு என ஏற்பட்ட திருவிழா. அது நம்முடைய சமூகப் பண்பாட்டின் அடையாளம். அந்த விழாவிற்காக, ஒருவர் மற்றொருவருக்கு அனுப்பும் பொங்கல் வாழ்த்து அட்டையில் உழவுத் தொழிலுக்கு முதன்மைதராமல், திரைப்பட நடிகர்-நடிகையர் படங்களை அச்சிட்டு அனுப்பும் பண்பாட்டுச் சீரழிவைப் 'பொங்கலோ பொங்கல்' சிறுகதையில் அகிலன் காட்டுகிறார். "குடியானவனையும் தொழிலாளியையும் வருஷத்திலே ஒரு நாளாவது மனுஷன் நினைச்சுப்பாக்கிறதுக்கு ஏற்பட்ட பொங்கல்டா இது. கறவை மாட்டுப் படத்தையோ காளை மாட்டுப் படத்தையோ நீ வாங்கியிருந்தா, நீ சோத்திலே உப்புப் போட்டுத் திங்கறதுக்கு அது நியாயமா இருந்திருக்கும்" ('சகோதரர் அன்றோ' ('பொங்கலோ பொங்கல்'), ப.50) என்று 'பொங்கலோ பொங்கல்' சிறுகதையில் கூறுவது இதை வலியுறுத்தும். இதே கருத்தைச் 'சித்திரப்பாவை' நாவலிலும், 'பண்பாட்டுக்கு ஓர் இயக்கம்', 'போரும் பொங்கலும்' ஆகிய கட்டுரைகளிலும் அவர் கூறுகிறார். உழைப்பைப் போற்றும் விழா, உண்மையான பண்பாட்டு விழாவாக அமையவேண்டும் என அகிலன் வலியுறுத்துகிறார்.

பணநாட்டமும் பணம் குவிக்கும் தன்னல வேட்கையும் மிக்க ஆதிக்கப் போக்குமிக்க அரசியலாளர்களால் அரசியல் சீரழிவு ஏற்பட்டுள்ளதை 'எங்கே போகிறோம்' நாவலில் அழுத்தமாக அகிலன் காட்டுகிறார். சமுதாயக் குறைபாடுகளைக் கூறி, அவைகளை நீக்கும் நெறிகளையும் கூறுகிறார். சமூக அமைப்பு முற்றிலும் மாற்றப்படவேண்டும் என்று காட்டுகிறார். சமூகப்பொறுப்புணர்வுமிக்க படைப்பாளராக்வே அகிலன் உள்ளார். அவருடைய சமூகப் பொறுப்புணர்வு, 'தீமையை எதிர்த்துப் போராடவேண்டும்' என்னும் அடிப்படையும் அனைவரும் மேம்பாடு அடைந்து, சமச்சீரான சமூகம் ஏற்படவேண்டும் என்னும் இலக்கையும் கொண்டனவாகும். போராட்டநெறி அகிம்சைநெறியிலானதாக அமையவேண்டும் என்கிறார். அது காந்தியக் கலைக்கொள்கையின் வெளிப்பாடாகும்.

இயல்—6

பெண்ணியச் சிந்தனை

பெண், ஆணுடன் சரிநிகர் சமமாக வாழவேண்டும். குடும்பம், சமூகம் ஆகிய வெவ்வேறு தளங்களில், ஆணுக்கு இணையாகக் கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரச் சுதந்திரம் ஆகிய அனைத்து நிலைகளிலும் சமவுரிமை பெறுவது; சார்ந்து வாழாமல், இணையாகவும் இசைந்தும் வாழ்வது; சமவுரிமை இல்லாதவிடத்து, சமூக மாற்றத்திற் காகவும், உரிமைக்காகவும் இருவருமாகப் போராடுவது என்பன அடிப்படைப் பெண்ணியச் சிந்தனைகளாகும். அகிலன் எழுதத் தொடங்கிய காலத்தில் நம்முடைய நாடு அடிமைப்பட்டிருந்தது. அரசியல் விடுதலையை முன்வைத்துப் போராடியவர்கள், பெண்ணுரிமை உள்ளிட்ட சமூகவிடுதலைக் காகவும் போராடினர். தொடக்காலத்திலிருந்தே, சிறுகதை, நாவல் ஆகிய படைப்புக்களில் பெண்ணுரிமையை அகிலன் வலியுறுத்தினார். வரலாற்று நாவல்களில், கதை நிகழும் காலச் சமூகச் சூழ்நிலைக்கேற்ப, பெண்ணை மரபு வழியான முறையிலே படைத்தார். இதற்குச் சான்றாக, போர்க்காலத்தில் சோழமன்னனால் பாலுறவு வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட கயல்விழி, கற்பு பற்றிய பழமையான கொள்கையில் நின்று மனம் வாடுவதை எடுத்துரைக்கும் ‘கயல்விழி’ நாவலைக் கூறலாம். மாறாகச் சமூக நாவல்களில் மரபுவழியான பார்வையை விடுத்து, ஆணுக்குச் சமமாக, உரிமையுடைய நிலைகளில் பெண்களை அகிலன் படைத்துள்ளார் ‘சித்திரப்பாவை’, ‘எங்கே போகிறோம்’, ‘சிநேகிதி’ ‘பொன்மலர்’ போன்ற நாவல்கள் இதற்குச் சான்றுகளாகும்.

ஆணுக்குரிய போகப் பொருளாகவும் பாலுறவுப் பிம்பமாகவும் பெண்ணைப் படைத்து, அவளுடைய அங்க வருணனையை உச்சி முதல் பாதம் வரை அப்பட்டமாக வருணிக்கும் மரபை அகிலன் ஏற்கவில்லை. பெண் மாந்தர்களின் உடலை வருணிக்கும் போக்கு அவர் படைப்புக்களில் இடம் பெறவில்லை. ஆணுக்கு இணையான

வளாக, ஆணுடைய ஆற்றலை அறிந்து, ஊக்கமூட்டி, அவனைச் செயற்படுத்தத் தூண்டுபவளாகப் பெண் இருப்பதை அவருடைய பல படைப்புக்களில் காணலாம். மிகக்குறைவான நிலையில் கண்கள், கூந்தல், ஒல்லியான உடல் அமைப்பு என்று அவர் பெண்ணின் புறத்தோற்றத்தை வருணிக்கிறார். படிப்பவர் மனத்தில், பெண்ணைக் கவர்ச்சிப் பொருளாகவும் தன் பாலுறவு நாட்டத்திற்குரிய இன்ப நுகர்வுப் பொருள் என்ற எண்ணம் தோன்றாதபடியும் மிகவும் அருகிய வழக்காகவே பெண்ணின் புறத்தோற்றத்தை அவர் வருணிக்கிறார். பாலின வேறுபாடு காட்டி, பெண்ணை இழிவுபடுத்துவதை அவர் ஏற்பதில்லை. மாறாக, திரைப்படமும் பத்திரிகைகளும் பெண்ணை அவ்வாறு, பாலின வேறுபாட்டில் கொச்சைப் படுத்தி வருணிப்பதை அகிலன் தம் படைப்புக்களில் கண்டிக்கிறார். பெண்ணை இழிவுபடுத்தும் வணிகப் போக்கை அவர் கடுமையாகச் சாடுகிறார். பெண்ணைக் குறித்த அவருடைய சிந்தனைகள், குடும்பம், சமூகம் ஆகிய தளங்களில் பெண்ணுக்கு எழும் சிக்கல்கள், அவைகளுக்கான சமூகக் காரணங்கள், அச்சிக்கல்களால் பெண்களுக்கு ஏற்படும் பாதிப்புகள், அந்தச் சிக்கல்களைப் பெண்கள் எதிர்கொள்ளும் முறை, சிக்கல்களுக்கு ஆசிரியர் தரும் தீர்வுகள் என்பனவற்றை இவ்வியலில் காண்போம். பெண்களின் நிலையிலிருந்து, பெண் பார்வையில் பிரச்சினைகளை அணுகி, தீர்வு காணும் போக்கை அவரிடம் காணமுடிகிறது. மரபுசார்ந்த நோக்கை மையமிட்டு வரலாற்று நாவல்களில் பெண்களைக் காட்டும் அகிலன் சமூகப் புனைகதைகளில் மரபைமீறிய புதுமைக் கண்ணோட்டத்தில் பெண் மாந்தர்களின் சிக்கல்களுக்குத் தீர்வு காட்டுகிறார். அடிப்படையில், பெண் விடுதலையையும் பெண்ணுக்குச் சமஉரிமையையும் வற்புறுத்துகிற படைப்பாளர் அவர். தமிழ்ச் சமூக அமைப்பில், குடும்ப நிறுவனமையத்தை அதன் கட்டுக்கோப்பை வலியுறுத்தும் பாங்கிலே அவர் படைத்துள்ளார். சமஉரிமை அற்ற நிலையில், பெண்ணை அடிமைப்படுத்தும்போது, வேறு வழியற்ற சூழலில், பெண் தன்னுடைய குடும்ப அமைப்பை விடுத்து வெளியேறி வருவதையும் அகிலன் சில படைப்புக்களில் படைத்துள்ளார். அவரிடம் அடிப்படையில் காணப்படும் மனித மேன்மைக்கும் முன்னேற்றத்திற்கும் எதிரான தீமைகளை எதிர்த்துப் போராடவேண்டும் என்னும் நோக்கமே இதற்கான

காரணமாகும். மேலைநாட்டு நாகரிக மோகத்தில் சிக்கி, தன் பொறுப்பையும் கடமைகளையும் மறந்து, குடும்ப நிறுவனத்தின் இயக்கத்தைத் தடைப்படுத்தும் நவநாகரிகப் பெண்ணை அகிலன் கண்டிக்கிறார். 'மின்னுவதெல்லாம்' சிறுகதையில் வரும் மனோரமா, 'சித்திரப்பாவை' சுந்தரி ஆகிய படைப்புக்களில் அகிலன் இதைக் காட்டி உள்ளார். பெண்ணைப் பல்வேறு நிலைகளில், நுட்பமான உணர்வு களுடன் அகிலன் படைத்துள்ளார்.

குடும்ப வாழ்க்கை

குடும்பம் ஆணும் பெண்ணும் இணைந்து ஒருவருக் கொருவர் அன்பும் அநுசரணையும் கொண்டு வாழவேண்டிய இடம். அன்புப்பயிர் வளர்க்கவேண்டிய இடமாக அது அமையவேண்டும் என்று அகிலன் வலியுறுத்துகிறார். ஆணுக்கு உதவி, அவனைத் தூண்டி, அவனுள் ஒளிந்துள்ள ஆற்றலைத் தூண்டி அவனைச் செயற்படவைப்பவளாக, அறிவுத் துணையாகப் பெண் இருக்கிறாள் என்று அகிலன் 'பாவை விளக்கு' நாவலில் உமா படைப்பில் காட்டுகிறார். 'வெறி' என்னும் சிறுகதையிலும் எழுத்தாளனின் படைப்பாற்றலைத் தூண்டி, அவனை எழுதச் செய்யும் ஆற்றல் மிக்கவளாக அகிலன் படைத்துள்ளார். "உங்களால் எழுதாமல் இருக்க முடியாது; நீங்கள் எழுதுங்கள்; நீங்கள் எழுதப் பிறந்தவர்... எனக்காக எழுதுங்கள், எனக்காகவே எழுதுங்கள்" ('வழிபிறந்து', ('வெறி'), ப.119) என வரும் 'வெறி' சிறுகதை இதைக் காட்டும். "கதைகள் மண்ணுக்கென்று சொல்லாதீர்கள். 'சாகாத கதை, சாகாத கதை' என்று எனக்கு முன்னால் நேற்றுவரையில் கதறிவிட்டு, இப்போது ஏன் வேஷம் போடுகிறீர்கள்? தரையில் கிடக்கும்போது அது களிமண், பொம்மையாகச் செய்தவுடன் அது சக்திபெற்ற கடவுள். நாம் கும்பிடும் கடவுள்" ('பாவை விளக்கு', ப.381) என்று தணிகாசலத்திடம் அவன் படைக்கும் கதைகள், 'சாகாத கதை; மண்பொம்மை அல்ல; அவை நான் கும்பிடும் கடவுள்' என்று கூறி, அவனிடம் உள்ள படைப்பாற்றலின் மேன்மையைக் கூறி, தூண்டும் ஆற்றலாக, அறிவுத் துணையாகப் பெண் உள்ளாள் என்பதைப் 'பாவை விளக்கு' நாவலில் உமா படைப்பின் வழி அகிலன் காட்டுகிறார். 'உமாவுக்கு கதைகளில் அத்தகைய பக்தி, என்று தணிகாசலத்தின் எண்ண ஓட்டத்தில் வருவது இதைக் காட்டும். உமா, மற்றொரு சந்தர்ப்பத்தில், "பேசாமல் சிந்தனை

செய்யுங்கள். இந்தச் சூழ்நிலையில், ஒரு கற்பனை பிறக்காவிட்டால் நீங்கள் கலைஞரே அல்ல... கடலையும் வானத்தையும் பாருங்கள்... எனக்காகக் கடலைப் பார்த்துக் கொண்டே ஒரு கதை உருவாக்குங்களேன்" என்று தணிகாசலத் திடம் கூறுவதும் ('பாவை விளக்கு, ப.454) இதை வலியுறுத்தும்.

'பாவை விளக்கு' நாவலில், தணிகாசலத்திடம் ஓர் ஒளி தென்படுவதாக முதலில் தேவகிதான் கண்டு கொள்கிறாள். தணிகாசலத்திடம் அறியாத பிள்ளை ஒருவனும் அறிந்த மனிதன் ஒருவனுமாக - சாதாரண மனிதனும் படைப்பாளன் ஒருவனுமாக - இருவேறுபட்ட ஆளுமைகள் இருப்பதைத் தேவகிதான் முதலில் கண்டுகொண்டதாக அகிலன் காட்டுவதும் இதனை வலியுறுத்தும், தணிகாசலத்தை இறுதிவரையிலும் செயற்படத் தூண்டுபவளாகவும் தேவகி படைக்கப்பட்டுள்ளாள். ஆணிடம் உள்ள ஆற்றலைக் கண்டுகொண்டு அவனைச் செயற்படத் தூண்டும் பெண்ணை இங்கு அகிலன் படைத்துள்ளார்.

மணவாழ்வு

திருமண வாழ்வு பெண்ணுக்கு உகந்ததாக, அவள் விரும்பியவண்ணம் அமையவேண்டும் என்கிறார், அகிலன். காதல்மணத்தையும் கலப்புமணத்தையும் அவர் வலியுறுத்து கிறார். காதல் கைகூடாமல் போவதற்குத் தடையாக உள்ள சாதி, பொருளாதாரம் போன்றவற்றை எதிர்க்கிறார். காதல் புரிந்து, பெண்ணைத் தன் இச்சைக்கு உரிய போகப்பொருளாக அனுபவித்துவிட்டு, திருமணம் என்று வரும்போது வரதட்சணையைக் காரணம் காட்டித் தப்பிக்கும் ஆணைப் புறக்கணித்து ஒதுக்கும் புவனா என்ற பெண்ணை 'எரிமலை' சிறுகதையிலும் 'எங்கே போகிறோம்' நாவலிலும் அகிலன் காட்டுகிறார். தன்னுடைய பெற்றோர்களின் வற்புறுத்தலால் தான் வரதட்சிணை கேட்டதாகக் காதலன் சுந்தரேசன் கூறுகிறான். அது கேட்டு புவனா, "அப்பா அம்மாவைக் கேட்டுக்கொண்டு என்னோடு நீங்கள் பழகியிருக்கவேண்டும்... உங்களைக் கல்யாணம் செய்துகொண்டு உத்தியோகம் பார்த்தால் ஒரு வருஷத்தில் அந்தப் பணம் உங்களுக்கு வந்துவிடுமென்று சொல்லிக் கெஞ்சினேனே. நீங்கள் போகலாம்" ('எங்கே போகிறோம்', ப.278-281) என்று வரும் புவனாவின் கூற்று இதனை வலியுறுத்தும். வரதட்சணை

கொடுக்கும் நிலையில் இல்லாத ஏழைப் பெண் என்று தெரிந்தும், தன் பெற்றோரைக் காரணம் காட்டி, தன் காதலியைக் கைவிட ஆண் தயாராக இருக்கிறான். அப்படிப்பட்ட மனஉறுதியற்ற காதலனைப் புறக்கணிக்கும் பெண்ணை இங்கு காட்டுகிறார் அகிலன். காதலிப்பதற்கு நம் சமூக அமைப்பில் ஆண்கள் ஆயத்தமாக உள்ளனர். பொறுப்புடன், மணஞ்செய்துகொண்டு வாழ்வதற்கு அவர்கள் தயங்குகின்றனர் என்று அகிலன் காட்டுகிறார். இதற்கு அடிப்படையில் பெண்ணை, வெறும் பாலுறவு, இன்ப நுகர்விற்காக மட்டுமே பயன்படுத்த முனையும் ஆணின் மன நிலை காரணமாகும்.

திருமணம் பேசும்போது, பெண்ணுடைய விருப்பம் அறிந்து போற்றப்பட வேண்டும் என்பதை அகிலன் வலியுறுத்துகிறார். பெரியோர்களால் பேசி முடிவு செய்யப்படும் ஏற்பாட்டுத் திருமணத்தில், ஆணைப்போலவே பெண்ணுடைய உணர்வும் மதிக்கப்படவேண்டும். மனமொன்றிய மணத்தால்தான் அன்பான குடும்பவாழ்க்கை அமையும் என்பதை அகிலன் பல்வேறு கதைகளில் காட்டுகிறார். மனம் ஒன்றாத திருமணத்தால், குடும்ப அமைதி குலைவதையும், இல்வாழ்க்கை வீணாவதையும் அகிலன் காட்டுகிறார். இதனைச் 'சித்திரப்பாவை' நாவலில், 'அட்சதை அரிசியும், மலரும் பொழிந்து கொண்டேயிருந்தன. அந்த அரிசியும் மலருமே வாழ்க்கைக்கும் லட்சியத்திற்கும் உரிய சின்னங்கள் போலும். ஒட்டி உறவுகொள்ள முடியாத இருதுருவங்களை ஒன்றாக இணைக்கவேண்டும் என்ற ஆசையால் உருவாக்கப்பட்ட கலவைச் சின்னங்கள் போலும்' ('சித்திரப்பாவை', பக்.270-271) என்று வரும் வருணனை இதைப் புலப்படுத்தும். மனமொன் றாத பொருந்தாத மணத்தினால் குடும்ப வாழ்க்கை சிதைந்துபோவதைச் 'சித்திரப்பாவை' சுந்தரி படைப்பில் காட்டுகிறார். கணவன் மனைவி இருவருக்கும் சமமான பொறுப்பும் உரிமையுமுள்ள இடமாகக் குடும்பம் அமைய வேண்டும் என்று மீண்டும் மீண்டும் வற்புறுத்துகிறார்.

தான் விரும்பியவனை மணந்து கொள்ளமுடியாமல் போன நிலையில், தன்காதலை முற்றிலுமாக மறந்துவிட்டு, தனக்குக் கிடைத்த குடும்பவாழ்க்கையை ஏற்று வாழவேண்டும். அதுதான் பொருத்தமான வாழ்க்கை நெறி என்பதைப் பல படைப்புக்களில் அகிலன் காட்டுகிறார். இதற்கு மாறாக,

மணமான பின்னும் பழைய காதல் வாழ்வை நினைத்துக் கொண்டு தானும் துன்புற்று, குடும்பத்தையும் துயரச் சூழலுக்கு ஆளாக்கும் பெண்ணை, உணர்ச்சி நிலையில், கமலம் படைப்பின் வழியாக 'இன்பநினைவு' நாவலில் காட்டுகிறார். மீண்டும் மீண்டும் பலமுறை காரணம் கேட்டும், அவள் தன் மனநிலையை வெளிப்படையாக்க் கணவனிடம் சொல்லாத போது, கணவன் அவளை விட்டுச் சென்று விடுகிறான் என்றும் அகிலன் காட்டுகிறார். ஆண் பெண் இருவருக்கும் சமஉரிமை உள்ள இடம் குடும்பம். இதை மறுத்து, ஆண் தன்னுடைய ஆதிக்கத்தை நிலைநாட்ட முற்படும்போது, குடும்பத்தின் அமைதி குலைகிறது. தன்னுடைய ஒழுக்கக் கேட்டை யெல்லாம் மறைத்துக்கொண்டு தன்னுடைய இன்ப நாட்டத்திற்காகத் தன் மனைவியை, அவள் விரும்பாத நிலையிலும் உறவுகொள்ள வற்புறுத்தும், ஆதிக்க உணர்வும் உடைமை மனமும் கொண்ட கணவன் மாணிக்கத்திடமிருந்து விட்டு விடுதலையாகி வெளிவருகிறாள் ஆனந்தி என்று 'சித்திரப்பாவை' நாவலில் காட்டுகிறார். இதேபோல, மிகுதியான பணம் கிடைக்கும் என்ற பேராசையால், தன் மனைவியை வன்முறையில், செல்வந்தனான தன்னுடைய நண்பனின் பாலுறவு நாட்டத்திற்குக் கொடுக்க முனைகிறான் கணவன்; அக்கொடிய கணவனிடமிருந்து விடுதலைபெற்று, குடும்பத்தையும் வீட்டையும் புறக்கணித்து வெளியேறுகிறாள் பெண் என்று 'கதையும் பதிலும்' என்னும் சிறுகதையில் அகிலன் காட்டுகிறார். அத்துடன் மட்டுமல்லாமல், 'சித்திரப்பாவை' நாவலில் விடுதலைபெற்ற ஆனந்தி, அண்ணாமலையை மணந்து கொள்ளுகிறாள்; 'கதையும் பதிலும்' சிறுகதையில், 'துணிவுடைய ஒரு ஆண்மகனின் நேர்மையான துணை கிடைத்தால் அந்தப் பெண்ணுக்கு நல்ல வாழ்க்கை மலரும்' என்று இறுதியில் ஆசிரியர் குறிப்பிடுகிறார். இவ்விரண்டு முடிவுகளும் பெண்ணின் நிலைப்பாட்டிலிருந்த அவர் முன்வைக்கும் தீர்வு. பெண்ணுடைய மனஉணர்விற்கேற்ப அவள் வாழ்க்கை அமையவேண்டும்; மாறாக, கற்பு என்ற பெயரில், ஆணுடைய அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டுப் பெண்ணுக்கு மட்டும் தண்டனை தருவதாக வாழ்க்கை இருக்கக்கூடாது என்கிறார் அவர். 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாய் வாழுவோம்' என்னும் பாரதியாரின் கொள்கை அடிப்படையில், அகிலனும் பெண்ணியச் சிந்தனையை வெளிப்படுத்தியுள்ளார்.

கற்பு

கற்புக் கோட்பாடு பெண்ணின் உடல் சம்பந்தப்பட்டது மட்டும்தானா; கற்பு பெண்ணுக்கு மட்டுமே உரியதா என்ற கேள்விகளை மையப்படுத்தி அகிலன் தம் கருத்துக்களைச் சில படைப்புக்களில், பெண்ணின் நிலையிலிருந்து வெளிப்படுத்தி யுள்ளார். இதில் அவர் பெண்ணியவாதியாக வெளிப்படுகிறார். கற்பு என்பது ஆண் பெண் இருவர்க்கும் உரியது; இருகட்சிக்கும் கற்புநிலையைப் பொதுவில் வைப்போம் என்பது அவர் முன்வைக்கும் சிந்தனையாகும். கற்பு வெறுமனே உடல் சம்பந்தப்பட்டது மட்டுமன்று; மனித மனத்தை, ஆன்மாவை நன்கு வைத்திருந்தால்தான், மனித சமூகம் மேன்மை அடையும் என்றும் அகிலன் கூறுகிறார். மனமும் ஆன்மாவும் பாழ்படுமாறு, பாலுணர்வு, வன்முறை, ஆபாசம் போன்றவற்றைத் தொடர்ந்து தரும் பத்திரிகைகள் செய்யும் பண்பாட்டுச் சீரழிவு மிகவும் கொடூரமானது என்று அகிலன் 'எரிமலை' என்னும் சிறுகதையிலும், 'எங்கே போகிறோம்' நாவலிலும் கூறுகிறார். "நான் உடம்பால் கெட்டவள்; உடம்பால் கெடுப்பவள். உடம்பு என்ற எந்திரத்தினால் நூறு பேரையோ இருநூறு பேரையோதான் கெடுக்கமுடியும்... நீங்களோ பணமென்னும் மாயமான் வேட்டைக்காகக் கொலை, கொள்ளை, சோரம் போதல் போன்றவற்றை இங்கே எழுதவேண்டும் என்கிறீர்கள்... அறிவு பணத்துக்கு அடிமை யாகி யந்திரத்தின் துணைகொண்டு, மனித ஆன்மாவைக் கெடுப்பதென்றால், கோடிக்கணக்கான ஆன்மாக்களைக் குறைந்த நேரத்தில் கெடுக்கமுடியும்" என்று (எரிமலை (எரிமலை), பக்.26, 25) 'எரிமலை' சிறுகதையில் வரும் கூற்று இதை வலியுறுத்தும்.

'எங்கே போகிறோம்' நாவலில், "மனிதனிடம் பதுங்கி யிருக்கும் கற்கால மனிதனுக்கு, தாயென்றும் தாரமென்றும் பார்க்காத அந்த நாலு கால் மிருகத்துக்கு என்னை இரையாகப் போடத்திட்டமிட்டு வந்திருக்கிறீர்கள்... உங்களுடைய எத்தனையோ லட்சம் வாசகர்களுக்கு என்னைத் தேவைப் பட்டபோதெல்லாம் அனுபவிக்க வேண்டுமென்று நீங்கள் இங்கே வந்திருக்கிறீர்கள்" (எங்கே போகிறோம் ப.305) என்று பத்திரிகைகள் செய்யும் மிகவும் மோசமான மனிதமன-மனித ஆன்மா-பாழடிக்கப்படும் கற்பிழப்பைக் காட்டுகிறார் அகிலன். மனத்தாலும் பிறரை நினைக்காமல் இருப்பதுதான், பிறர்

நெஞ்சு புகாமல் இருப்பதுதான் கற்பு என்றால், பத்திரிகைகளில் வரும் ஆபாசங்களைப் படிக்கும் லட்சக்கணக்கானவர்கள் நெறிபிறழ்ந்து கற்பிழந்தவர்களாக மாறுகிறார்களே என்னும் வினாவை இதில் அகிலன் எழுப்புகிறார். கற்பைப் பெண்ணுக்கு மட்டும் உரியது என்பதை மறுத்து, நம் காலத்திற்கு ஏற்றமுறையில் கற்புக்கோட்பாட்டிற்குப் புதுவிளக்கம் தருகிறார்.

தன்னுடைய விருப்பமின்றி, ஒருவனால் பாலுறவு வன்முறைக்கு ஆளாக்கப்பட்டாலும்கூட, அவனை விடுத்துத் தனக்கு விருப்பமான, தன்னை ஏற்றுக்கொள்ள முன்வரும் ஒருவனை ஒரு பெண் மணப்பது சரி என்று 'சித்திரப்பாவை' நாவலில் சாரதா கூற்றில் அகிலன் கூறுகிறார். "என்னையே இப்படி ஒருவன் கெடுக்க நினைத்தால், அப்படியே நான் அவனுடைய வெறிக்குப் பலியாகிவிட்டால்கூட, அவனை எட்டி உதைத்துவிட்டு, வேறொருவனைக் கல்யாணம் செய்துகொள்ளத் தயங்கமாட்டேன். 'காதலிக்க' பல பேடிகள் இங்கே உண்டு; கல்யாணம் செய்துகொண்டு உழைத்துப் போடத்தான் ஆண்கள் இங்கே இல்லை. குற்றவாளியிடம் குனிந்து கொடுப்பதுதான் மகாபாவம்... அந்தப் பேடிப்பயல் என்னைக் கடித்துக் குதறப் பார்த்தான் என்பதற்காக நான் அவனிடமே சரணாகதி அடைந்துவிடவேண்டுமா? வேறொருவனைக் கல்யாணம் செய்து கொள்வதில் என்ன தப்பு?" (சித்திரப்பாவை, ப.381) என்று வருமிடம் இதைக் காட்டும். கற்பு என்னும் கோட்பாடு, கால, சமூகத் தேவைக்கு ஏற்பப் புதுவிளக்கம் பெறவேண்டும் என்பதையும், ஆணுடைய பாலுறவு வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட பெண், அதை விபத்தாகக் கருதி, தன்னை அந்த மனநிலையிலிருந்து விடுவித்துக் கொண்டு, வேறு ஒருவனை-இருவரும் மனமொத்து-மணந்து வாழவேண்டும் எனவும் காட்டுகிறார். தனக்குக் கொடுமை இழைத்த ஆணைப் புறக்கணிக்கவும் அவனை விடுத்து, தனக்கு விருப்பமான ஒருவனிடம் உண்மையைக் கூறி, மணந்து வாழவேண்டும் எனவும் பெண்ணிய நிலைப்பாட்டில் கற்பிற்கு விளக்கம் கூறுகிறார். ஆண்கள் தங்களின் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காகவும், பெண்களை அடிமைப்படுத்தித் தம்முடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்து இருக்கவும் கற்புக்கோட்பாட்டை உடல் சம்பந்தப்பட்டதாக ஆக்கி, பெண்களுக்கு மட்டும் உரிய

தாகவும் வரையறுத்தனர். கற்புடைமை மிகவும் புனிதமானது எனவும் தீட்டுப்பட்டு, களங்கமாகிவிட்டால், அது மன்னிக்க முடியாதது எனவும், அவ்வாறு மாசுபடுத்தப்பட்ட பெண் தன்னை மாய்த்துக் கொள்வதே ஏற்ற வழி எனவும் ஆண்கள், சட்டமியற்றி, சமூகக் கட்டுப்பாடுகளை விதித்திருந்தனர். பெண்ணின் நிலைப்பாட்டிலிருந்து, இதை மறுத்து, மேற்கண்ட முறையில் அகிலன் மாற்று விளக்கத்தை நம் காலச் சமூக அமைப்பிற்கு ஏற்பத் தருகிறார்.

பழைய சமூக அமைப்பில் எழுதப்பட்ட வரலாற்று நாவலான 'கயல்விழி'யில் இதற்கு மாறான நிலையை அகிலன் முன்வைத்துள்ளார். போரில் பகையரசனால் வன்முறைக்கு ஆளாக்கப்பட்ட கயல்விழி, தன்னுடல் மாசுபட்டுவிட்டது என்றும் தான் களங்கப்பட்டவள் என்றும் கூறி, தன்னுடைய காதலன் சுந்தரபாண்டியனை மணந்து கொள்ள மறுத்து விடுகிறாள். கற்பைப் பழைய விளக்கத்தின்படியே ஆண்களின் நிலைப்பாட்டில் கூறப்பட்ட முறையிலே, காலங்காலமாகக் கற்பிக்கப்பட்டு அவள் வளர்ந்தவள். எனவே, அவளுடைய காலச் சமூகநிலைக்கு ஏற்ப அந்த நாவலில் கூறப்பட்டுள்ளது. காலவழுவின்றி, இக்கோட்பாடு வெளிப்பட்டுள்ளது. 'சித்திரப்பாவை' நாவலில், ஆனந்தி முதலில் பழமையான போக்கில் கற்பு பற்றிய எண்ணத்தில், களங்கப்பட்டு விட்டோம் என்று நினைத்து இருக்கிறாள். அவளுடைய தோழி சாரதாவின் கூற்றால் அவள் சிந்தனை மாற்றம் பெறுகிறது. அப்படிப்பட்ட அறிவுத்துணையாக அமையும், தோழி ஒருத்தி கயல்விழிக்குக் கிடைக்கவில்லை.

பொருந்தாமணம்

மனம் ஒன்றிய திருமணம் பற்றிப் பல படைப்புக்களில் கூறும் அகிலன், மனம் ஒன்றாத பொருந்தாமணத்தால் ஏற்படும் விளைவுகளையும் அதனால் பெண்களுக்கு ஏற்படும் துயரங்களையும் நாவல், சிறுகதைகளில் படைத்துள்ளார். பொருந்தாமணத்தினால், துன்பப்பட்டு, கணவனிடமிருந்து விடுதலை பெற்று வந்து, வேறு ஒரு வாழ்வை அமைத்துக் கொள்ளும் பெண்கள் சிலரை அவர் படைத்துள்ளார். சிலர், முற்றிலுமாகத் துடைத்துவிட்டுப் புதியவாழ்க்கைக்குத் தங்களை மாற்றிக் கொள்கின்றனர். 'மகிழம்பூ', 'இதயச் சிறையில்', 'சினிமா வண்டி' ஆகிய சிறுகதைகளிலும்

'துணைவி', 'இன்பநினைவு', 'சித்திரப்பாவை' ஆகிய நாவல்களிலும் இப்போக்கைக் காணலாம். தமிழ்ச் சமூக அமைப்பில், குடும்ப வாழ்க்கை பெண்ணிற்கு இன்றியமை யாததாகும். குடும்பநிறுவனம் அடிப்படை அலகாக இருக்கும் இந்திய வாழ்க்கை முறையில், காதலனையும் காதலையும் மறந்துவிட்டு, வேறு ஒருவனை மணந்து வாழவேண்டிய நிலை ஏற்பட்டபோது, பொருந்தாத மணமாக-மனம் ஒன்றாத வாழ்வாக இருந்தாலும், அதை ஏற்று வாழ்பவர்களாகப் பெண்களை இப்படைப்புக்களில் அகிலன் காட்டியுள்ளார். இதனை 'எல்லாம் அவள் விருப்பப்படியே விட்டு விடுவான்'. இத்தகைய வீட்டுக்காரன் ஒருவன் அகப்பட்டதால் அவளுக்கே மகிழ்ச்சி தாங்கமுடியவில்லை. அதே காரணத்தால் காதலன் முத்துச்சாமியின் நினைவைக்கூட வெகுவிரைவில் அகற்றிவிட எண்ணினாள் (சக்திவேல் ('சினிமா வண்டி'), ப.74) என வரும் ஆசிரியர் கூற்றால் அறியலாம். காதலித்தவனை விட்டு, வேறு ஒருவனை மணந்து வாழவேண்டிய நிலை ஏற்பட்டபின், தன்னுடைய பழைய காதல் வாழ்வை நினைந்துகொண்டு, அதைக் கணவனிடமும் கூறாமல் அல்லல்பட்டு வாழ்வில் துன்பம் அனுபவிக்கும் பெண் கமலத்தை 'இன்ப நினைவு' நாவலில் அகிலன் காட்டுகிறார். அதனால் அவள் கணவன் அவளைப் புறக்கணித்துப் போகிறான் என்று காட்டுகிறார். அப்பெண் தன் காதல் உணர்வை மறக்கமுடியாமலும், தன் கணவனிடம் கூறமுடியாமலும் திண்டாடுவதை 'இன்ப நினைவு' நாவலில் காட்டுகிறார். எவ்விதமான செயற்கைப் பூச்சுமின்றி, பெண்ணுடைய மனவுணர்வு இயல்பாகக் காட்டப்படுகிறது. பெண்ணுக்கென்று தனித்த உணர்வோ, தனித்தன்மை வாய்ந்த வாழ்க்கை அனுபவமோ இருந்தல் கூடா; எதுவாயினும், ஒளிவுமறைவின்றி, தன் கணவனிடம் கூறிவிடவேண்டும் என்னும் ஆணின் பார்வையில் அவள் கணவன் சுப்பையாவையும், தனித்தன்மை மிக்க பெண்ணாகக் கமலத்தையும், முரண்பட்ட நிலையில் ஆசிரியர் படைத்துள்ளார். இந்த நாவல் எழுதப்பட்ட காலத்தில், (1944) தன்னுடைய தனித்தன்மை குன்றாமல் ஒரு பெண், குடும்பவாழ்வில் படும் துயரைப் பெண்ணின் நிலைப்பாட்டில் படைத்திருப்பது பெரிதும் பாராட்டிற்குரியது.

'துணைவி' நாவலில், பொருந்தாமணத்திற்கு ஆட்பட்ட கலியாணி, தன் கணவனுடைய தீய பழக்கங்கள் காரணமாக

அவனிடமிருந்து தன்னை விடுத்துக்கொள்ள நினைக்கின்றாள்; தன் நினைப்பைத் தன்னுடைய காதலன் பாலச்சந்திரனுக்கு எழுதுகிறாள். இதுவும், அன்றைய காலகட்டத்தில், மிகவும் துணிச்சலான செயலாகும். இதனை, 'வாழ்க்கையை அதன் போக்குப்படியே ஏற்கவேண்டும் என்ற விருப்பத்தால், கல்லூரியில் அரும்பிய தங்கள் நினைவைச் சிரமத்துடன் அழித்துவிட்டு, வந்தபடியே அதை ஏற்றுக்கொண்டேன், வாழ்க்கை இங்கே புதை குழியாக இருக்கிறது... வாழ்க்கை வெள்ளம் என்னைத் துரும்பாக மதித்து அலங்கோலப் படுத்திவிட்டது. அதை எதிர்த்து நீந்தத் துணிந்திருக்கிறேன். அந்தத் துணிவு உங்களுக்கு இருக்கிறதா?' (துணைவி, ப.103) என்று வரும் கலியாணியின் கடிதம் காட்டும். பெண்ணுடைய மனஉணர்வைக் குடும்ப அமைப்பு, பழமை, சமூகச் சட்டம் என்ற பெயரால் அலங்கோலப்படுத்தும் ஆணின் அதிகாரப்போக்கு இதற்குக் காரணம் என்பதையும், அதையும் மீறி, தானாகச் சிந்தித்து, முடிவெடுப்பவளாக இருக்கும் பெண்ணையும் அகிலன் காட்டியுள்ளார். ஆனால் பொறுமை காத்து, கணவன் திருந்துவான் என்ற நம்பிக்கையில், அந்தப் புதை குழியிலே இருக்குமாறு, காதலன் பாலச்சந்திரன் அவளுக்குக் கடிதம் எழுதுவதாகவும், அவளும் அப்படியே செயற்பட்டாள் எனவும் நாவலை அகிலன் முடித்துள்ளார். பழைமைவாதப் போக்கிலே, ஆணை, மையமிட்ட குடும்ப நிறுவனத்தின் கட்டுக்கோப்பு குலைந்துவிடாமல் பாதுகாத்திடும் நிலைப்பாட்டை இங்குக் காண்கிறோம். கலியாணியின் சிந்தனையில் ஒரு நிலை வரை பெண்ணிய நோக்குடன் படைத்திருந்தாலும் நாவலின் முடிவு அதைச் சிதைத்துவிடுகிறது. மரபைப் போற்றும் பழமைவாதியாக ஆணின் பார்வையிலே கதை படைப்பவராக ஆசிரியர் வெளிப்படுகிறார். அன்றைய சமூக அமைப்பும், படிக்கும் வாசகர் கூட்டமும் மரபுமீறலான பெண்ணியச் சிந்தனையை ஏற்கமாட்டார்கள் என்ற தயக்கம் இதற்குக் காரண மாயிருக்கலாம். 'சித்திரப்பாவை' நாவலில், ஆனந்தி தன் கணவன் மாணிக்கத்திடமிருந்து விடுதலைபெற்று, தன் காதலன் அண்ணாமலையுடன் தன் வாழ்வைப் பிணைத்துக் கொள்ளுகிறாள்; அந்த முடிவை, ஆனந்தியே எடுக்கிறாள் என்று ஆசிரியர் காட்டுவது காலமாற்றத்திற்கேற்ற, சமூகத்தளைகளை உடைத்துக்கொண்டு, பெண் வெளியே

வருவதையும், தானே முடிவெடுப்பதையும் எடுத்துரைக்கும் பெண்ணியச் சிந்தனைகளாகும். 'இன்ப நினைவு', 'பெண்', 'துணைவி', 'சிநேகிதி', ' பாவைவிளக்கு', 'பொன்மலர்,' 'கயல்விழி', 'சித்திரப்பாவை' என்ற வரிசையில் ஆசிரியரின் ஆளுமை வளர்ச்சிக்கும், கால மாற்றத்திற்கும் சமூகத் தேவைக்கும் ஏற்பப் பெண்ணியச் சிந்தனை வெளிப்பட்டுள்ளதைக் காணலாம்.

முதிர்கன்னியர் நிலை

கல்வி கற்று அலுவலகங்களில் பணிபுரியும் பெண்கள், முதிர்கன்னிகளாகியும் திருமணம் ஆகாமல் உள்ள அவல நிலையைச் சிறுகதைகளில் அகிலன் காட்டுகிறார். திருமணம் ஆகாமல் தள்ளிக்கொண்டேபோக, அலுவலக வாழ்வில் கிடைக்கும் சிறு சிறு கேளிக்கை விளையாட்டுக்கள் மூலம், ஆணின் இன்பநுகர்வுப் பொருளாகத் தான் இருப்பதைத் தெரிந்துகொண்டும், வேறுவழியின்றி அதில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளுகிறாள் பெண் என்று 'கொஞ்சம் லஞ்சம்', 'விபரீத விளையாட்டு' ஆகிய சிறுகதைகளில் அகிலன் படைத்துள்ளார். வயதாகி, மணமாகாமல் இருக்கும் சூழலில், பெண்ணின் மனவுணர்வு வெளிப்பாட்டை மிகநுட்பமாக அகிலன் இக்கதைகளில் படைத்துள்ளார். 'காதல் செய்வதற்கு ஆண்கள் ஆயத்தமாக உள்ளார்கள்; திருமணஞ்செய்துகொண்டு, பொறுப்புடன குடும்பம் நடத்த ஆண்கள் முன்வருவதில்லை என்று அகிலன் பல இடங்களில் மீண்டும் மீண்டும் கூறுகிறார். கடமையும் பொறுப்புணர்வு மிக்க ஆண்கள் குறைவாகவும், பெண்களை இன்பநுகர்வுக்கு மட்டுமே பயன்படுத்தும் ஆண்கள் மிகுதியாகவும் உள்ளனர் என்று சமூக அமைப்பை அவர் இதன்வழி உணர்த்துகிறார். இதுவும், பெண்ணின் நிலைப்பாட்டிலிருந்து பார்க்கும் சிந்தனையாகும். அலுவலகத்தில் பணியாற்ற வந்துள்ள பெண்ணைச் சக தோழியாக, நட்புடன் பார்க்காமல், பாலின வேறுபாடு காரணமாக அவளைச் சிறுமைப்படுத்தும் ஆண்களின் வம்பு பேசும் மனப்பான்மையைச் சில கதைகளில் அகிலன் படைத்துள்ளார். இதை "ஆயிரம் கண்களும் அந்த அழகியைத் தான் மொய்த்துக்கொண்டிருந்தன" என்றான் மற்றொருவன். 'பெண்ணுக்குப் பெண் ஆசைப்படுகிற அழகு அவளுக்கு... எந்த ராவணனும் இந்த சீதையிடம் வாலாட்ட

முடியாது. தன் விழியாலேயே வாலை ஒட்ட அறுத்துவிடுவாள் (நெல்லூர் அரிசி ('அறைக்கதவுகள்'), ப.128) என்று வரும் பகுதி இதனைக் காட்டும். படித்துப் பட்டம் பெற்றுத் தன் பொருளாதாரத் தேவைக்காகப் பணிபுரிய வரும் பெண்ணைத் தன் பாலுறவு நாட்டத்திற்குரிய இன்ப நுகர்வுப் பொருளாகவே பார்க்கும் ஆண் மனநிலையே இதற்குக் காரணம் என்று அகிலன் காட்டுகிறார். நீண்ட காலமாக அடிமைப்பட்டிருந்த பெண்கள், கல்வி கற்று, வேலை வாய்ப்புக்களைப் பெற்று ஆணுக்கு இணையாக உரிமை பெற்று வாழவேண்டும் என அகிலன் வலியுறுத்துகிறார். பெண், எந்தச் சூழலிலும் - அலுவலகமாயினும் வீடாயினும்-தன் கடமைகளைச் சரிவரச் செய்யக்கூடியவள் என்று அகிலன் காட்டுகிறார். 'திருட்டுத் தெய்வம்' என்னும் சிறுகதையில் வரும் சரோஜா என்ற பெண் இதற்கு மிகச்சிறந்த எடுத்துக்காட்டு. பெண்கள் கல்வி கற்று அலுவலகங்களில் பணிபுரிந்தாலும், அவர்களின் சம்பளத்தை எல்லாம் தான் பெற்றுக்கொண்டு, அவர்களுக்குத் திருமண வாழ்வை அமைத்துத் தராமல், தன் சுயநலத்திற்காக அவர்கள் வாழ்வை நாசமாக்கும் ஆண்களை-மூத்த சகோதரனை-அண்ணனை-அகிலன் 'திருட்டுத் தெய்வம்' என்று சிறு கதையில் காட்டுகிறார். படித்துப் பட்டம் பெற்று, வேலையும் பொருளாதாரச் சுதந்திரமும் பெற்றுள்ள பெண், இத்தகைய தன்னலவாதியான தீயவனை எதிர்த்துப் போராடவும் அவனைப் புறக்கணித்துவிட்டு, தனக்குரிய குடும்ப வாழ்வைக் காதல் திருமணம் மூலம் தானே உருவாக்கிக்கொள்ள வேண்டும் எனவும் அச்சிறுகதைத் தலைவி சரோஜா படைப்பின்வழி காட்டுகிறார். "அதிலேதான் உங்க ராஜதந்திரம் இருக்கிறது... என் வேலை போய்விட்டால் பிறகு என் சம்பளம் உங்களுக்கு வராது பாருங்கள். உங்களோட வேஷத்தின் பாசத்தை நான் தெரிந்துகொள்வேன் பாருங்கள்" (சத்திய ஆவேசம் (திருட்டுத் தெய்வம்), பக்.132-133) என்று 'திருட்டுத் தெய்வம்' சிறுகதையில் வரும் கூற்று இதை வலியுறுத்தும்.

பெண்கல்வி

பெண்கள் கல்வி கற்கவேண்டும் என்பதை அவர் பல கதைகளில் வலியுறுத்தியுள்ளார். 'வழி பிறந்தது', 'புயலுக்குப் பின்' போன்ற சிறுகதைகளில் பெண்கல்வியை அவர் வலியுறுத்தியுள்ளார். 'பாவைவிளக்கு' உமாவின் படைப்பிலும்

'சித்திரப்பாவை' சாரதா படைப்பிலும் பெண் கல்வியின் இன்றியமையாமையை ஆசிரியர் வலியுறுத்தியுள்ளார். தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள உலகையும் உணர்ந்து கொள்ளவும், தீமைகளை இனங்கண்டு அவற்றை எதிர்த்துப் போராடவும் தங்களின் தனித்தன்மையை அறிந்து கொள்ளவும், சிக்கலை எதிர்கொண்டு தெளிவாக முடிவெடுக்கவும் கல்வி பெண்களுக்கு உதவும் என்பதைத் தம் படைப்புக்களில் படைத்துள்ளார். 'எரிமலை' சிறுகதையில் வரும் புவனா, 'பொன்மலர்' நாவலில் இடம் பெறும் சங்கரி, 'சித்திரப்பாவை' நாவலில் வரும் சாரதா போன்ற பெண்மாந்தர்கள் இதற்குச் சான்றுகளாவர். கற்ற கல்வியின் பயனைத் தாம் வாழும் சமூக மேன்மைக்கும் தன்னைச் சார்ந்தவர் நன்மைக்கும் பயன்படுத்துபவர்களாக இவர்கள் படைக்கப்பட்டுள்ளனர்.

விதவை மறுமணம்

விதவை மறுமணத்தை ஆதரித்துச் சில சிறுகதைகளையும் நாவல்களையும் அகிலன் படைத்துள்ளார். விதவைப் பெண்களின் மனவிருப்பத்திற்கு ஏற்ப மறுமணம் நிகழ்வதும், மறுமணம் செய்யாமல் இருப்பதும் அமையவேண்டும். விதவைப் பெண்களுக்கு அக்காலத்தில், இந்து சமூக அமைப்பில் இழைக்கப்பட்ட கொடுமைகளும் அவர்களையும் அவர்களின் மனஉணர்வுகளையும் மதிக்காமல், ஆணாதிக்கச் சமூகம் அப் பெண்களுக்கு உருவாக்கியிருந்த கட்டுப்பாடு களையும் எதிர்த்து இப்படைப்புக்களில் பெண்களின் நிலைப்பாட்டை அகிலன் படைத்துள்ளார். இப்பெண்கள், சமூகக் கட்டுப்பாடுகளைப் பற்றிக் கவலைப்படாமல், தாங்களே அவற்றை மீறும் மனநிலையில் உள்ளவர்களாக இருப்பதை அகிலன் படைத்துள்ளார். "முடிவுக்கு வந்த பின்னர்தான் தங்களைச் சந்தித்தேன். அந்த இன்பநினைவுடன் இறக்கச்செய்யும் தங்களுக்கு நன்றி" (ஆண்-பெண் (கடைசி ஆசை), ப.102) என்று வரும் இடம் இதைக் காட்டும். பெண்களை அடிமைப்படுத்தி ஒடுக்குவதற்காக, ஆண்கள் ஏற்படுத்திவைத்துள்ள சமூகக்கட்டுப்பாடுகளை எல்லாம் இக்கதைத் தலைவி ஜயா தெரிந்தே மீறுவதாக இக்கதை படைக்கப்பட்டு உள்ளது. 'நெருப்பு' சிறுகதையில் இளமையிலே விதவையான ரஞ்சிதம், தணிகாசலத்தை மறுமணம் செய்துகொண்டு வாழ்வதைக் காட்டியுள்ளார்.

விதவைப் பெண்ணின் மனஉணர்வை அவருடைய நிலைப்பாட்டில் நின்று ஆசிரியர் படைத்துள்ளார்.

விலைமகளிர் நிலை

விலைமகளிரான பெண்களின் மனஉணர்வுகளையும் வாழ்க்கைச் சிக்கல்களையும் மையமிட்டுச் சிறுகதைகளையும் நாவலையும் அகிலன் படைத்து உள்ளார். ஆண்களின் இன்பநுகர்வு நாட்டத்தால், பெண்கள் இவ்வாறு ஆவதை அகிலன் காட்டுகிறார். தனித்து வாழும்நிலை ஏற்பட்ட பெண், ஆண்களால் விலை மகளாக ஆக்கப்பட்டதை 'விலைப்பெண்' என்ற சிறுகதையில் அகிலன் காட்டுகிறார். "பிழைக்க வழி தெரியாத ராஜியின் வீட்டிற்கு எப்படியோ ஓர் சீர்திருத்தவாதியின் யோசனை கிடைத்தது. சீர்திருத்தவாதி முதலில் ராஜியிடம் தன் சீர்திருத்தத்தை ஆரம்பித்தார். பிறகு அவளை இந்த நிலைக்கு ஆளாக்கிவிட்டு எங்கோ மறைந்தார்" (அமராவதிக் கரையில் ('விலைப்பெண்').ப.57) என்று வரும் பகுதி இதைக் காட்டும். சில சிறுகதைகளிலும் 'எங்கே போகிறோம்' நாவலிலும் பெண்கள் விலைமகள் ஆனதற்கு ஆண்களே காரணம் என்று அகிலன் படைத்துள்ளார். பிறப்பால் கணிகையர் குலத்தில் பிறந்தவர்களையும், இப்படிப்பட்ட நிலைக்கு ஆளானவர்களையும் இப்படைப்புக் களில் காணலாம். இப்பெண்களில் சிலர், மற்ற பெண்களைப் போல, முறையாக ஒருவனை மணந்து குடும்பவாழ்க்கை வாழ விரும்புவதையும் அகிலன் படைத்துள்ளார். பெண்களின் நிலைப்பாட்டில் நின்று இவர்களின் பிரச்சினைகளையும் மனஉணர்வுகளையும் ஆசிரியர் படைத்துள்ளார்.

பெண்களைப் பாலுறவுப் பிம்பங்களாகவும் ஆண்களின் போகப்பொருளாகவும் படைத்து, பாலின வேறுபாட்டின் காரணமாக இழிவுபடுத்தும் வெகுஜனப் பத்திரிகை கலாசார மரபிலிருந்து மாறுபட்டு, பெண்ணை ஆணுக்கு இணையாக அகிலன் படைத்து உள்ளார். கல்விகற்று, வேலை வாய்ப்பும் பொருளாதாரச் சுதந்திரமும் உடையவர்களாக, ஆணுக்கு இளைப்பில்லாதவளாகப் பெண்ணை அவர் படைத்துள்ளார். சிந்தனைத் திறனும் தனித்தன்மையும் முடிவெடுத்துச் செயற்படுத்தும் ஆற்றல் மிக்கவர்களாக இப்பெண்கள் உள்ளனர். குடும்பம், சமூகம் ஆகிய தளங்களில், ஆண்களால், அவர்களுடைய முதன்மையையும் ஆதிக்கத்தையும் நிலை

நாட்ட ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டதிட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் எதிர்த்துப் போராடி, புறக்கணித்து, தங்களுடைய நலன், மனிதகுல மேன்மை கருதிச் செயற்படுபவர்களாகப் பெண்களை அகிலன் படைத்து உள்ளார். பெண்ணிய நிலைப்பாட்டில் நின்று இவர்களை அவர் படைத்துள்ளார். பெண்களின் மனஉணர்வுகளை நுட்பமாக வெளியிடும் பாங்கும், பெண்களின் புறத்தோற்ற வருணனையைத் தம் படைப்புக்களில் பயன்படுத்தாத பாங்கும் பெண்கள் பக்கம் நின்று, அவர்களின் அனுபவமாகக் காட்டும் நிலைப்பாடும் அவரைப் பெண்ணியலாளராகக் காட்டு கின்றன. படைத்த காலச் சூழலுக்கு ஏற்ப, தொடக்க காலப் படைப்புக்கள் சிலவற்றிலும் வரலாற்று நாவல்களிலும் பெண் பற்றி கருத்துக்களில் அவர் மரபான பழமைப்போக்கில் காணப்படுகிறார். ஆனால், காலமாற்றத்திற்கும் ஆளுமை வளர்ச்சிக்கும் ஏற்ப, அவர் பெண்ணியலாளராக வெளிப் படுவதைக் காணமுடிகிறது. தொடக்ககாலத்தில் இருந்து, தொடர்ந்து அவர் பெண்களுக்காக அவர்களுக்கு எதிரான கொடுமைகளுக்காகக் குரல் கொடுத்து வந்துள்ளார் என இதனால் அறியலாம். சமூகமாற்றமும் மனித மேன்மையையும் விரும்பும் படைப்பாளரிடம் அதைத்தானே எதிர்பார்க்க முடியும். தீமையை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற கலைக்கொள்கையை உடைய காந்திய நெறியாளரிடம் பாரதி, திரு.வி.க. ஆகியோரைத் தம் இருவிழிகளாகக் கொண்ட தமிழ்ப் படைப்பாளரிடம் 'ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வோம்' என்ற பெண்ணியச் சிந்தனை மேலோங்கி இருப்பதுதானே இயல்பு.

இயல் – 7

வாழ்க்கை நோக்கு

மக்களின் வாழ்க்கை. மேம்பாட்டிற்காகக் கலையைப் படைக்கும் படைப்பாளர் தம்முடைய கலைப்படைப்பின் வழியே தம்முடைய வாழ்க்கை நோக்கையும் வெளிப்படுத்து கின்றார். வாழ்க்கையில் தாம் அன்றாடம் காணும் சிக்கல்களைக் கொண்டு புனைகதை படைப்போர், சிக்கல்கள் நீங்கி நல்லநிலை எய்தும் வழிகளைக் கூறும்போது, வாழ்க்கை நோக்கை வெளிப்படுத்துகின்றனர். வாழ்வில் துன்பங்கள் மிகுந்து காணப்பட்டாலும், துன்பங்கள் நீங்கி நன்னிலை எய்திட வழி கூறுவதன் மூலம், வாழ்க்கை பற்றிய நம்பிக்கை ஏற்படச் செய்கிறார், படைப்பாளர். துன்பங்களுக்கும் சிக்கல்களுக்கும் காரணமான தீமைகளைக் காட்டி, தீமைகளை எதிர்த்துப் போராடவேண்டும் என்று அகிலன் தம்முடைய படைப்புக்களில் காட்டுகிறார். எவ்வளவு சிக்கல்கள் இருந்தபோதிலும் வாழ்க்கை பற்றி நம்பிக்கைக் குரல் கொடுப்பதாகவே அகிலன் தம்முடைய படைப்புக்களைப் படைத்துள்ளார். வாழ்க்கையை மேலும் மேலும் சிறப்பானதாக ஆக்கவேண்டும் எனவும், அதற்கு நாம் ஒவ்வொருவரும் நம்மால் இயன்றதைச் செய்யவேண்டும் எனவும் அகிலன் கூறுகிறார். “வாழ்க்கை ஓர் அற்புதமான மணமலர். அதைக் கசக்காது கலைக்கண் கொண்டு காணுங்கள்” (நிலவினிலே,(துன்பத்தின் மத்தியில்). ப72) என்று வரும் பகுதி இதைக் காட்டும். இதைப் போலவே ‘சித்திரப்பாவை’ நாவலில், “அழகாக வாழக் கற்றுக்கொள். முடிந்தால் வாழ்க்கையை அழகுபடுத்து. முடியாவிட்டால் அசிங்கப்படுத்தாமலாவது இரு”. (சித்திரப்பாவை, ப75) என்று கூறுவது, வாழ்க்கையை அழகுபடுத்தி, மணமுள்ள மலராக்கவேண்டும் என்னும் கருத்தை அகிலன் வெளிப்படுத்து வதைக் காட்டும். அன்பை அடிப்படையாகக்கொண்டு தானும் வாழ்ந்து, பிறருக்கும் உதவவேண்டும் என்று அவர் காட்டுகிறார். பிறருக்காக உழைத்து வாழ்வதில்தான் இன்பம்

உள்ளது என்றும் அவர் காட்டுகிறார். "துன்பமா? எனக்கா துன்பம், இல்லை இல்லை; இந்தத் துன்பமெல்லாம் மற்றவரின் இன்பத்திற்காக என எண்ணும்போது எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி தெரியுமா?" (சக்திவேல் (நான்), ப.160) என்று கதை மாந்தர் ஒருவரின் மூலம் கூறப்படுவது இதைக்காட்டும். 'வெற்றித்திருநகர்' நாவலில் விசுவநாதன் படைப்பில் இதைக் காட்டுகிறார் 'எங்கே போகிறோம்' நாவலில் 'ஊருக்கு உழைப்பது யோகம்' என்று பாரதியார் கூறியபடி மக்களுக்காக உழைப்பதில் மகிழ்ச்சி காண்பவனாகச் சிதம்பரம் படைக்கப் பட்டுள்ளான். 'அவன் பெற்றிருந்த மிகப்பெருஞ்செல்வம் மனிதக்கூட்டம் ஒன்றுதான்' (எங்கே போகிறோம், ப.329) என்று வருமிடம் இதைக் காட்டும். கொள்கைப் பிடிப்புடன் மக்கள் சமுதாயம் முன்னேறவேண்டுமென்ற நோக்குடன் பத்திரிகைப் பணியைச் சிதம்பரம் ஆற்றுவதாக இந்த நாவல் காட்டுகிறது.

ஒவ்வொரு மனிதனும் தனக்காக வாழ்வதுடன், மற்ற மனிதர்களுக்காகவும் வாழவேண்டும் என்று அகிலன் காட்டுகிறார். 'பிறருக்குக் கெடுதல் ஏதும் செய்யாமல், கூடிய வரையில் நன்மையே செய்து' (குழந்தை சிரித்தது (செல்வரங்கன் ஆவி), ப.25) வாழவேண்டும் என்று அவர் காட்டுகின்றார். உடன்வாழும் சகமனிதர்களுக்குத் துன்பம் வந்தால் ஓடிச்சென்று உதவும் பண்புள்ள, அடிமட்டத்து மக்களைச் 'சக்திவேல்', 'இன்பத்தீ', 'வழிப்போக்கன்', 'கொஞ்சம் லஞ்சம்', 'புகழும் விளம்பரமும்' ஆகிய கதைகளில் படைத்துள்ளார். இதற்கு மாறாக, நகரவாழ்க்கையில், பரபரப்பும், பணங்குவிக்கும் நோக்கமும் மனிதர்களை எந்திரங்களாக மாற்றியுள்ளன; அன்பும் மனிதநேயமும் பிறர்துன்பம் கண்டு துடிக்கும் பரிவும் அற்றுப்போயின, என்பதை அகிலன் காட்டியுள்ளார். 'தருமமிகு சென்னை' என்று வள்ளலார் பாடிய பெருநகரம் இப்போது எந்திரமயமான நகரமாக, மனிதநேயமற்ற மனிதர்களைக் கொண்ட நகரமாக ஆகிவிட்டது என்பதை ஓவியன் அண்ணாமலை வாயிலாகச் 'சித்திரப்பாவை' நாவலில் காட்டுகிறார். "நம்மிடையே வளர்ந்துவரும் பொருளாசைக்கு அடையாளமாக அந்த நாலடுக்கு மாடிவீடுகள். குறைந்துவரும் தர்ம உணர்ச்சியின் முன்பாக இந்தக் கோபுரம்..." (சித்திரப்பாவை; ப.40) என்று வரும் வரிகள் இதைக் காட்டும்.

மழைகாரணமாக வெள்ளம் வந்து, குடிசையிழந்த ஏழை மக்களுக்கு உணவு வழங்குவதைப் புகைப்படம் எடுத்து, நாளிதழ்களில் போட்டுத் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளும் நகரத்து மனிதர்களின் போக்கை 'வெள்ளம் வந்தது' சிறுகதையில் அகிலன் காட்டுகிறார். பிறருக்கு உதவி, ஒருவருக்கு ஒருவர் அன்பு செலுத்திக் கூட்டாக இருந்து வாழவேண்டும் என்று அகிலன் காட்டுகிறார். ஒற்றுமை உணர்ச்சியும் மனிதநேயமும் கூட்டு வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்று அவர் காட்டுகிறார். 'கூட்டுக் குடும்பம்', 'சகோதரர் அன்றோ?' போன்ற சிறுகதைகள் நாட்டு ஒற்றுமையை வலியுறுத்த எழுதப் பட்டவை என்றாலும் அடிப்படையில் சமூக வாழ்க்கைக்கு உரிய கூட்டுறவை அவை சுட்டுகின்றன. 'கூட்டுக் குடும்பமாக உருவாகிக்கொண்டு வரும் அந்த ஊர் தன் பழைய தவறுகளை உணர்ந்து ஒற்றுமையோடு வாழப்போகிறதா? அல்லது மறுபடியும் சிதறுண்டு சரியப்போகிறதா என்ற கவலை அவர் கண்களில் நிழலாடியது' (சத்திய ஆவேசம் (கூட்டுக் குடும்பம்), ப.61) என்று வரும் கூற்று, நாட்டு ஒற்றுமையை, கூட்டுக்குடும்ப வாழ்க்கை முறை மூலம் காட்டும். இதைப் போலவே, 'சகோதரர் அன்றோ?' என்னும் சிறுகதையில், "ஆயிரம் வேற்றுமைகளையுடைய நம் தேசத்தில் அடிப்படையான ஒரு பண்பாடு இழையோடுகிறது... அவனும் நானும் நாமும் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள்... நெடுங்கால உறவு இது" (சகோதரர் அன்றோ?, ப.21) என்று வரும் கூற்று வலியுறுத்தும். மனிதர்கள் ஒருவருக்கொருவர் அன்புசெலுத்தி, கூடி வாழ்தல்வேண்டும் என்று அகிலன் காட்டுகிறார். வாழ்க்கையைப் பல்வேறு நிலைகளில் சிக்கல்களுடன் காட்டியபோதிலும் நமக்கென்று உரிய அடிப்படைப் பண்புகள் மாறாத, பண்பாட்டுச் சிறப்பு மிக்க வாழ்க்கை நோக்கினை அகிலன் படைத்துள்ளார்.

மனிதன் தவறுகள் செய்தால், அவைகளுக்காக அவனைத் தண்டிக்கக் கூடாது; தண்டிப்பதால் பயன்இல்லை; தவறு செய்வதற்குரிய காரணங்களையும் சூழலையும் அறிந்து, தவறுகளிலிருந்து மனிதன் திருந்தி வாழ அவனுக்கு வாய்ப்புத் தரவேண்டும். மனிதனிடம் தீயகுணம் இருப்பின், அதற்காக அவனை வெறுக்கவோ, தண்டிக்க முயலவோகூடாது. மாறாக, அவனிடம் அத்தீமை-தீயகுணம்-உருவாவதற்குக் காரணமாக அமைந்த அடிப்படைக் காரணத்தை அறிந்து, அதைப் போக்க

முயலவேண்டும். 'சுதந்திரப் பறவை' என்னும் சிறுகதையில், "மனிதனைச் சிறையில் இட்டால் அவனைத் திருத்தி விடலாமென்று நினைக்கிறார்கள்; அது வெறும் பொய்க் கனவு. எனக்கு மரணதண்டனை விதித்திருந்தால் நான் அதை மகிழ்ச்சியோடு ஏற்றிருப்பேன். என்னை இங்கு இவர்கள் சாகவும் விடவில்லை; பிழைக்கவும் விடவில்லை" ('சக்திவேல்' (சுதந்திரப் பறவை), ப.180) என்று கூறும் கருத்தால் அறியலாம். 'பெண்' நாவலில், நாட்டு விடுதலைப் போருக்காக, போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறைசெல்லும் சந்தானத்தின் எண்ண ஓட்டத்தில், சிறைத்தண்டனை மூலம் மனிதனைத் தண்டிப்பதை அகிலன் எதிர்த்துக் குரல் கொடுக்கிறார். 'மானம் உள்ள எந்த மனிதனுக்கும் கட்டற்ற வாழ்க்கையில் பற்று இருப்பது இயற்கை அதற்காக அவன் கிளர்ச்சி செய்தே தீருவான். அந்தக் கிளர்ச்சியை அடக்க, அவனுள்ளே எழும் மானஉணர்ச்சியைத் தலைகாட்டாமல் அழுத்த, சிறைச்சாலை என்னும் செப்பிடுவித்தையைக் கையாளுகிறார்கள். அங்கே அவனுடைய சாதாரணத் தேவைகளும் மறுக்கப்படுகின்றன... அடக்குமுறையைக் கையாளுபவர்களின் இந்த வெறுக்கத்தக்க தந்திரத்தால் பயனில்லை..." ('பெண். பக்90-91) என்று வரும் பகுதி இதைக் காட்டும். சிறைத் தண்டனை வெறுக்கத்தக்கது என்பதையும், அடக்கு முறையாலும் தண்டிப்பாதலும் மனிதனைத் திருத்துவது முடியாது என்பதையும் அகிலன் இதில் வலியுறுத்துகிறார்.

மனிதன் தவறுசெய்திடக் காரணமான சமுதாய அமைப்பு அடியோடு மாற்றப்படவேண்டும் என்றும் அகிலன் வலியுறுத்துகிறார். "இன்றைய நாட்டில் ஏழைக்கு உணர்ச்சி இருக்கக்கூடாது. அவன் லட்சியக்கனவும் காணக்கூடாது. சோற்றுக்கு வழிகோலாத நாட்டில் லட்சியம் எங்கே உருப்படப் போகிறது? நம் சமுதாயத்தின் தற்போதைய போக்கு நம் அடிப்படைத் தேவைகளைக் கவனிக்கவில்லை. அதை அடியோடு வேரறுத்துவிட்டு நாம் ஒரு புதிய சமுதாயத்தை ஏற்படுத்தவேண்டும்" ('சக்திவேல்', (சுதந்திரப் பறவை), ப.180) என்று வரும் கூற்று இதனைக் காட்டும். மனிதனுக்கு உதவுவதாகவும் அவன் மேன்மையடையத் துணைசெய் வதாகவும், தவறு செய்தவன் திருந்திவாழ ஆதரவு தருவதாகவும் சமுதாய அமைப்பு இருக்கவேண்டும் என்று அகிலன் வலியுறுத்துகிறார். அப்படி இல்லாமல், செல்வந்தர்களுக்குத்

துணைநின்று, ஏழை-எளிய மக்களுக்கு இன்னல் செய்வதாக உள்ள சமுதாய அமைப்பை அடியோடு வேரறுத்து, புதிய சமுதாயம் உருவாக்குவோம் என்று இளைஞன் கூற்றில், இச்சிறுகதையில் அகிலன் காட்டுவது, நடைமுறைக்கு ஏற்றதாக உள்ளது.

தவறு செய்யும் மனிதன், தன் தவற்றை உணர்ந்து திருந்துவதற்கு அவனுக்கு வாய்ப்பளித்து அவன் வாழ உதவும் வண்ணம் சமுதாய அமைப்பும் சட்டதிட்டங்களும் மனிதநேயத்தை அடிப்படையாகக் கொண்டனவாக விளங்கவேண்டும் என்று அகிலன் காட்டுகிறார். தவறு செய்தவன், தன் தவற்றை உணர்ந்து, திருந்த உதவவேண்டும் என்பதைக் காட்டுவதுடன், இறுதிவரையிலும் திருந்தாமல், தொடர்ந்து தவறுகளையும் பிறருக்குத் துன்பம்தரும் தீமைகளையும் செய்துவரும் மாணிக்கம் போன்ற தீயவனைச் 'சித்திரப்பாவை' நாவலில் அகிலன் காட்டுகிறார். மனிதனாக இல்லாமல் அவன் விலங்காக இருப்பதை அவர் காட்டுகிறார். மனிதன் எப்படி இருக்கக்கூடாது என்பதற்கு அவன் எடுத்துக்காட்டாக அமைகிறான். எங்கே போகிறோம் நாவலில், புவனாவின் கூற்றில், "கேவலமான பிராணிகள்; இரண்டுகால் பிராணிகள்... பணத்தாசை பிடித்தலையும் கேவலமான பிராணிகள்" ('எங்கே போகிறோம்', பக்.179, 180) என்று இத்தகையவர்கள் சுட்டப்படுகிறார்கள். மனிதன் எப்படி இருக்கலாகாது என்பதற்கு வரைவிலக்கணமாக அமையும் இவர்கள், பணம், பதவி, அதிகாரம் காரணமாகப் பெரிய மனிதர்களாக உலவுகின்றனர் என்று அகிலன் காட்டுகிறார். தீமையின் ஒட்டுமொத்த வடிவமாக, மனச்சாட்சியைப் பற்றிய கவலையே இன்றி, பிறருக்குத் துன்பம் தரும் செயல்களைத் தொடர்ந்து செய்பவர்களாக இவர்கள் உள்ளனர் என்று அகிலன் காட்டுகிறார். 'தீமையை எதிர்த்துப் போராடு' என்பதை மையச் செய்தியாகப் பல படைப்புக்களில் காட்டும் அகிலன், இத்தகைய கயவர்கள் உள்ள சமுதாய அமைப்பு அடியோடு மாற்றப்படவேண்டும் என்று காட்டுகிறார்.

தவறு செய்வதையே தன் வாழ்க்கையின் அறமாகக் கொண்டு, தன்னுடைய தவறுகளுக்காக வருந்தி, உணர்ந்து திருந்தாமல், மேலும் தவறுகள் செய்பவனை அவனுடைய மனச்சான்றே கொன்றுவிடும் என்பதை அகிலன், 'பூச்சாண்டி' என்னும் சிறுகதையில் காட்டுகிறார். மனிதன் செய்யும்

செயல்கள் நல்லதோ தீயதோ அவை அவனளவில் நின்றுவிட்டால், அவைகளால் ஏற்படும் விளைவுகளும் அவனுடன் நின்றுவிடும். அவ்வாறு இன்றி, அவை பிறரைச் சென்று எட்டுவனவாக அமையுமானால், அவைகளைச் செய்யுமுன், எண்ணிப்பார்த்துச் சீர்தூக்கிச் செய்தல் வேண்டும் என்கிறார் அகிலன். பணம், பதவி, அதிகாரம், அரசியல் என்ற உயர்நிலைகளில் உள்ளவர்கள், வழிகாட்டிகளாக இருப்பவர்கள் தவறு செய்யாமல் இருக்கவேண்டும் என்றும் காட்டுகிறார். தவறுகள் செய்து வழுக்கி விழுந்தவர்களை வழிகாட்டிகளாகக் கொண்ட சமுதாயம் எப்படி உருப்பட முடியும் என்று அகிலன் கேட்கிறார். வாழ்க்கை பற்றிய கூர்த்த மதிப்பீடாகும் இது. அரசியலிலும் பொதுவாழ்விலும் உள்ளவர்கள், தாமும் தீமை செய்யாதவர்களாக, தம்மைச் சார்ந்தவர்களும் தீமை செய்யாதவர்களாக இருக்குமாறு பார்த்துச் செயலாற்ற வேண்டும் என்று அகிலன் வலியுறுத்துகிறார். இதனை, 'எங்கே போகிறோம்' நாவலில், "தீமையைச் சுட்டுப் பொசுக்கும் நெருப்பாகத் தலைவர் இருந்தால்தானே, கடைசித்தொண்டன் வரையில் யோக்கியனாக இருப்பான்" என்று கூறுவதால் ('எங்கே போகிறோம்?' ப.200) அறியலாம். வழிகாட்டும் மூத்த தலைமுறையினர், நெறிகெட்டுப் போய் தாம் வழுக்கிவிழுந்து, தொடர்ந்து தவறுகளைச் செய்வதால், அவர்கள் தவறாக நடந்து காட்டுவதால், இளைய சமுதாயம் கெட்டுப்போகிறது என்றும் அகிலன் காட்டுகிறார். "இதெல்லாம் 'ஜெனரேஷன் காப்' இல்லை' வழிகாட்டும் ஜெனரேஷன் வழுக்கி விழுந்ததனால் ஏற்பட்ட 'மிஸ்உறாப்' இது" என்று புவனாவின் எண்ண ஓட்டத்தில் காட்டப்படுவது ('எங்கே போகிறோம்'? ப.190) இதைப் புலப்படுத்தும்.

தவறு செய்பவர்கள் அறம், சட்டம், மனசாட்சி, கடவுள் என்ற ஏதேனும் ஒன்றிற்காவது அஞ்சி நடக்கவேண்டும் என்று அகிலன் காட்டுகிறார். இதனைச் 'சத்திய ஆவேசம்' என்னும் சிறுகதையில், "நான் என்னத்தை உங்களுக்குச் சொல்லப் போகிறேன்? நீங்க ஊர் உலகத்துக்குப் பயப்படலேன்னாலும், சட்டத்தையும் அரசையும் மதிக்கல்லேன்னாலும், தெய்வம்னு ஒண்ணு இருக்குங்கறதையாவது மறந்திடாதீங்க" ('சத்திய ஆவேசம்,' ப.17) என்று வரும் கூற்று வலியுறுத்தும். இதே கருத்தைப் 'பித்தம் தெளிய மருந்து' என்னும் சிறுகதையில்,

"உலகத்தையே மனிதன் ஏமாற்றிவிடலாம். ஆனால், அவனுடைய உள்ளத்திற்குள் ஒளிந்திருக்கும் சத்திய மூர்த்தியான ஒரே ஒருவனை மட்டும் அவன் ஏமாற்ற முடியாது" ('சகோதரர் அன்றோ?' (பித்தம் தெளிய மருந்து), ப.122) என்று கூறுகிறார். கடவுளை எங்கோ இருப்பவனாக அகிலன் காட்டவில்லை. மனிதனிடமும் அவன் உழைப்பிலும் தன்னுடன் வாழும் சகமனிதர்களிடம் காட்டும் அன்பிலும் கடவுள் உள்ளான் என்று அகிலன் காட்டுகிறார். மனிதனுக்குள் கடவுள் இருக்கையில், அவனைத் தேடி வெளியில் அலைவது ஏன் என்று காட்டுவதுபோல, 'நாதனுள்ளிருக்கையில்' என்னும் சிறுகதையை அகிலன் படைத்துள்ளார். ஒருமனிதன் மற்றொருவன் துயரத்திலும் மகிழ்ச்சியிலும் பங்கேற்றுக் கண்ணீர் உகுப்பதில் வெளிப்படும் அன்பில் கடவுள் இருக்கிறான் என்பதை அக்கதையில் வரும் கதைமாந்தர் ஒருவர் உணர்வதாக அகிலன் காட்டுகிறார். "உருவம் இல்லாத ஒன்று; பெயர் இல்லாத ஒன்று; நிறம் இல்லாத ஒன்று; பணம் இல்லாத ஒன்று அதற்கு உருவம் கொடுத்து, பெயர் கொடுத்து, பொருள் கொடுத்து எப்படியெல்லாம் நம்புகிறார்கள் இந்த மனிதர்கள்" ('சகோதர் அன்றோ?' (நாதனுள்ளிருக்கையில்), ப.64) என்று வரும் கூற்று இதை எடுத்துக்காட்டும். ஒவ்வொரு மனிதனும் தனக்குரிய கடமையைச் சரிவரச்செய்து, பிறரிடம் அன்பு காட்டி, மனிதர்களுக்கு உதவிசெய்து அன்பாக வாழவேண்டும் என்பதை அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார். 'எளிமையான வாழ்க்கையும் உயர்ந்த சிந்தனையுமாக மனிதன் வாழவேண்டும்' என்னும் காந்தியக் கொள்கையை அகிலன் தம் படைப்புக்களில் மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறார். பெரும்பாலும் அவர் படைத்துள்ள கதைமாந்தர்கள் பலரும் எளிமையான வாழ்க்கை வாழ்பவர்களாக, தன் தேவைகளை மிகவும் குறைத்துக்கொண்டு, எளிமையாக வாழ்பவர்களாக உள்ளனர். அதே நேரத்தில் சமூகமாற்றம், மனிதகுல மேன்மை, இவைகளுக்கு எதிரான தீமைகளை எதிர்த்துப் போராடும் பண்பு என்னும் உயர்ந்த சிந்தனை உடையவர்களாக அவர்கள் உள்ளனர். எளிமையான வாழ்வும் உயர்ந்த சிந்தனையுமாகப் படைப்பாளர் அகிலன் தம் வாழ்நாள் நெடுகிலும் வாழ்ந்தார் என்பது இங்கு அறியத்தக்கது.

அறம் ஒருநாளும் தவறாது; சத்தியம் ஒருபோதும் பொய்ப்பதோ சாவதோ இல்லை என்பதை அகிலன்

வலியுறுத்தினார். "'சத்தியம் செத்துப் போய்க்கிட்டிருக்கு' என்று கூறிய ஒருவனிடம், "சொல்லாதே: சத்தியம் சாகாது; ஒருகாலும் சாகாது" ('சகோதரர் அன்றோ?' (தெய்வத்தின்-குரல்), ப.97) என்று கிழவி மறுமொழி கூறியதாக அகிலன் படைத்துள்ளது இதைக் காட்டும். சத்தியத்தில் அவருக்கிருந்த அழுத்தமான பிடிப்பு இதில் வெளிப்படுகிறது. காந்திய நெறியாளரான அகிலன், சத்தியம், அகிம்சை போன்ற கொள்கையில் ஆழ்ந்த பிடிப்பும் தீவிர ஈடுபாடும் கொண்டவராக விளங்கியதிலும், அவைகளை வாழ்க்கையில் அனைவரும் பின்பற்றவேண்டிய உயர்மதிப்புக்களாகத் தம் படைப்புக்களில் வெளியிட்டதிலும் வியப்பில்லை.

மனிதர்கள் சொல்லும் செயலும் ஒன்றெனக்கொண்டு வாழ்பவராக இருக்கவேண்டும் என்பதை அகிலன் தம் படைப்புக்களில் வெளியிட்டுள்ளார். பிறருக்கு வழிகாட்டும் மனிதர்கள் சிறந்தவர்களாக, முன்மாதிரிகளாக, சொல்லும் செயலும் ஒன்றுபோல வாழ்பவர்களாக இருக்கவேண்டும் என்பதை 'மந்தையில் ஒரு மனிதன்', 'கையிலும் 'பில்'லிலும்' ஆகிய சிறுகதைகளில் வரும் ஆசிரியர்கள் படைப்பில் அகிலன் வலியுறுத்தியுள்ளார். இதனை, "வாழ்க்கை குறிக்கோள் உள்ளதாக இருக்கவேண்டும் என்று மாணவர்களுக்கு நாம்தானே சொல்லுகிறோம்? நம்மால் வாழ்ந்துகாட்ட முடியாததைச் சொல்லி அவர்களை ஏன் நாம் ஏமாற்ற வேண்டும்?" ('எரிமலை' (மந்தையில் ஒரு மனிதன்), ப.149) என்று வரும் கூற்று புலப்படுத்தும். மாறாகப் பணம் சேர்ப்பதையே குறிக்கோளாகக் கொண்டு, தான் வாழ்வதற்காகப் பிறரை வாட்டித் துன்புறுத்துகின்றவர்கள், சமூகத்தில் வழிகாட்டிகளாக மாறக்கூடாது என்று அகிலன் வலியுறுத்துகிறார். 'காந்தி வந்தார்' என்னும் சிறுகதையில், "வயிற்றில் அடிப்பதும் பட்டினியால் கொல்லுவதும் வன்முறை இல்லையா? மனச்சாட்சி இல்லாத திருடர்கள் வழிகாட்டிகளானால், சத்தியத்துக்கு அங்கே வேலை என்ன?" ('எரிமலை (காந்தி வந்தார்), ப.82) என்று கூறுவதால் அறியலாம். 'எங்கே போகிறோம்?' நாவலிலும், 'தலைமை ஏற்பவர்கள், குறைபாடுகளும் தவறுகளும் அயோக்கியத் தனங்களும் உடையவர்களாக இருந்தால், நாடு எவ்வாறு உருப்படும்' என்ற வினாவை அகிலன் முதன்மைப்படுத்தியுள்ளதால் அறியலாம். இதனை, நாவலின் முன்னுரையில்,

"கயவர்களை வழிகாட்டிகளாக்க் கொள்ளும் சமுதாயம் உருப்படுமா என்பதுதான் நான் இந்த நாவலில் எழுப்பியுள்ள கேள்வி" ('எங்கே போகிறோம்?', முன்னுரை, ப.5) என்று அவர் கூறுவதால் அறியலாம்.

மனிதன் உழைத்துப்பிழைக்க வேண்டும் என்று அகிலன் வலியுறுத்துகிறார். 'காட்டுக் குரங்கு' என்னும் சிறுகதையில், "அந்த மிருகக் குரங்கு திரும்பவும் தான் வசித்த காட்டிற்கே பாய்ந்தோடியது-தன் கையால் உழைத்து உணவுதேட" உழைப்பவனையும் அவனுடைய உழைப்பையும் அவனுக்குத் துணைசெய்யும் விலங்குகள், கருவிகள் ஆகியவைகளையும் போற்றவும் நன்றி பாராட்டவும் வேண்டும் என்கிறார் அகிலன். உழைப்பிற்கு நன்றி கூறும் வகையில் பொங்கல் திருநாள் உள்ளது என்பதையும் அதற்கு வாழ்த்து அனுப்பும் சிறுசெயலில்கூடத் தங்கள் பண்பாட்டினையும் உழைப்பை மதித்துப்போற்றி, நன்றி செலுத்துவதையும் வெளிப்படுத்து கின்றனர் என்று பண்பாட்டுச் சிறப்பை அகிலன் வெளிப்படுத்துகிறார். இதற்கு மாறாகத் திரைப்பட நடிகர், நடிகையர் படங்கள் அச்சிட்ட வாழ்த்து அட்டைகளை அனுப்பும் அளவிற்கு வாழ்வில் பண்பாட்டு இடைவெளி ஏற்பட்டுள்ள அவலத்தைக் கண்டு தாய் சீறுவதாகப் 'பொங்கலோ பொங்கல்' சிறுகதையில் அகிலன் காட்டுகிறார். "இந்தப் படத்துக்குப் பதிலா, கறவை மாட்டுப் படத்தையோ காளைமாட்டுப் படத்தையோ நீ வாங்கி இருந்தா, நீ சோத்திலே உப்புப்போட்டு திங்கிறதுக்கு அது நியாயமா இருந்திருக்கும்... குடியானவனையும் தொழிலாளியையும் வருஷத்திலே ஒரு நாளாவது மனுஷன் நினைச்சுப் பாக்கிறதுக்கு ஏற்பட்ட பொங்கல்டா இது" (சகோதரர் அன்றோ? (பொங்கலோ பொங்கல்), ப.50) என்று வரும் கூற்று இதனை வலியுறுத்தும். இதே கருத்தை, அகிலன் 'சித்திரப்பாவை' நாவலிலும், வேறு சில கட்டுரைகளிலும் ('பண்பாட்டுக்கு ஓர் இயக்கம்' - தினமணி - 14.01.1971; 'போரும் பொங்கலும்' தினத்தந்தி) கூறுவது, இக்கருத்தை அவர் மீண்டும் மீண்டும் வலியுறுத்து வதைக் காட்டும். "உழவுக்கும் தொழிலுக்குமாகக் கரும்போடு நமது முன்னோர்கள் கொண்டாடிய பொங்கல் கலைவிழாவில், அவர்கள் தங்களுக்காக உழைத்த மாட்டைக்கூட மறக்கவில்லை... விழாவுக்குப் புறம்பான படங்களை வெளியிட்டு அவமானப்படுத்துகிறோம். அலங்கோலமான

ஆடைகளோடு நடிகைகளைப் பல கோணங்களில் நிறுத்திவைத்துப் புகைப்படங்கள் எடுத்து வாழ்த்துக்களோடு போடும் புதுமைப்புரட்சி, உலகத்தில் வேறெங்கும் நடக்கவில்லை. உழவனை இப்படி அவமானப்படுத்தும் ஒரு நாட்டில் ஏன் உணவுப்பஞ்சம் வராது" ('சித்திரப்பாவை', ப.424) என்று சித்திரப்பாவை நாவலில் வலிமையாக இக்கருத்தை முன்வைக்கிறார். ஏழைகளாக, இருக்கிற விவசாயிகளான உழைப்பாளிகளை மறந்துவிட்டு, செல்வம் குவித்துள்ள திரைப்பட நடிகையர் படங்களைப் பாலுணர்வுத் தூண்டலுக்காக வியாபாரமாக ஆக்கும் சுவையுணர்வுச் சீரழிவை அகிலன் எடுத்துக்காட்டுகிறார். மனிதனும் அவனுடைய உழைப்பும் போற்றப்பட வேண்டும் என்று அகிலன் காட்டுகிறார். திரைப்பட மோகத்திற்கு அடிமையாகி யுள்ள போக்கு மாறவேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார்.

குடும்ப அமைப்பின் கட்டுக்கோப்பு குலையாமல் இருப்பதில்தான் வாழ்க்கை செம்மை பெறுகிறது. அடிப்படை நாகரிகம், பண்பாடு என்பவற்றைக் கற்றுத்தரும் இடம் குடும்பமே. குடும்பத்தைக் கோயிலாக அமைக்கும் போக்கில் வாழ்க்கை அமையவேண்டும் என்கிறார் அகிலன். எளிய வாழ்க்கையும் உயர்ந்த சிந்தனையும் கொண்டு அன்பின் அடித்தளத்தில் குடும்பவாழ்க்கை அமையவேண்டும் என்கிறார் அகிலன். "வாழ்க்கை இங்கேதான் இருக்கிறது; அழியாத அன்பின் அடிப்படையில்" ('வாழ்வுஎங்கே?,' ப.399) என்று வரும் பகுதி இதைக் காட்டும். வெளி ஆடம்பரத்தை விடவும் நெடுங்காலம் நிலைபெற்றிட உதவும் தன்மை கவனத்தில் கொள்ளப்படவேண்டும் என்று ஆடை தேர்வுசெய்வதில் பின்பற்றப்படவேண்டும் என்று 'மின்னுவ தெல்லாம்' சிறுகதையில் அகிலன் கூறுவது, வாழ்க்கை நோக்கிற்கும் ஏற்றதாகும். உழைப்பிற்கு முதன்மை தரும் போக்கும் நீண்டகாலம் நிலைபெற உழைத்திடும் பாங்கும் வெளி ஆடம்பரத்தைவிடவும் எளிமையைப் போற்றும் பண்பும் வாழ்வில் நாம் பின்பற்ற வேண்டிய பண்புகள் என அகிலன் வலியுறுத்துகிறார். ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி, விட்டுக்கொடுத்து, ஒருவர் மற்றவர் உரிமையை மதித்தும் போற்றியும் வாழவேண்டும் என்று அகிலன் வலியுறுத்துகிறார். சட்டதிட்டமும் சமுதாயக் கட்டுப்பாடும் மனிதனை வாழவைத்து, அவனைக் குடும்ப வாழ்வில் சிறக்கச் செய்ய

உதவவேண்டும். இவ்வாறன்றி, அவை மனிதனுக்கும் அவன் நல்வாழ்விற்கும் எதிராக இருப்பின், அவை மாற்றியமைக்கப்படவேண்டும்; இல்லையேல் அவற்றை நாம் விட்டுவிடலாம் என்கிறார் அகிலன். இருந்து வாழ்வதற்கு ஏற்ற சூழல் இல்லாதநிலையில், கணவன் மிருகமாக மாறிவிட்ட சூழலில், அவனிடமிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, மனைவி வெளியேறுவதைச் 'சித்திரப்பாவை' நாவலில் அகிலன் காட்டுகிறார்.

மனிதன் வாழ்வதற்குப் பொருள் தேவை. அந்த அளவில்தான் பணத்திற்கு மதிப்புத் தரவேண்டும். மனிதனை அடிமைப்படுத்துவதாகப் பணம் இருக்கக்கூடாது என்று அகிலன் வலியுறுத்துகிறார். "பணத்தினால் மட்டும் உலகத்தில் வாழ முடியாது" என்று 'ஆத்ம சோதனை' சிறுகதையில் ('ஒருவேளைச்சோறு' (ஆத்ம சோதனை), ப.27) அகிலன் கூறுவது இதைக் காட்டும். எளிமையாகவும் செம்மையாகவும் பிறர் போற்றத்தக்க முறையில் வாழ்வதே உயரிய வாழ்க்கை என அகிலன் வலியுறுத்துகிறார். "அற்பருக்கு ஒரு நாளும் வாழ்வு வராது. இந்தப் பிறவியிலே அது அவர்களுக்கு வரவே வராது. காசுதான் வரும். காசு வேறே; வாழ்வு வேறே" என்று 'சிறியோர் சேர்த்த சில்லறை' கதையில் வரும் கூற்றால் ('நெல்லூர் அரிசி' (சிறியோர் சேர்த்த சில்லறை), ப.99) அறியலாம். காசு வேறு; வாழ்வு வேறு என்பதைச் 'சித்திரப்பாவை', 'எங்கே போகிறோம்? ஆகிய நாவல்களிலும் அகிலன் வலியுறுத்து கிறார். திருமணம் பேசும்போது, பெண்ணுக்கோ பிள்ளைக்கோ வரதட்சணை என்ற பெயரில் பணம் கொடுக்கவோ, வாங்கவோ கூடாது என்னும் கொள்கையை அவர் பல படைப்புக்களில் வலியுறுத்துகிறார். எளிமையாகவும் செம்மையாகவும் வாழப்பழகுதலே வாழ்வின் குறிக்கோள் என்று அகிலன் வலியுறுத்துகிறார். "பெண்களின் கல்யாணத் துக்குக் காலணா காசு கொடுக்கப் போவதும் இல்லை. பிள்ளைக்கு வாங்கப்போவதும் இல்லை. சாதி, குலம், கோத்திரம் கிடக்கட்டும் நல்லவர்கள் எங்கும் இல்லாமலா போகிறார்கள்" ('வழிபிறந்தது', ப.160) என்று 'வழி பிறந்தது' சிறுகதையில் வரும் கூற்றால் அறியலாம். 'எங்கே போகிறோம்' நாவலிலும் வரதட்சணை திருமணத்தில் இடம் பெறுவதை எதிர்க்கும் கருத்தை அகிலன் முன்வைக்கிறார். எளிய வாழ்க்கை என்னும் கருத்தையே அவர் வலியுறுத்துகிறார்.

வாழ்க்கை இப்போதுள்ள நிலையிலிருந்து மேன்மேலும் உயர்வதாக அமையவேண்டும் எனவும், அதற்கு உதவுமாறு சமூக அமைப்பும் சட்டதிட்டமும், திரைப்படம், பத்திரிகை போன்ற தொடர்புக் கருவிகளும் இருக்கவேண்டும் எனவும் அகிலன் வலியுறுத்துகிறார். மக்களின் சிந்தனையாற்றலைத் தூண்டி, அவர்களை முன்னேற்ற இவை உதவவேண்டும் என்கிறார் அவர். மனிதனுடைய மேம்பாட்டிற்கு எதிராகவும் அவனுடைய வாழ்க்கைப் போக்கிற்கு உதவாமலும் இருக்கும் பண்பு எத்துறையில், எவ்வடிவில் இருந்தாலும் அதை எதிர்த்துப் போராடவேண்டும் என்கிறார் அகிலன். தீமையைத் தீமை என்று தெரிந்தும் அதைக் கண்டு ஒதுங்கிச் செல்லக்கூடாது எனவும், தீமையை எதிர்த்துப் போராடும் பண்பு மனிதர்களிடம் வளரவேண்டும் எனவும் அகிலன் வலியுறுத்துகிறார். வாழ்க்கை போராட்டமாக இருப்பினும், எதிர்காலம் சிறப்பானதாக அமையும் என்னும் நம்பிக்கைக் குரல் அவருடைய படைப்புக்களில் இடைவிடாமல் கேட்கிறது. நல்ல நிலை எய்தவேண்டும் என்னும் குறிக்கோள் நெறியை அவர் வலியுறுத்தினாலும், நடப்பியல் நெறியில் நின்று, அதை விமர்சனம் செய்கிறார் அவர். காந்திய நெறியாளரான அவர் போராடும் பண்பை வலியுறுத்துகிறார். வாழ்க்கையைச் செம்மையாக வாழ்ந்து, மேன்மைநிலை எய்த இலக்கியப் படைப்புக்கள் உதவவேண்டும் என்பதை அவர் எடுத்துரைக்கிறார். அவருடைய படைப்புக்கள் அவ்வாறு அமைந்து உள்ளதில் வியப்பு இல்லை.

துணைநூற்பட்டியல்

I. அகிலன் படைப்புக்கள்

1. சிறுகதைகள்

1. அகிலன், சக்திவேல், சென்னை, பாரிபுத்தகப் பண்ணை, 1965, நான்காம் பதிப்பு.

2. அகிலன், நிலவினிலே, சென்னை, பாரிபுத்தகப் பண்ணை, 1976, ஏழாம் பதிப்பு.

3. அகிலன், ஆண் – பெண், சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 1966. நான்காம் பாதிப்பு.

4. அகிலன், அமராவதிக்கரையில், சென்னை, பாரி புத்தகப்பண்ணை, 1966, ஆறாம் பதிப்பு.

5. அகிலன், செங்கரும்பு, சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 1965, இரண்டாம் பதிப்பு. சாந்தி, புதுக்கோட்டை, பழனி பிரசுரம், 1956, முதற்பதிப்பு. (இப்பெயரில் ஒரு பதிப்புத்தான் வந்தது. 'முப்பது இரவுகள்', 'குலதெய்வம்' ஆகிய இரு சிறுகதை களும் குழந்தை சிரித்தது தொகுப்பில் இடம்பெற்றன. 'இந்திரனுக்கு விமோ சனம்', 'சாந்தி' இரு சிறுகதைகளும் பசியும் ருசியும் தொகுப்பில் இடம் பெற்றன.)

6. அகிலன், வழிபிறந்தது, சென்னை, பாரி புத்தகப்பண்ணை, 1965, மூன்றாம் பதிப்பு.

7. அகிலன், மின்னுவதெல்லாம், சென்னை, பாரி புத்தகப்பண்ணை, 1996, இரண்டாம் பதிப்பு.

8. அகிலன், குழந்தை சிரித்தது, சென்னை, பாரி புத்தகப்பண்ணை, 1965, இரண்டாம் பதிப்பு.

9. அகிலன், சகோதரர் அன்றோ?, சென்னை. தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 1967, இரண்டாம் பதிப்பு.

10. அகிலன், ஒருவேளைச்சோறு, சென்னை, தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம், 1967, முதற் பதிப்பு.

11. அகிலன், நெல்லூர் அரிசி, சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 1971, இரண்டாம் பதிப்பு.

12. அகிலன், எரிமலை, சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 1970, முதற் பதிப்பு.

13. அகிலன், சத்திய ஆவேசம், சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 1974, முதற் பதிப்பு.

14. அகிலன், பசியும் ருசியும், சென்னை, பாரி புத்தகப்பண்ணை, 1974, முதற் பதிப்பு.

15. அகிலன், விடுதலை, சென்னை, பாரி புத்தகப்பண்ணை, 1977, முதற் பதிப்பு.

16. அகிலன், வேலியும் பயிரும், சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 1979, முதற் பதிப்பு.

17. அகிலன், ஊர்வலம், சென்னை, தாகம், 1995, முதற்பதிப்பு.

2. நாவல்கள்

அகிலன், மங்கிய நிலவு, புதுக்கோட்டை, கலைவாணி கழகம், 1944, (இந்த நாவல் பின்னர் இன்ப நினைவு என்ற பெயரில் வெளியானது).

1. அகிலன், பெண், சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 1978, ஆறாம் பதிப்பு.

2. அகிலன், இன்ப நினைவு, சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 1969, எட்டாம் பதிப்பு.

3. அகிலன், துணைவி, சென்னை, அமுத நிலையம், 1966, நான்காம் பதிப்பு.

4. அகிலன், சிநேகிதி, சென்னை, பாரிபுத்தகப் பண்ணை, 1969, ஆறாம் பதிப்பு.

5. அகிலன், சந்திப்பு, சென்னை, பாரிபுத்தகப் பண்ணை, 1972, நான்காம் பதிப்பு.

6. அகிலன், நெஞ்சின் அலைகள், சென்னை, பாரிபுத்தகப்பண்ணை, 1971, ஐந்தாம் பதிப்பு.

7. அகிலன், செல்வம், சோனா, ஆர்வி. அவளுக்கு, சென்னை, பாரிபுத்தகப் பண்ணை, 1972, ஐந்தாம் பதிப்பு.

8. அகிலன், வாழ்வு எங்கே?, சென்னை, பாரிபுத்தகப் பண்ணை, 1972, நான்காம் பதிப்பு.

9. அகிலன், பாவை விளக்கு, புதுக்கோட்டை, பழனி பிரசுரம், 1962, இரண்டாம் பதிப்பு.

10. அகிலன், வேங்கையின் மைந்தன், சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 1972, நான்காம் பதிப்பு.

11. அகிலன், புதுவெள்ளம், சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 1971, மூன்றாம் பதிப்பு.

12. அகிலன், பொன்மலர், சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 1970, மூன்றாம் பதிப்பு.

13. அகிலன், கயல்விழி, சென்னை, பாரிபுத்தகப் பண்ணை, 1968, இரண்டாம் பதிப்பு.

14. அகிலன், வெற்றித்திருநகர், சென்னை, பாரிபுத்தகப் பண்ணை, 1971, இரண்டாம் பதிப்பு.

15. அகிலன், சித்திரப்பாவை, சென்னை, பாரிபுத்தகப் பண்ணை, 1971, இரண்டாம் பதிப்பு,

16. அகிலன், கொள்ளைக்காரன், சென்னை, பாரிபுத்தகப் பண்ணை, 1973, இரண்டாம் பதிப்பு.

17. அகிலன், எங்கே போகிறோம், சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 1973, முதற் பதிப்பு.

18. அகிலன், பால்மரக்காட்டினிலே, சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 1977, முதற்பதிப்பு.

19. அகிலன், வானமா? பூமியா?, சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 1983, முதற்பதிப்பு.

3. நாடகம்

1. அகிலன், வாழ்வில் இன்பம், சென்னை, பாரிபுத்தகப் பண்ணை, 1973, நான்காம் பதிப்பு.

4. சிறுவர் இலக்கியம்

1. அகிலன், தங்க நகரம், புதுக்கோட்டை, 1950, முதற் பதிப்பு.

2. அகிலன், சிவப்பு விளக்கு, புதுக்கோட்டை, தமிழ் நிலையம், 1955, முதற் பதிப்பு.

3. அகிலன், கண்ணான கண்ணன், புதுக்கோட்டை, தமிழ் நிலையம், 1958, முதற் பதிப்பு.

4. அகிலன், நல்ல பையன், புதுக்கோட்டை, தமிழ் நிலையம், 1958, முதற் பதிப்பு.

5. கட்டுரை நூற்கள்

1. அகிலன், கலையும் வயிறும், பெண்ணாடம், புதுமைப் பிரசுரம், 1956, முதற் பதிப்பு.

2. அகிலன், இளைஞருக்கு, சென்னை, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி, 1962, முதற்பதிப்பு.

3. அகிலன், கதைக்கலை, சென்னை, பாரிப்புத்தகப் பண்ணை, 1972, முதற்பதிப்பு.

4. அகிலன், சோவியத் நாட்டில், சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 1975 முதற் பதிப்பு.

5. அகிலன், எழுத்தும் வாழ்க்கையும், சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 1978, முதற் பதிப்பு.

6. அகிலன், வெற்றியின் ரகசியங்கள், சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 1979, முதற் பதிப்பு.

7. அகிலன், புதிய விழிப்பு, சென்னை, தாகம், 1986.

8. அகிலன், நான் கண்ட ரஷ்யா, பாரி புத்தகப் பண்ணை, சென்னை, 1980 முதற் பதிப்பு.

6. மொழிபெயர்ப்பு

1. அகிலன், தாகம், பெண்ணாட்டம், புதுமைப்பிரசுரம், 1953, முதற்பதிப்பு.

2. அகிலன், எழுதாதகதை, திருச்சி, புத்தர் பண்ணை, 1954, முதற் பதிப்பு.

3. அகிலன், முழுநிலவு, புதுக்கோட்டை, பழனி பிரசுரம், 1957, இரண்டாம் பதிப்பு.

4. அகிலன், மாபசான் சிறுகதைகள், சென்னை, பாரி புத்தகப் பண்ணை, 1978, முதற் பதிப்பு.

II. பிற நூல்கள்

1. ராமலிங்கம், மா (எழில் முதல்வன்), அகிலனின் கலையும் கருத்தும், சென்னை, தமிழ்ப்புத்தகாலயம், 1974, முதற் பதிப்பு.

2. முத்துச்சண்முகன், பெரியகருப்பன், இராம. (ப.ஆ.) அகிலன் கருத்தரங்க ஆய்வுரைகள் மதுரை, மதுரைப் பல்கலைக் கழகம், 1976, முதற் பதிப்பு.

3. வீராசாமி, தா. வே., கல்கி – அகிலன் படைப்புக்கலை, சென்னை, தமிழ்ப்புத்தகாலயம், 1977.

4. வேங்கடராமன், சு., அகிலன் ஆய்வடங்கல், மதுரை, மதுரைப் பல்கலைக்கழகம், 1974, முதற்பதிப்பு.

5. வேங்கடராமன், சு., அகிலன் சிறுகதைகள் ஒரு திறனாய்வு, சென்னை, தமிழ்ப்புத்தகலாயம், 1977, முதற் பதிப்பு.

III. கட்டுரைகள்

1. தண்டாயுதம், இரா., "அகிலனின் பாவை விளக்கு" தமிழ் நாவல்கள் – நாவல்விழாக் கருத்–துரைகள். சென்னை, தமிழ்ப் புத்தகாலயம், பக்.85 – 97, 1966, முதற்பதிப்பு.

2. தண்டாயுதம், இரா., "சித்திரப்பாவை", வளரும் தமிழ் இலக்கியம், பக், 145 – 154 அகிலன், ராஜதுரை, ரா. (ப. ஆ.), சென்னை, கிறித்துவ இலக்கியச் சங்கம், 1970, முதற்பதிப்பு.

3. வேங்கடராமன், சு., "பாவை விளக்கு", தமிழ்நாவல் 50 பார்வைகள், இராஜசேகரன், இரா (ப. ஆ.) மாயூரம் தெய்வத்தமிழ்மன்றம், பக். 72 – 74, 1978, முதற்பதிப்பு.

4. வேங்கடராமன், சு., "பாவை விளக்கு", நாவல் வளர்ச்சி, மோகன், இரா. (ப.ஆ.) பக்.228 – 238, சிதம்பரம், மணிவாசகர் பதிப்பகம், 1989.

5. வேங்கடராமன், சு., "பாவை விளக்கு", தினமணி, மதிப்புரை, சென்னை, 18.8.1990.

6. வேங்கடராமன், சு., "அகிலனின் நாவல்களில் இயல் தலைப்பு", வையை மலர் 5, முத்துச் சண்முகன், (ப.ஆ.) பக்.317 – 329, மதுரை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், 1980.

7. வேங்கடராமன், சு., "அகிலன் சிறுகதைகளில் மனிதன்" புலமை, சென்னை, 1975.

8. வேங்கடராமன், சு., "அகிலன் சிறுகதைகளில் மரணம்", பரல்கள்–1, பக்.41 – 52, இராமசுவாமி, மு. (ப.ஆ.), மதுரை, மதுரை காமராசர் பல்கலைக்ழகத் தமிழ் ஆய்வாளர் மன்றம், 1975.

9. வேங்கடராமன், சு., "அகிலனின் சிறுகதைக்கலை", தமிழ்முரசு, ப.8, சிங்கப்பூர் 23.1.1977.

10. வேங்கடராமன், சு., "காந்தியக் கலைஞர் அகிலன்", சுதேசமித்திரன், ப.4., சென்னை, 14.11.1976.

11. வேங்கடராமன், சு., "அகிலனின் கலைக்கொள்கையும் அவர் படைப்புக்களும்", தினமலர் ப.2. சென்னை, 27.11.1976.

12. வேங்கடராமன், சு., "அகிலன் நாவல்களில் சமுதாய மாற்றம்", திருவனந்தபுரம், ஒப்பியல் கழகம் – மலையாளத்துறை, கேரளப் பல்கலைக்கழகம், 'விடுதலைக்குப்பின் வெளியான தென்னிந்திய நாவல்களில் சமுதாய மாற்றம்' – கருத்தரங்கு (அச்சிடப்படாத கட்டுரை) டிசம்பர் 16, 17. 1989.

IV. ஆய்வேடுகள் (அச்சிடப் பெறாதவை)

1. சண்முகசுந்தரம், வெ. ப., அகிலனின் பாவைவிளக்கு – ஒரு திறனாய்வு, மதுரை, மதுரைப் பல்கலைக் கழகம், எம்.ஏ. பட்டத்திற்காக அளிக்கப் பெற்ற ஆய்வேடு, 1972.

2. வாசுகி ஜெயரத்னம், அகிலன் படைப்புக்களில் பெண்கள், கொடைக்கானல், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், பிஎச்.டி., பட்டத்திற்கு அளிக்கப்பெற்ற ஆய்வேடு, 1993.

அகிலன் (1922 – 1988) காந்திய நெறியில் ஆழ்ந்த பிடிப்பும் ஈடுபாடும் கொண்டவர். காந்தியக் கொள்கைகளைத் தம் படைப்புக்களில் வலியுறுத்தினார். நாவல், சிறுகதை, நாடகம், சிறுவர் இலக்கியம், கட்டுரை, மொழிபெயர்ப்பு, தன்முன்னேற்றச் சிந்தனைநூல் என்ற பல்வேறு துறைகளில் நூல்களை படைத்துள்ளார் அகிலன். மனிதகுலமேன்மை, சமூக மாற்றம், பெண்விடுதலை ஆகியவற்றைத் தம் படைப்புக்களில் அகிலன் வலியுறுத்தினார். படைப்பிலக்கியங்களுடன் பல்வேறு பயனுள்ள ஆக்கங்களையும் அவர் தமிழுக்குத் தந்துள்ளார்.

இந்நூலாசிரியர் டாக்டர் சு. வேங்கடராமன் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் தமிழியற்புலத்தில் இக்கால இலக்கியத் துறையில் பேராசிரியராகவும், துறைத் தலைவராகவும் தமிழியற் புலத்தின் தலைவர் மற்றும் ஒருங்கிணைப்பாளராகவும் பணிபுரிகிறார். முப்பது நூல்களை இவர் எழுதியுள்ளார். அகிலன் சிறுகதைகளில் ஆய்வு செய்து டாக்டர் பட்டம் பெற்றவர். சாகித்திய அக்காதெமியின் இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் வ.ரா. (வ. ராமசாமி), அ. மாதவையா ஆகிய நூல்களை இவர் ஏற்கனவே எழுதியுள்ளார்.

Akilon (Tamil) **Rs.25**
ISBN 81-260-8030-X